
Registered as a Newspaper

தரமான
உதிரிபாகங்களைக்
கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்


# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50


PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

மலை: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ மார்கழி மீ 09 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ. அவ்வல் பிறை 14 (24-12-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 37

## ★ வடபகுதிக்கான மின்சார விநியோகம் 10 நாட்களில் சீராகும்?

### திருத்த வேலைகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், டிசம்பர். 24

வடபகுதிக்கான மின்சார விநியோகம் இன்னும் பத்து நாட்களில் சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹபரணை, அனுராதபுரம் பகுதிகளில் தடைப்பட்டு இருந்த திருத்த வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியதை அடுத்தே மின் விநியோகம் பத்து நாட்களில் வழமைக்குத் திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருத்த வேலைகள் ஆரம்பமானதை அடுத்து மதவாச்சிக்கு அருகிலும் மின்சாரத்தை விநியோகிப்பதில் தடங்கல் ஏற்பட்டிருப்பது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஹபரணைக்கும் அநுராதபுரத்திற்கும் இடையில் ஐந்து மின் கோபுரங்களும்—

ஹபரணைக்கும் மாத்தளைக்கும் இடையில் இரண்டு மின் கோபுரங்களும் சேதமாக்கப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே.

தீவிரவாதிகளின் இந்த நாசகார நடவடிக்கையினால் வடபகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த ஒரு மாத காலமாகத் தடைப்பட்டிருக்கிறது.

இந்த மின்கோபுரங்களை மீள அமைத்து மின் விநியோகத்தைச் சீராக்குவதற்கு இலங்கை மின்சார சபை ஊழியர்கள் உடனடியாக முயற்சி எடுத்த போதிலும்—

ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை அரச ஊழியர்கள் வேலைக்குச் செல்லக்கூடாது என தென்பகுதித் தீவிரவாதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நீர்வேலியில் கேட்ட வேட்டு!

நீர்வேலிப் பகுதியில் நேற்று மாலை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதனால் இப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (ஒ)

### அவசரகாலச் சட்டம் 15 ஆம் திகதி முதல் நீக்கம்

#### கைதானோர் விடுதலையாவர்

கொழும்பு, டிச.24

எதிர்வரும் 15 ஆம் திகதி காலாவதியாகும் அவசரகாலச் சட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படமாட்டாது.

அமைச்சரவை இப்படி முடிவு செய்திருப்பதாக நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இதனை அறிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டுமாயின் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் இதற்காக விஷேசமாக கூட்டப்பட வேண்டும். அதைத் தவிர்ப்பதற்காகவும்-

நாட்டின் நிலைமையில் அபிவிருத்தி தென்படுவதாலுமே-

அரசு அவசர காலச் சட்டத்தைப் புதுப்பிப்பது இல்லை என்று தீர்மானித்துள்ளது.

ஜே.வி.பி இதனைப் பயன்படுத்திப் பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வரும் என்று நம்புகின்றேன்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சாதாரண சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருந்தால் மட்டும் அவர்களுக்கு எதிராக சாதாரண சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

அவசரகால சட்டம் காலாவதியாவதற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம் டிச 24

யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஏழு மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

உரிமையாளர் தமது மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு கடைக்குள் சென்றுவிட்டுத் திரும்பியபோது மோட்டார் சைக்கிள் காணாமல் போய்விட்டதாம். (ஒ-10)

### 112 ஆவது பிறந்தநாளை கொண்டாடிய மூதாட்டி!

ஒஸ்லோ, டிச 23

உலகின் வயது முதிர்ந்தபெண் ஒருவர் 112 ஆவது பிறந்த தினத்தைக் கடந்த புதன்கிழமை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கொண்டாடினார்.

மாரென்போலேரோர்ப் என்ற இப்பெண்ணை உலகின் வயது கூடிய பெண் என 1989 கின்னஸ் சாதனைப் புத்தகம் பதிவு செய்திருக்கிறது.

சிறியமெலிந்த தோற்றமுடைய இப்பெண் பல வருடங்களாக ஆஸ்பத்திரியில் இருந்து வருகிறார்.

அவர் 1876 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி பிறந்தார். (உ-எ)

### வடக்கு, கிழக்கில் ரூ.150 கோடியில் மறுவாழ்வுத் திட்டம்

கொழும்பு டிச 24

வடக்கு - கிழக்கு மாகாண சபை வருகிற மார்ச் மாதத்தில் இருந்து 150 கோடி ரூபா செலவில் மறுவாழ்வுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் மறுவாழ்வுத்துறை, விவசாய அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் இதனைத் தெரிவித்தார் என்று இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

இச் செய்தியின்படி, இத் திட்டத்துக்கு இந்தியா முதலில் 25 கோடி ரூபா நிதி உதவி வழங்கும்.

இலங்கையும், இந்தியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக் கழகத்தில் மாணவர் அமைப்பை உருவாக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச 24

யாழ். பல்கலைக்கழகத்தில் சட்ட பூர்வமான மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

இந்த மாணவர் அமைப்பில் மருத்துவ பீடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 11 பேரும், விஞ்ஞான பீடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 13 பேரும், கலைப் பீடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 13 பேரும் அங்கத்துவம் வகிப்பார்கள்.

பல்கலைக்கழக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

பிரஸ்தாப மாணவர் அமைப்பை உருவாக்குவதற்காக ஒவ்வொரு பீடத்திலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வருகின்றன.

தெரிவு செய்யப்படும் மாணவப் பிரதிநிதிகளில் இருந்தே தலைவர், செயலாளர், பொருளா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### எரிபொருளும் அரிசியும் நேற்று ரயிலில் வந்தன

யாழ்ப்பாணம் டிச 24

யாழ் மாவட்டத்திற்கான அரிசி எரிபொருள் என்பன நேற்று ரயிலில் வந்து சேர்ந்தன.

13 வகன்களில் 241 தொன் அரிசியும் 45 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய், 45 ஆயிரம் லீற்றர் டீசல், 45 ஆயிரம் லீற்றர் பெற்றோல் என்பனவும், இலங்கை மின்சார சபைக்கான 90 ஆயிரம் லீற்றர் ஹெவி டீசலும் நேற்று வந்து சேர்ந்தன. (உ-ஒ-5)

### வ.பி போ.சபையின் யாழ் — கொழும்பு பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம் டிச 24

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்—கொழும்பு பஸ் சேவைகள் நேற்றுமுதல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்று யாழ்-திருமலை பஸ்சேவையும் நாளை மறுதினம் 26ஆம் திகதி யாழ்-மட்டக்களப்பு பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இன்று காலை யாழ்—கொழும்பு சேவையில் இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடும். காலை ஏழு மணிக்கும் எட்டு மணிக்கும் இவை புறப்படுகின்றன.

யாழ் கொழும்பு பஸ் கட்டணமாக 91 ரூபா மட்டுமே அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் - திருமலை பஸ் இன்று காலை ஏழு மணிக்கு இங்கிருந்து புறப்படும். (ஒ 10)

### ஹாருள்ளேயின் வீடு தீயிட்டு எரிக்கப்பட்டது

கொழும்பு, டிச 24

மத்திய மாகாண ஆளுநரான திரு எ.சி.எஸ். ஹாருள்ளேவின் ஹொரவப்பொத்தானை வீட்டை இனந்தெரியாத கோஷ்டி ஒன்று தீ வைத்து எரித்தது.

கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆளுநர் பதவியை ஏற்பதற்காக திரு ஹாருள்ளே அண்மையில் ஹொரவப்பொத்தானை எம் பி பதவியை ராஜினாமாச் செய்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

### உபதபாலதிபர் சுடப்பட்டார்

யாழ்ப்பாணம் டிச 24

சங்குவலி உபதபால் அதிபர் திரு எஸ் ஜெகநாதன் நேற்று காலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

தபால் நிலையத்தில் இவர் கடமையில் இருந்த பொழுது இச் சம்பவம் இடம்பெற்றது. (ஒ-10)

### இரு இளைஞர் பலி

யாழ்ப்பாணம் டிச, 24

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் கடந்த வியாழன் மாலை இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

கொலையுண்டவர் நல்லூர் பண்டாரக் குளத்தைச் சேர்ந்த திருஞானசுந்தரம் ஜெயக்குமார் (வயது 22) என அடையாளம் காணப்பட்டது.

இவ்விடையில் சுதுமலையிலும் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டார். (ஒ-10)

### ஜீ.சி.ஈ (உயர்தர) பரீட்சை முடிவுகள் அடுத்த வாரத்தில்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நாடு முழுவதிலும் இடம் பெற்ற ஜீ சி ஈ உயர்தர பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கும் 30 ஆம் திகதிக்கும் இடையில் வெளியாகும் என பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பரீட்சைக்கு வடக்கு, கிழக்கு பகுதிகள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த 1 லட்சத்து 45 ஆயிரம் மாணவர்கள் தோற்றினர் (உ-எ)

### தெற்கில் மீண்டும் வன்செயல்கள்

கொழும்பு, டிசம்பர் 24

தென் மாகாணத்தில் மீண்டும் வன்செயல்கள் இடம்பெற்றன என்று நேற்று ஏஜன்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மாத்தறையில் உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒருவரும் அவரின் இளம் மகனும் ஜே வி பி தீவிரவாத சந்தேக நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஹக்மன என்னும் இடத்தில் யு. என் பி ஆதரவாளர் ஒருவர் கொலலப்பட்டார். அவரின் சடலம் தலை வேறு உடல் வேறாக வெட்டப்பட்டு தூக்கி வீசப்பட்டுக் கிடந்தது. (உ-எ)

### சுபநேரம்

24. 12. 1988
மார்கழி 9
சனிக்கிழமை
சுபநேரம்:
3.26 முதல் 4. 56 வரை
ராகுகாலம்:
9.26 முதல் 10 56 வரை
ஆருத்திரா தரிசனம்

### யாழ் நகர் அடகு கடையில் ஆயுதபாணிகள் கொள்ளை!

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ். நகரில் பட்டப் பகலில் அடகு கடை ஒன்றினுள் புகுந்த ஆயுதக் கோஷ்டியினர் நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

நேற்றுப் பகல் பதினொரு மணியளவில் யாழ்ப்பாணம் கே கே. எஸ். வீதியில் உள்ள அடகுகடை ஒன்றிலேயே இச் சம்பவம் இடம் பெற்றது.

துப்பாக்கிகளுடன் வந்த இரண்டு இளைஞர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மீன்பிடிக் கட்டுப்பாடு நேற்று முதல் தளர்வு

யாழ்ப்பாணம் டிச 24

நேற்று முதல் எதிர்வரும் புத்தாண்டு தினம் வரை பருத்தித்துறை, குருநகர், நாவாந்துறை முதலிய கடற்கரைப் பகுதிகளில் எத்தகைய நேரக்கட்டுப்பாடுமின்றி கடற்றொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கிறிஸ்மஸ் தினத்தையும் புதுவருட தினத்தையும் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு இந்த ஏற்பாட்டைத் தாம் செய்திருப்பதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மேற்படி பகுதிகளில் நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவித்தது. (உ)

### ஜனாதிபதித் தேர்தலில் சிறிமா தோற்றுவிட்டதால் அரசைகவிழ்க்க 2 மாதங்களில் தீவிரவாதிகள் முயற்சிப்பர்!

#### அனுரா கூறுகிறார்

கொழும்பு, டிச 24

ஜனாதிபதி தேர்தலில் என் அம்மா தோற்றுவிட்டார். ஆதலால் மார்க்ஸிஸ தீவிரவாதிகள் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க இரண்டு மாதங்களுக்குள் முயற்சி எடுப்பர்.

எதிர்க்கட்சித் தலைவரான அனுரா பண்டாரநாயக்கா ராய்ட்டருக்கு அளித்த பேட்டியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

ஆட்சியைப் பிடிக்க ஜே வி பி தீவிரவாதிகள் பெரிய முயற்சியில் ஈடுபடுவர். அடுத்த இரண்டு மாதங்களில் இது இடம்பெறும் அவர்களை எனக்குத் தெரியும். ஆறு மாதங்களாக அவர்களுடன் நான் பேச்சுக்கள் நடத்தி வந்திருக்கிறேன்.

டிசம்பர் 19 வரை ஜே வி பியினர் வன்செயலில் ஈடுபட்டு வந்தனர். காரணம் வாக்களிப்பு வீதத்தைக் குறைக்கவே.

குறைந்த வாக்களிப்பு இடம்பெற்றால் பிரேமதாஸ வெல்வார் என்பது அவர்கள் எண்ணம். தேர்தல் பற்றி ஐயப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு நீக்கப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச 24

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்விட்டு யாழ்ப்பாணம் முழுவதும் இன்று சனி முதல் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அகற்றப்படும் என்று வடக்கு கிழக்கு மாகாண அரசு தீர்மானித்திருக்கிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமைச் செயலாளர் கே பத்மநாபா இதனை நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் என்று இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

### இன்று ஊரடங்கு இல்லை என அரசு அறிவிப்பு

#### திருவெம்பாவைக்காக மேலும் தளர்வு

கொழும்பு, டிச 24

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் நேற்றிரவும் இன்றிரவும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படமாட்டாது என இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

இதேசமயம் திருவெம்பாவை ...

நேற்றிரவு அமுலுக்கு வந்த ஊரடங்கு இன்று அதிகாலை 2 மணிக்கும்—

நாளை 25 ஆம் திகதி இரவு அமுலுக்கு வரும் ஊரடங்கு அதற்கு அடுத்த நாள் அதிகாலை 2 மணிக்கும் நீக்கப்படும் என இலங்கை அரசுச் செய்திக்குறிப்பு நேற்றுத் தெரிவி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Pioneer Stereo Amplifier SA-420 60 watts (high quality) 3 way J.C speaker box (wide range) விற்பனைக்குண்டு புலோலி இல 134, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (8354

சில நாட்கள் மட்டும் பாவித்த Flying Pigeon Ladies light Roadster சைக்கிள் ஒன்றும் ஆண்களுக்கான Flying Pigeon சைக்கிள் ஒன்றும் விற்பனைக்குண்டு தொடர்பு: R செல்வரெத்தினம், 9/3 140/9) 4 ஆம் குறுக்குத் தெரு. நந்தாவனம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (8415)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு புரொயிலர் இறைச்சிக் கோழி கிலோ 35/- தொடர்பு: அ. போகானந்தா, தபால் நிலைய அருகில் சாவகச்சேரி. (C 973)

அவுஸ்திரேலிய ஒரு மாத நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. அசல் தனிரகம் Wormed and weaned. தொடர்பு கொள்ளவும்: பழைய நம்பர் 181 கோவில் வீதி நல்லூர் (8362,

விநாயகர், பாலமுருகன், நடராசர் துர்க்கை அம்மன் உற்சவ பஞ்சலோக விக்கிரகம் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (8238)

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சுத்தம் செய்து சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises 30/17 மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra-Semy & Co அருகாமையில் ) (C/945)

பாவித்த ஹோல் செற், கட்டில், மெத்தைகள், கண்ணாடி மேசை கிற்றர், Play Pen, Baby Cot Pram, Show case, டிரிபகூ கேஸ், 10 அடி நீள மேசை (தொழிற்சாலைக்கு ஏற்றது). மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. No 307, பலாலி ரோட், (சென்றல் நேசிங் ஹோம் எதிரில்) (8369)

## மொத்தமாக கலண்டர்-டயறிகள்

வெங்கடான் வீலா அஷ்ட லக்ஷ்மி இரகுநாதயர். திருக்கணித, அன்பளிப்புக்காக வியாபார நிறுவனங்கள் பெயர் அச்சிடும் கலண்டர் டயறிகள், பல டிசைன்களிலும் பல அளவுகளிலும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கும் அன்பளிப்பு வழங்குவோருக்கும் விசேட கழிவு. மச்மிலன் புத்தகசாலை, இல 3, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (C 954)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

அருமையான அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரண் ஓவியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/867)

## இறைச்சிக்கோழி

புரொயிலர் கோழி, சேவல், விருத்து சேவல் அடை வைக்கும் முட்டை, கோழித்தீன் விற்பனைக்கு உண்டு சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன் கொக்குவில். (8245)

## SALE

Sony transistor iron bed, glass cabinet large table, teapoy, easy chair ebony box mosquito sprayer, paper stands office table, Christian books (cheap and expensive). oval table 7 Somasundaram Avenue, Chundikuli (8371

## கோழிக்குஞ்சு

புரொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) முட்டைக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (8412)

## சேவல்

2 கிலோவிற்கு மேற்பட்ட சேவல்கள் தொகையாக விற்பனைக்குண்டு கிறிஸ்மஸ் புது வருடத்தை முன்னிட்டு விலை குறைக்கப்பட்டுள்ளது சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (8413)

## தேவை

ஆடைகள் தைக்கக் கூடிய பெண்கள் உடன் தேவை. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ஏ பி சண்முகராஜா, டைமன் இன்டஸ்ரீஸ் மின்சார நிலைய வீதி 3 ஆவது லேன் யாழ்ப்பணம் 8409)

யாழ் நகரில் வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த இடம், பாவித்த வாங்கு, மேசை என்பன தேவை 412 C/o உதயன் யாழ்ப்பாணம். (8417)

நடுத்தர வயதுடைய ஒரு காது கேட்பது மந்தமானவருக்கு தொழிற்சாலையில் ஆறு மாத காலத்திற்கு மட்டும், தங்கும் இடவசதியுடன் ஏதாவது வேலை தேவை. தொடர்பு கொள்ள:- 81 அச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம். (8416)

யாழ்ப்பாணம் பஜாரில் அமைந்துள்ள சிறுகைத்தொழிற்சாலை ஒன்றிற்கு நேர்த்தியாகத் தயாரிக்கக் கூடிய 20 வயதுக்குட்பட்ட சுட்டவியர் ஒருவர் தேவை. கடையில் தங்கக் கூடியவராக அல்லது அண்மையில் வசிப்பவராய் இருத்தல் நன்று. சம்பளம் நரில் பேசித் தீர்க்கப்படும் விபரங்களுக்கு நேரில் வர வேண்டிய முகவரி: சாம் பவிஸ், 46 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (8413)

மிச்சிறிய அளவிலான ரியூட்டரி ஆரம்பித்து நடாத்துவதற்கு இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு உதவியாக இருக்கக் கூடிய ஓரளவு படித்த 40 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை எவ்வித குடும்ப பொறுப்பு அற்றவரும் மாநகர சபைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்கது நடத்துவதற்கான இடத்தைத்தந்துதவுபவர்களிற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். தொடர்பு:-409 C/o உதயன், யாழ்ப்பாணம் 8247)

## Employment

Retired clerk, aged 42. 13 years experience, good knowledge of English, Tamil and Sinhala seeks suitable employment Advertiser, 53, Sangarapillai Road, Manipay. (8349)

## மணமகன் தேவை

வயது 28 நிரம்பிய அழகிய செவ்வாய்க் குற்றமற்ற 5 அடி 5 அங்குல உயரமுள்ள ரூபா 2 000 இற்கு மேல் சம்பளம் பெறும் அரச உத்தியோகம் வகிக்கும் யாழ் இந்து வேளாள குல பெண்ணுக்குத் தகுதியான மணமகன் தேவை. யாழ்நகரில் வீடு ஒன்றும் ரொக்கமும் சீதனமாக வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல- 13 மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (8340)

## மணமகள் தேவை

யாழ் இந்து உயர் வேளாள பெற்றோர்களான பாவம் கூடிய சாதகமுள்ள மகனுக்கு படித்த அழகும் பண்பும் உள்ள மணமகளை தேடுகின்றோர்கள் செவ்வாய் தோஷம் இல்லை அரசநிறுவனத்தில் எலக்ரோனிக்ஸ் தொழில் நுட்பவியாளர் வயது 31 இல 411 C/o உதயன் யாழ்ப்பாணம். (8411)

## தவறிவிட்டது

அப்பாக்குட்டி செல்வரத்தினம் ஆகிய எனது அடையாள அட்டை இல 393171223V திண்ணவேலிப் பகுதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (8367)

## MISSING

Tractor No 36 Sri 3617 Engine No CB 21526 U 522266E Chassis No C 482458 with Trailer No 44 Sri 9474 Chassis No F M D 78 W 574 lost. Information leading to recovery will be rewarded Reply 16 C/o Uthayan. (8370)

## வாடகைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, கச்சேரி ஆகியவற்றிற்கு மிக அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு அல்லது ஐந்து அல்லது ஆறு மகளிருக்கு உணவுடன் வதிவிடம் உண்டு. தொடர்பு: திருமதி க. இரத்தினசிங்கம் 138 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (8363)



# REFRIGERATOR & AIRCONDITIONER REPAIRS AND UPHOLSTERY WORK

- We are not just the common type of Mechanics
- We are specialists with unique Equipments & Skills
- We make miracles in Technology
- We offer you our Services
- Try us. Get the personal attention
- There is only one Place that Fulfils your requirements
- It is

THE JAFFNA COLLEGE

**Institute of Technology**

VADDUKODDAI (C/515)

## காணவில்லை

எனது M D 90-92 ஸ்ரீ 2645 மோட்டார் சைக்கிள் நேற்று மாலை 7 30 மணிக்கு தட்டாதெரு சந்தியில் காணாமல் போய் விட்டது இச் சைக்கிளை கண்டவர்கள் கீழ்க் காணும் விலாசத்துக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கு. திருநாவுக்கரசு, கொக்குவில் மேற்கு, பிள்ளையார் கோவிலடி கொக்குவில். செசிNo. M.D 90 - 1511342; என்ஜின் No M D 90-E15 1323. 8414)

## ஆங்கில/ சிங்கள கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படுகிறன. வீடுகளிற்கும் வந்து கற்பிக்கப்படும் (House Visit) அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புக்கள் நேரில் அல்லது தபால் மூலம் விண்ணப்பிக்கவும். I E T கல்வி ஸ்தாபனம், 11B ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் (8248

## GENERATORS

சகல ஜெனரேற்றர்களும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும். Omka, Manipay Road, Jaffna. (8416)

## THANKS

My grateful thanks to St. Jude for favour granted.

M.K.

(8366)

## சூடானில் சதி முயற்சி முறியடிப்பு

கார்ட்டூம் 24

சூடானில் இராணுவத் தளபதிகள் சிலர் மேற்கொண்ட சதி முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது சதி முயற்சி இது என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி நிமெய்ரியின் ஆதரவாளர்களே இதில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது. (எ)

WISHING OUR FRIENDS, WELL - WISHERS AND PATRONS

A HAPPY AND PROSPEROUS

**X' MAS and NEW YEAR**

OUR DOMESTIC FLIGHTS TO AND FRO COLOMBO / JAFFNA IS IN OPERATION FROM TO-DAY.

**MACK TRAVELS**
PRIVATE LIMITED

# புதிய முறைப்படி தயாரிக்கப்பட்ட DSI சைக்கிள் டயர்

ஏழை முதல் செல்வந்தர் வரை அனைவருக்கும் அதிஉயர் சேவைபுரியும் DSI சைக்கிள் டயர் பல சிறப்புக்களைக் கொண்டது.

1. ஒற்றைக் கம்பிக்குப் பதிலாக இறப்பர் பூசப்பட்ட 4 கம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே கறள் பிடிப்பதில்லை பீடர் பழுதடைவதில்லை.
2. பருத்திக் கன்வஸைவிட உறுதிமிக்க நைலோன் கன்வஸ் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவே அதிக உறுதியானது. அகாலத்தில் வெடிப்பது கிடையாது.
3. அதிவிசேட இறப்பர்க் கலவையினால் ஆக்கப்பட்ட பல்வேறு கட்டட வகைகள் காரணமாக விரைவில் தேய்வுறாது. அதிக காலம் பயன்படுத்தலாம்.

நம்பிக்கை வாய்ந்தது!
இடைஞ்சல் அற்றது!
நீண்ட கால பாவனைக்கு
DSI டயர்!

சார்ஸன்
றபர் இண்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிட்
ஜினசேன மாவத்தை,
பஹா, கடவத்தை.

யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

**தயா ஸ்ரீ டிஸ்றிபியூட்டர்ஸ்.**
55/1 கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(8163)

# ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்- ஆனால் தவறாகப் பேசி விடுவோமே என்ற தயக்கம்- இதுதானே உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலையில் படித்தது

WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாரும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டு

**BRIGHT TRAINING CENTRE**

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில், மிக மிகப் புதுமையான முறையில்

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்,

விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசக் கடிதத்துடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**

P. O. Box 162, Colombo.

(7983)

## அதிபர் நஜிப் அறிவிப்பு

# சோவியத் - கிளர்ச்சியாளர் பேச்சினால் புதிய திருப்பம்

காபூல், டிச 23

ஆப்கான் கிளர்ச்சியாளர் சோவியத் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவது 9 ஆண்டு கால யுத்தத்தில் ஏற்பட்ட புதிய திருப்பம்.

ஆப்கான் ஜனாதிபதி நஜிபுல்லா இப்படித் தெரிவித்தார்

யுத்தத்தில் வெல்ல முடியாது என்பதைக் கிளர்ச்சியாளர்கள் உணர்ந்து விட்டனர். அதையே இப்பேச்சுக்கள் எடுத்துக் காட்டுகின்றன என்றும் அவர் சொன்னார்.

ஜெனிவா உடன்பாட்டை அமுல் நடத்துவதில் சோவியத்யூனியனும் ஆப்கனிஸ்தானும் உறுதியாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# VACANCIES

## Senior Security Officers

Two vacancies exist in our establishment for the above post.

**Qualifications :**

Ex-Servicemen or persons with experience in a reputed mercantile establishment. Should be able to converse and write in English.

**Age :** 30 to 50 years.

Send your bio-data with copies of the following annexed:

1. Birth certificate
2. Educational qualification
3. Experience certificate
4. Two recent character certificates.
5. Achievement of Sport certificates.
6. Two recent photographs.

Salary negotiable.

Canvassing in any form will be a disqualification

Apply in your own handwriting before 28th December to

**Managing Director,**
**SHABRA,**
**207. Power House Road,**
**Jaffna.**

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

1988ஆம் ஆண்டு 4 ஆம் சந்தாயம்
1989 ஆம் ஆண்டு சோலைவரி

## அறிவித்தல்

1988 ஆம் ஆண்டு 4 ஆம் சந்தாயத்திற்கான சோலைவரிப்பணம் 31 - 12 - 88 ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்றப் பணிமனையில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரப்படி தண்டப் பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள்

| | |
|---|---|
| குடியிருப்புக் காணிகள் - | 15 வீதம் |
| இவையல்லாத காணிகள் - | 20 வீதம் |

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் "யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரின்" சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும் அப்படியாக அனுப்பப்படும்போது, வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டாரத்தின் இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

மேலும் 1989 ஆம் ஆண்டிற்கான சோலைவரி மதிப்பீட்டு அறவீட்டில் எவ்வித மாற்றமுமில்லை. 1988 ஆம் ஆண்டு மதிப்பீட்டு அறவீட்டுப் பிரகாரமே 1989 ஆம் ஆண்டிற்கும் மேற்கொள்ளப்படும்

தற்போதைய சூழ்நிலை காரணமாக 1989 ஆம் ஆண்டிற்கான வரிமதிப்பு அறிவித்தல்கள் உரிய காலத்தில் அச்சிட்டு விநியோகிக்க முடியாமல் உள்ளது. இருவிடயமாக வரிமதிப்பு அறிவித்தல்கள் கூடிய விரைவில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

1989 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகிதம் வருமதியாகவுள்ள அக்கந்தாயத்தில் முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

குறிப்பிட்ட கழிவுகள் குறிப்பிடப்பட்ட ஆதனங்கள் சார்பில வீதவரி சம்பந்தமாக எவ்வித நிலுவைகளும் இல்லாத பட்சத்திலேயே செல்லுபடியாகும். நிலுவைகள் இருப்பின் அவ்வாறான நிலுவைகளையும் முழுமையாக செலுத்தும் பட்சத்திலேயே குறிப்பிட்ட கழிவுகள் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**அன்ரன் அல்பிரட்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

மாநகராட்சி மன்றப் பணிமனை
யாழ்ப்பாணம். 23. 12. 1988.

(C/534)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# FORTUNA ENTERPRISES

**வெளிநாட்டுவேலை வாய்ப்புக்கள்**
(Labour Licence No. 79)

**1. தைவான்**

தொழிற்சாலைத் தொழிலாளர்
(Unskilled Factory Workers)
சம்பளம் — ரூபா 12.000/- + இருப்பிடவசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)
வயது 22 — 32

முடிவுத் திகதி 10 - 1 - 89 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
(2 years Contract with 2 years Visa)

**2. குவைத்**

தொழிலாளர் – Labourers
சம்பளம் 30KD – Rs 3300/- + இருப்பிடவசதி
(முற்பணம் அறவிடப்படமாட்டாது)

நாட வேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி:-

**இ. விஸ்வேஸ்வராயன்**
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ் வீதி
கொக்குவில்.

(C-961)

## 31ஆவது நினைவு நாள்



**திருமதி கிறிஸ்ரீன் சவுந்தரநாயகம் [பபி]**

பிறப்பு: 16. 06. 1949 இறப்பு: 27. 11 1988

'ஒளி சிந்தும் தீபமே — எம்
விழி நீர் சிந்த — எமை விட்டு
இறை னுடன் இணைந்தனையோ'

இவரின் ஆன்ம சாந்திக்காக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் 27—12—88 செவ்வாய்க்கிழமை காலை 6. 00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
தாய் சகோதரிகள்,
உறவினர்கள்

வயல் வீதி,
மன்னார்.

(8335)

## கோழி விற்பனைக்கு

நத்தார் தினத்தையிட்டு இன்று (24/12) எம்மிடம் புரொயிலர் கோழி, கறிக்கோழி என்பன உடனுக்குடன் உரித்தும், உயிருடனும் பெற்றுக் கொள்ளலாம்.

வரணி மிசன் விற்பனை நிலையம்
145, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(8471)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
**சுந்தரம்பிள்ளை திருச்செந்தூர்நாதன் (சந்திரன்)**
(மேற்கு ஜெர்மனி உபபாலன் பேக்)

அன்னைமடியில்: 22 - 04 - 1964 இறைவன் அடியில்: 14 - 11 - 1988

எம் நெஞ்சங்களில் நீங்காத இடம்
பெற்ற சந்திரா!
எம் இதயங்கள் வெடிக்கின்றன
சுரங்கள் நடுங்குகின்றன
கண்கள் அருவி மழை பொழிகின்றன
ஓ சந்திரா! எம்மை விட்டு பிரிந்து
விட்டாயா?
உன் மறைவை எம்மனம் நம்பமறுக்கிறதே
எம் நெஞ்சம் நிறைந்த சந்திரா!
எம் குடும்பத்தை வாழவைக்க
அரும்பாடுபட்டாயே!
நீ கடிதங்கள் எழுதும் போது
எல்லோரும் சந்தோஷமாக இருங்கள்
அதுவே
எனக்குப் போதும் என்று எழுதுவாயே
நீ தொலைபேசியில் பேசும் போது அண்ணா
ஒன்றுக்கும் யோசியாதே எல்லாவற்றுக்கும
நான்
இருக்கிறேன் என்றாயே இதற்குத்தானா?
பாதிப் பருவத்தில் பாதையில் பயணத்தை
முடித்ததேன்? காலம் தான் இட்டியதோ?
கண்பட்டோர் முட்டியதோ?
கடவுளுக்கும் கண்ணில்லையோ?
சந்திரன் என்ற ஒளி விளக்கு
அணைக்கப்பட்டு விட்டது
உனது எண்ணங்கள் நிறைவேற
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, அக்கா, அத்தான்,
அண்ணா, தம்பி, தங்கைகள்,
ஊரார், உறவினர்கள்.

இணுவில் கிழக்கு,
காரைக்கால்.

(C/526)

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம்

## பொங்கல் தினத்தன்று உழவர் விழா நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம் டிச 24

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் வழமைபோல் இம்முறையும் உழவர் விழாவைத் தைப்பொங்கல் தினத்தில் நடத்த உள்ளது.

முக்கிய நிகழ்ச்சியாக ஏழு பேர்கொண்ட உதைபந்தாட்டப்போட்டியை வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குள் நடத்த அது தீர்மானித்துள்ளது.

இதன் இறுதி ஆட்டம் 14-1-1989 தைப்பொங்கலன்று நடைபெறும்.


பங்குபற்றும் விளையாட்டுக்கழகங்கள் செயலாளர் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம், அராலிதெற்குஎன்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப் பட்டுள்ளது. (இ)

**தலைவராகத் தெரிவு**

கொடிகாமம் டிச 24

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தலைவராக சட்டத்தரணி திரு. சி. பொ. மயில்வாகனமும் உபதலைவராகத் திரு கா. செ. நடராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-75)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லப்பா விஸ்வலிங்கம்**
அவர்கள்

தோற்றம்: 13- 09- 1922 மறைவு: 04- 01- 1988

சிரார்த்த நினைவுநாள்: 24- 12- 1988

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஊரெழுவை வசிப்பிடமாகக் கொண்டவருமான அமரர் விஸ்வலிங்கம் அவர்களின் நினைவஞ்சலி தினமான இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குலவிளக்காயும், குலமுதலாயும் விளங்கிய அன்புத் தெய்வமே! ஆருயிரே! உங்களைக் கண்டு ஓராண்டு கழிந்தாலும், அந்தப் பசுமையான நினைவுகளும், நெஞ்சம் நிறைந்த காட்சிகளும், உங்களை ஒவ்வொரு கணமும் நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றனவன்றோ! மலறந்தும் மறையாத பேரொளியே! உங்கள் பிரிவினால் தினமும் வாடும் நாம் தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், பேரப்பிள்ளை, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

ரோகிணி,
ஊரெழு வடக்கு,
சுன்னாகம்,

(8286)

## Administrative Manager

Reputed well established company requires the services of an experienced manager to administrate two newly established firms with 30 staff.

Knowledge in accountancy is a must.

Apply: C/o 15,
Uthayan, Jaffna.

(C/523)

## Wanted Driver

Company Director requires well mannered experienced driver. Food and accommodation will be provided.

Age between 45 – 55 Years.
Apply giving two referees,
C/o 14 Uthayan
Jaffna.

(C/522)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**செ. செல்லம்மா**

மண்ணில்: 12 - 02 - 1912 விண்ணில்: 24 - 11 - 1988


24- 12- 88 சனிக்கிழமை எமது குடும்பத் தலைவி செ. செல்லம்மா அவர்களின் ஆத்ம சாந்திக்காக எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

ஆலடி ஒழுங்கை,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(8468)

## நான்காவதாண்டு நினைவலைகள்



**சுப்பிரமணியம ஸ்ரீஸ்கந்தராசா**
(யாழ் பல்கலைக்கழக மாணவரவைத் தலைவரும், அனைத்திலங்கை பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர் பேரவைத் தலைவரும் 1982 – 1983)

படைப்பு: 10 - 06 - 1957 பறிப்பு: 24 - 12 - 1984

ஆ! எமதருமைச் செல்வமே!
காலம் தான் கழிந்திடினும்
அகிலம் தான் அழிந்திடினும்
மாறுது உன் நினைவு
ஆறுது எம் துயரம்

செல்வமே! பல்கலை பயிலச் சென்ற நீ உன் இனம் பட்ட துயர் கண்டு பாலைந மாறினாயே! விடுதலை என்னும் வினை மீட்பின் ஆரம்பத்தில் நீயும் ஓர் நரம்பானாயே! பெற்ற தாய் தந்தையரை விட உடன் பிறந்த சகோதரர்களை விட கொண்ட கொள்கையே பெரிதென்றாயே! இறுதியில் நாம் கண்டது உனது சாம்பல் மேடைத் தான்.

நித்தமும் தங்கள் பிரிவையிட்டு
தங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கும்:
பெற்றோர், சகோதரர், அம்மம்மா,
மைத்துன, மைத்துனிகள், ஆசை மருமக்கள்,
(*359) மற்றும் உற்றார், உறவினர்கள்.

## கேள்வி அறிவித்தல் - 1989

## நகரசபை, வவுனியா

01-01-89 முதல் 31 12 89 வரையான காலப் பகுதிக்கு கீழ்க் காணும் குத்தகைக்கான கேள்விகள் 28-12-88ஆம் திகதி முற்பகல் 11-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்களை 28-12 88 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டவாறு படிவக் கட்டணத்தையும், கேள்வி வைப்புப் பணத்தையும் இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் கேள்வி நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| குத்தகை வினை விபரம் | ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. நவீன சந்தைக்கு அருகிலுள்ள மாட்டிறைச்சிக் கடை இல. 1 | ரூ 22501/- | ரூ 2000/- | 200/- |

இ. இராமலிங்கம்,
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா.
21-12-88

(C=527)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடம்

தொழில் நுட்பவியலாளர் தரம் 11 பிரிவு "அ" பதவிக்கான விண்ணப்பங்கள் 1989 தை மாதம் 31 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதவி:-** தொழில் நுட்பவியலாளர் தரம் II பிரிவு "அ"

**சம்பள அளவுத் திட்டம்:-** ரூபா 2075 — 11 X 50 — 2625/- மாதமொன்றிற்கு

**தகைமைகள்:-** (அ) சிறப்புத் தேர்ச்சி பெற்ற உரிய துறையில் தொழில் நுட்பவியலில் தேசிய டிப்ளோமா அல்லது அதற்குச் சமனான தகைமை

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப் பெற்ற நிறுவனமொன்றில் தொழிநுட்பவியலாளராக பத்தாண்டுகளுக்குப் பொருத்தமான அனுபவம்.

**குறிப்பு:-** மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் தகைமைகளை உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:-** 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:** செய்முறைப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும் அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட பதவிக்கான தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதில் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1988- 12 - 22

(C/972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகமும் நிதியும்
A/L 89
ஆரம்பம்: 25. 12. 88
Sun 8.30 a.m.
(ஆரம்பத்தில் இருந்து)
ஆசிரியர்
இ. இரட்ணம்
211/11, கோயில் வீதி, நல்லூர்.

# சஞ்சீவி

24 - 12 - 1988 சனிக்கிழமை

வர்த்தகமும் நிதியும்
A/L 90
பிரிவு II
ஆரம்பம் 25. 12. 88
Sun 4. 30 p.m.
(ஆரம்பத்தில் இருந்து)
ஆசிரியர்
இ. இரட்ணம்
211/11, கோயில் வீதி, நல்லூர்.

### பொதுத் தேர்தலில்

## ஐ.தே.க இ.தொ. கா. இணைந்து போட்டியிடுமா?

கொழும்பு டிச 24

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுத் தேர்தலில் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலைநாட்டிலும்கொழும்பிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சில தொகுதிகளில் போட்டியிடலாம் என்று அறியவருகிறது.

தொகுதி உடன்பாடு பற்றி இ. தொ. கா. தற்சமயம் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

மாத இறுதியில் காங்கிரஸ் செயற்குழு கூடுகிறது. அப்போது இது பற்றி முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது. (ஒ-எ)

## ஐ.தே.க விடம் நியமனம் கோரி 500 பேர் விண்ணப்பம்

கொழும்பு. டிச 24

வருகிற பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட ஐ தே க விடம் நியமனம் கோரி 500 க்கும் அதிகமானோர் இதுவரை விண்ணப்பித்துள்ளனர்.

ஐ தே. க தலைவர் ரஞ்சன் விஜரத்ன இத் தகவலைத் தெரிவித்தார்.

விண்ணப்பங்களை பிராந்திய நியமனக்குழுக்கள் நேரடியாகப் பரிசீலனை நடத்தும்.

ஒவ்வொரு பிராந்தியக் குழுவிலும் ஒரு சிரேஷ்ட அமைச்சர் அந்தமாகாண முதலமைச்சர். இடம் பெறுவர். சிபாரிசுகள் எதிர்வரும் திங்களுக்கு முன்பதாக மத்திய நியமனக் குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

மத்திய குழுவிற்கு புதிய ஜனாதிபதி பிரேமதாசா தலைவராக இருப்பார்.

குழுவின் உறுப்பினர்களாக அமைச்சர்கள் காமினி திஸநாயக்கா. லலித் அத்துலத்முதலி ஏ. ஸி. எஸ் ஹமீது, எம். எச். முஹம்மது. கே. டபிள்யு தேவநாயகம், ரஞ்சன விஜரத்ன ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (உ-எ)

## ஜெயலலிதா அணியுடன் ஜனதா குழு கூட்டு!

சென்னை, டிச: 24

அ தி மு. க. ஜெயலலிதா அணி, பொன் விஜயராகவன் தலைமையிலான ஜனதா கட்சியுடன் தேர்தல் தொகுதி உடன்பாடு செய்திருக்கிறது.

இதற்கிணங்கஜனதாக் கட்சி 21 தொகுதிகளில் போட்டியிடும்.

ஜெயலலிதா அணியுடன் தொகுதி உடன்பாடு செய்துள்ள குடியரசுக் கட்சி 3 தொகுதிகளில் போட்டியிடும். (உ-எ)

### தென் பகுதியில் தேங்கிக் கிடந்த

## 118 தபால் பொதிகள் நேற்று வந்து சேர்ந்தன

அசம்பாவிதங்கள் காரணமாக தென் குதியின் பல பகுதிகளிலும் தேங்கிக் கிடந்த வட பகுதிக்கான 118 தபால் பொதிகள் நேற்று மாலை யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டன.

கொழும்பில் இருந்து வவுனியா வரை ரயில் மூலம் எடுத்து வரப்பட்ட இப்பொதிகள் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு பஸ் மூலம் கொண்டு வரப்பட்டன.

வெளிநாட்டில் இருந்து வந்த தபால்களும் இப்பொதிகளில் அடங்கி இருந்தன.

இவை இன்று விநியோகிக்கப்படும் என்று தபால் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

### யாழ் நகர்....

(1 ஆம்பக்க தொடர்ச்சி)

கள் கடைக்குள் தனியாக இருந்த திரு கோபாலபிள்ளை என்பவரை ஆயுத முனையில் மிரட்டி நகைகள் வைக்கும் பெட்டகத்தை திறப்பித்தனராம்

பின்னர் அவரைக் கட்டிப் போட்டுவிட்டு அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனராம். (ஒ 10)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க

**கிளைக்குழுத் தேர்தல்**

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்வது சம்பந்தமான எமது 12 - 12 - 88 திகதிய விளம்பரத்துக்கமைய 28 12 88 29 - 12 - 88 ஆகிய தினங்களில் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட உள்ளது என்பதை வாக்காளர்களுக்கு அறியத்தருகின்றோம். இது சம்பந்தமாக பூரண விளம்பரம் ஒவ்வொரு ப. நோ. கூ. சங்க கிளைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இங்ஙனம்
செயலாளர்
பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(C/978)

## நடமாடும் மருத்துவ பராமரிப்புச் சேவை

### யாழ். செஞ்சிலுவை ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம் டிச, 24

நடமாடும் மருத்துவ பராமரிப்புச் சேவை Mobile Medi Care Service) ஒன்றை நடத்த யாழ். செஞ்சிலுவைச் சங்கம் திட்டமிட்டிருக்கிறது

யாழ் குடா நாட்டின் பின்தங்கிய பகுதிகளிலுள்ள மக்களுக்காக இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

சொறி, சிரங்கு போன்ற நோய்களுக்கு இந்தச் சேவையின் மூலம் சிகிச்சையளிக்கப் படவிருக்கிறது.

அத்துடன் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்போரின் உடல் நலன்களும் இந்தச் சேவையின் மூலம் கவனிக்கப்படும்

சம்பந்தப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குவதுடன் சுகாதாரக் கல்வியைப் போதிப்பதற்கான நடவடிக்கைகளும் இந்தச் சேவையின் மூலம் மேற்கொள்ளப்படும். (ஒ-ஐ)

## இலங்கை வங்கிக்கு வந்துள்ள மற்றொரு பட்டியல்

யாழ்ப்பாணம், டிச 24

மீளக்குடியமர்தல் நிவாரணம் பெறவிருப்போரின் மற்றுமொரு பட்டியல் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ். இலங்கை வங்கிப் பிராந்திய அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பட்டியலிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

காங்கேசன்துறை உ. அ. அ. பிரிவு:-

- ★ தெல்லிப்பளை வடமேற்கு- 132
- ★ மயிலிட்டி தெற்கு - 22.
- ★ துர்க்காபுரம்- 01.
- ★ குரும்பசிட்டி- 07.
- ★ நகுலேஸ்வரம் - 06

பருத்தித்துறை உ. அ. அ. பிரிவு:-

- ★ அல்வாய் மேற்கு - 313

சாவகச்சேரி உ. அ. அ. பிரிவு:-

- ★ எழுதுமட்டுவாள் - 07.
- ★ கொடிகாமம் 138
- ★ சாவகச்சேரி வடக்கு- 29.
- ★ சாவகச்சேரி கிழக்கு- 138
- ★ சாவகச்சேரி மேற்கு- 318.
- ★ கச்சாய்- 13
- ★ மிருசுவில்- 20.
- ★ உசன்- 71.
- ★ வரணி வடக்கு - 104.
- ★ நாவற்காடு- 07.
- ★ கைதடி தெற்கு - 50
- ★ அல்லாரை- 29.
- ★ கைதடி, நுணாவில் - 86.

சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் (ஒ ஐ-10)

### மின்சார.....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கள் அச்சுறுத்தியதை அடுத்து அவர்கள் இடையில் தமது முயற்சியைக் கைவிட்டனர்

தற்போது மீண்டும் திருத்தவேலைகள் ஆரம்பமாகியிருக்கின்றன

திருத்த வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு மேலும் ஊழியர்கள் தேவைப்படுவதாகவும்- அதனால் யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக ஊழியர்களை அனுப்பி வைக்கும்படியும் இலங்கை மின்சார சபை அதன் யாழ் பிராந்திய பிரிவிடம் கோரியிருப்பதாகவும் தெரியவருகிறது (உ)

### அரசை கவிழ்க்க.

(1 ஆம்பக்க தொடர்ச்சி)

பாடான நிலை ஒன்றை எழுப்ப வேண்டும் என்பதும் அவர்களின் ருது

1977 இல் இருந்து கடந்த 11 ஆண்டுகளாக பதவியில் இருந்து வரும் இந்த யு என் பி அரசை நடந்து முடிந்த ஐயப்பாடான Questionable தேர்தல் மேலும் செல்வாக்கு அற்றதாக்கி விடும்.

எனது அம்மா தலைமையிலான அரசு வந்திருப்பின் அது மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்கும் பிரச்சினைக்குரிய வடக்கு - கிழக்கு தொடர்பான ஒப்பந்தத்தை அமுல் நடத்த வந்திருக்கும் இந்திய அமைதிப்படையை அம்மாவின் அரசு திருப்பி அனுப்பியிருக்கும்.

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் வன்செயல்கள் பற்றி செய்திகள் வரவே இல்லை

இந்த வழமைக்கு மாறான அமைதி எனக்கு கவலை தருகிறது.

-இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார் (உ-எ)

## கிறிஸ்து பிறப்பு விழா

யாழ்ப்பாணம். டிச 24

ஊர்காவற்றுறை வை எம் சி ஏ. ஏற்பாடு செய்திருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா இன்று (சனிக்கிழமை) காலை 8 30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்

இந்த விழாவில் ஊர்காவற்றுறை கொத்தணி பாடசாலைகளுக்கிடையில் பேச்சு, பாட்டு மற்றும் நாடகப்போட்டிகள் இடம்பெறும். (ஒ ஐ)

### ரூ 150 கோடி...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

உட்பட வேறு வெளிநாடுகளும் இதற்கு உதவும்

இத்திட்டத்தின் கீழ் 75 ஆயிரம் பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் 40 ஆயிரம் வீடுகள் கட்டப்படும்.

நீர்ப்பாசனத் திருத்தம், விவசாய வளர்ச்சி சம்பந்தமான திட்டங்களையும் மாகாண சபை செயற்படுத்தவிருக்கிறது.

-இப்படி அமைச்சர் கணேசலிங்கம் தெரிவித்தார் என்று இந்திய வானொலி மேலும் தெரிவித்தது. (உ எ)

## வவுனியா - கொழும்பு ரயில் மீண்டும் அடுத்த வாரத்தில்?

கொழும்பு. டிச 24

வவுனியா - கொழும்பு ரயில் சேவை மீண்டும் அடுத்த வாரமளவில் ஆரம்பமாகலாம்

இத்தகவலை ரயில்வே கட்டுப்பாட்டுப் பகுதியினர் நேற்றுத் தெரிவித்தனர்.

அனுராதபுரத்தில் இருந்து மாகோ, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கான சமிக்ஞை தொடர்புகளை இயக்க முடியாத காரணத்தினாலேயே இச் சேவைகளை ஆரம்பிப்பதில் தாமதமேற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக அனுராதபுரத்தில் மின்சாரம் இல்லை. இதனால் பாட்டரிகளுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது

அநேகமாக இச்சேவை அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்பட்டு விடுமென அறிவிக்கப்படுகிறது (ஒ-எ)

### அவசர கால...

(1 ஆம்பக்க தொடர்ச்சி)

முன் சாதாரண சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படாதவர்கள் அவசரகாலச் சட்டம் காலாவதியாகும் போது தானாகவே விடுதலையாவர்.

—இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

1983 ஆம் ஆண்டு மே மாதம் நாட்டில் இனக் கலவரங்கள் ஆரம்பமானதை அடுத்து அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் தொடர்ந்து 67 மாதங்கள் அது நீடிக்கப்பட்டு வந்தது.

### திருடர் தொல்லை

வண்ணார்பண்ணை மேற்கில் இரவு நேரங்களில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் நாவலடி ஒழுங்கையில் திருடர்களைக் கண்டு பெண் ஒருவர் குரலெழுப்பியதை அடுத்து அவர்கள் ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

### யாழ் பல்கலை...

(1 ஆம்பக்க தொடர்ச்சி)

ளர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவார்கள்.

இத்தகைய மாணவர் அமைப்புகளை ஏற்படுத்த நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ 5)

## சின்னத்துரை பசுபதி J. P

(Tissamaharama) திஸமகாராம

முன்னாள் திஸமகாராம கிராமசபைத் தலைவரும் பட்டினசபை அங்கத்தவருமான சின்னத்துரை பசுபதி J. P 18-12-88 இல் காலமானார் இவரின் ஈமக்கிரியைகள் 18-12 88 இல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றது

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈச்சந்தன் வீதி,
உடுவில் தெற்கு,
சுன்னாகம் (8377)

தகவல்;
மு பூலோகம்

## திருமதி சிற்றம்பலம் இராசம்மா

மண்டைதீவை பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சிற்றம்பலம் இராசம்மா நேற்றுக் காலமானார் இவர் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், அன்னலெட்சுமி (U K). அன்னம்மா. தங்கம்மா. திலகவதி, பாலராஜா (U K), கந்தமூர்த்தி (ஓய்வு பெற்ற குடும்ப சமாதான நீதிபதி), வல்லிபுரம் ஓய்வு பெற்ற தொழில் நுட்ப அலுவலகர். நீ ப்பாசன இலாகா) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற அரியநாயகம் காலஞ்சென்ற செல்லையா. காலஞ்சென்ற இராமலிங்கம், கந்தசாமி, பார்வதி U K), பரமேஸ்வரி, நாகரெட்ணம் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவில் கிழக்கு, கலைவாணி மில் ஒழுங்கை இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக 25 12-88 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(8375)

தகவல்;
விஸ்வலிங்கம்.

## திரு. சுப்பையா மகாலிங்கம

(கிராமசேவை அலுவலர் கந்தரமடம்)

திரு சுப்பையா மகாலிங்கம் காலமானார். இவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற ஆசிரியை சிவயோகத்தின் அன்புக் கணவரும் விஜயலிங்கம் பிரான்ஸ்) யோகலிங்கம் சிவகலா, கனகநாதன் (நோர்வே ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற கனகலிங்கம், பஞ்சலிங்கம் இயாகலிங்கம் (விமானப்படை தலைமை அலுவலகம்) மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச்சகோதரருமாவர்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24-12 88 சனிக்கிழமை பிற்பகல் 5 00 மணியளவில் யாழ்-கந்தர்மடம் பழம் றோட் 62 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்

தகவல்-
மனைவி

(8372)

## மரண அறிவித்தல்கள்

## திரு. இராசேந்திரம

கோண்டாவிலைச் சேர்ந்த இராசேந்திரம் 22. 12 88 இரவு காலமாகிவிட்டார் இவர் பிரபல வாட்டர்ப்பம் தயாரிப்பாளரும் றீபோறிங், கடைச்சல் தொழிற்சாலை உரிமையாளருமாவார். அன்னார் காலஞ்சென்ற இராசையா, இராசலக்ஷ்மியின் மகனும், நாகேஸ்வரியின் கணவனுமாவார் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை 24-12 88 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியை நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாய், மனைவி, பிள்ளைகள்

M S. லேன்.
கோண்டாவில்.

(8181)

## திரு. குமாரவேல் சண்முகராஜா

(திருநெல்வேலி)

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலிவாசியுமான குமாரவேல் சண்முகராஜா காலமானார். இவர் திருகோணமலை மாவட்ட வன பரிபாலன அதிகாரியாவார் (Assitance Concervator of Forest, Trincomalee)

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும். விஜித்தா. சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும். காலஞ்சென்ற அளவையைச் சேர்ந்த குமாரவேல், பார்வதி அம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும், குகதாஸ் (Planning Branch Kachcheri. Jaffna) அவர்களின் அன்புச் சகோதரரும், பத்மராணி குகதாஸின் மைத்துனரும், சுபாஷினி, ஷாலினி ஆகியோரின் பெரியப்பாவும். காலஞ்சென்ற செல்லையாவினதும் திருமதி சுருமணி செல்லையாவினதும் அன்பு மருமகனும், திலகவதி. குமாரசந்திரன் லண்டன்) விமலாவதி ரெட்ணலீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நரேந்திரன், அருந்தவநாயகி (லண்டன்), மகேசநாயகம் (லண்டன்), ஜெயதேவன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-12 88 ஆம் திகதி காலை 10 மணிக்கு 76 பலாலிவீதி, "சந்தம்" திருநெல்வேலியில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் வேண்டுகின்றோம் மாற்றம் இருப்பின் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
திருமதி சண்முகராஜா

(8479)

## திரு சே. க. சண்முகம்பிள்ளை

(இளைப்பாறிய பிரதம கணக்காளர் சமநலசேவைத் திணைக்களம்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீராவியடி 20/1 சிவகுருநாதர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. சே க. சண்முகம்பிள்ளை 21-12 88 புதன்கிழமை காலமானார் இவர் காலம்சென்ற சே. கந்தையா தம்பதிகளின் அருமைப் புதல்வன். காலம்சென்ற இரட்சணியதேவியின் அன்புக் கணவர். காலம் சென்ற த. திருநாவுக்கரசு (மலாயன் பென்ஷனர்) மங்கையர்க்கரசி தம்பதிகளின் மருகர். ஸ்கந்தகுமார் (B Sc Dip in Ed, London—American Express Bank கனடா), ஜெயக்குமாரி செல்வகுமார் (American Express Bank கனடா) ஆகியோரின் தந்தை. இராஜேஸ்வரிகம் (B Sc, கனடா) ஜூலியன் (கனடா) ஆகியோரின் மாமனார் திருமதி வாலாம்பிகை படிகலிங்கம், திருமதி தில்லையம்மா பொன்னம்பலம் காலம் சென்ற சே க. நடையா திருமதி பாக்கியம் வைத்திலிங்கம், திருமதி விசாலாட்சி தியாகராஜா. சே க. நாகலிங்கம் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்), சே க படிகலிங்கம் வீதி பராமரிப்பு அதிகாரசபை ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் அன்புச் சகோதரர். திருமதி இந்திராதேவி மகாராசா. காலம்சென்ற இ. தவநாயகம் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர். கட்டடத்திணைக்களம்). திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம், திருமதி சுற்பராதேவி தில்லைநாதன் ஆசிரியை, திருமதி மகாதேவி சங்கரலிங்கம் ஆகியோரின் மைத்துனர் பிரதீப், சங்கீதா, கிரிசாந்த், ஷாலினி (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டனார்

ஈமக்கிரியைகள் 25-12 88 ஞாயிற்றுக்கிழமை (நாளை) பிற்பகல் 1-00 மணிக்கு 22/1, அம்மன் வீதி, கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சே. க. படிகலிங்கம்

22/1 அம்மன் வீதி,
கந்தர்மடம்

(8374)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Saturday 24th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதித்துறையில்
நாணயம்மிக்க நண்பன்
"ஷப்ரு"
207,மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை

24-12-1988 சனிக்கிழமை

Your Friends in Finance
SHABRA
61, New Bullers Road, Co-6

கருத்துக் கலசம்

மயூரா

## மனிதாபிமானம்

மனிதாபிமானம் என்பது இப்போது அடிக்கடி பாவனைக்கு வரும் பதமாகி விட்டது. அதனைப் பலரும் பல சந்தர்ப்பங்களிலும், சூழ்நிலைகளிலும் எழுதவும், பேசவும் கேட்கிறோம்.

மனிதாபிமானம் என்பது என்ன? ஒரு மனிதன், அடுத்த மனிதன் மீது அபிமானத்துடன் நடந்து கொள்வது; மனிதனுக்கு உடைய நற்பண்புகளுடன் அடுத்தவனுக்கு உதவுவது அல்லது அடுத்தவனை நடத்துவது; பிறர் மீது அன்பும் கருணையும் செலுத்தி தன்னைப் போலவே நடத்துவது.

இப்போதைய மனித உலகம் பேராசைகளால் சஞ்சலப்படுகிறது. அதனால் மனித உலகில் போரும், பீதியும், வறுமையும், அதர்மமும்; நீதிநெறி பிறழ்ந்த அநியாயங்களும் மலிந்து விட்டன.

அதன் பெறுபேறாக மனித வாழ்க்கை உயரிய இலட்சியம் இல்லாததாக, வெறும் போலியாக மாறி விட்டது. அந்தப் போலித் தன்மையின் விளைவாக மனிதனிடம் அவனுக்கு வேண்டிய மனிதப் பண்புகள், குணங்கள் தேய்மானம் கண்டு அருகி, அழிந்து வருகின்றன.

அந்த வரிசையில் மனிதனுக்கு அவசியம் தேவைப்படும் மனிதாபிமானமும் மறைந்து வருகிறது. மனிதாபிமானத்தை அவனுக்கு அடிக்கடி நினைவுபடுத்த வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

அநேகமாக எல்லாச் சமயங்களுமே, உயிர்கள் மீது கருணை, இரக்கம் காட்டி அவற்றையும் தம்முயிர் போலப் பேண வேண்டும் என்று போதிக்கின்றன.

ஆனால் மனிதர்களில் பலர், மனிதன் மீதேனும் கருணை காட்டி, அபிமானம் செலுத்தி அவனுக்கு உதவுவதில்லை. அயலானை நேசிக்கின்ற பண்பும் பாரம்பரியமும் கூட சமூகத்தில் இப்போது குன்றி வருகிறது.

அரிது அரிது மானிடராதல் என்று சமய நூல்கள் பரக்கப் போதித்த போதிலும், மனித உயிர்களை மதிக்கும் தன்மை, உயிரின் பெறுமதியை உணரும் யோக்கியதை என்பன அடியோடு அருகி வருகின்றன. அவற்றின் விளைவாக சமூக நாகரிகமும், பண்பும் மாசுறுகின்றன.

கஷ்டப்படுபவனுக்கு, பாதிக்கப்பட்டவனுக்கு, ஒடுக்கப்பட்டவனுக்கு உதவுவதில் மேற்கு நாட்டு மக்கள் முன்னணியில் நிற்கிறார்கள்: உலகின் பல பாகங்களிலும் உள்ளவர்களுக்கு, ஏதோ ஒருவித பாதிப்புக்கு என்று நிவாரணம் அனுப்புகிறார்கள். பல நிவாரணத் திட்டங்களுக்கு உதவுகிறார்கள். அவர்களின் இதயங்களில் மனிதாபிமானம் நிறைந்திருப்பதையே அது எடுத்துக் காட்டுகிறது.

கடமையைச் செய்தால் உரிமை கிடைத்தே தீரும். மனிதாபிமானம் என்ற கடமையை மறப்பவர்களுக்கு மனித உரிமைகளும், வேறு உரிமைகளும் கிடைப்பது எங்ஙனம்? ★

# இலட்சிய மனிதனாகத் திகழ்ந்த ஏசுபிரான் உலகிற்காக தன்னையே அர்ப்பணித்தவர்

மனிதன் என்றாலே நம்பிக்கை கொண்டவன் என்றே உபநிடதம் கூறுகிறது.

தான் நம்பியதை அப்படியே நடைமுறையில் பின்பற்றுபவனே மனிதன்.

ஆனால் இன்றைய உலகில் தற்காலிகமாகவே நம்பிக்கை கொண்டு அதன்படி நடக்க முடியாமல் தவிக்கிறான் மனிதன்.

விலங்கினங்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் 'விவேகம்' என்ற பகுத்தறியும் திறன் இல்லை. இது மனிதனுக்கு மட்டுமே உரியது. ஆகவே மனிதனே ஆனந்தமயத்தை அடையும் வாய்ப்புப் பெற்றுள்ளான்.

அந்த வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்தாததினால் அதைப் பெறமுடியாமல் மனிதன் தவிக்கிறான்.

### ஒன்றே தெய்வம்

ஆனந்தமே பிரம்மம். அதுவே தெய்வம்.

இதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் குறிப்பிடலாம்.

ஆனால் அதை அடையும் வழி தெரியாமலும் தெரிந்தும் அவ்வழி நடக்க முடியாமலும் உலக பந்தங்களினால் கட்டுண்டு தடுமாறிக் கொண்டே மறைந்து விடுகிறான்.

தன்னுடைய உண்மைத் தத்துவத்தை உணர மனிதன் தனது உணர்வுகளைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும்.

எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றாக இருத்தலே உண்மையான மனிதனின் இலட்சணம். அப்படிப்பட்ட இலட்சிய மனிதனாகத் திகழ்ந்தவரே ஏசுபிரான்.

எல்லா மதங்களின் குறிக்கோள் ஒன்றே. எல்லா சாஸ்திரங்களின் கூற்றும் ஒன்றே எனப் பல மதங்களைச் சார்ந்த சான்றோர்கள் கூறி வந்துள்ளனர்.

முகம்மதியர்கள் இறைவனை அல்லாஹ் என்று அழைத்து வழிபடுகின்றனர். தீவிர கிறிஸ்தவர்கள் ஜெஹோவா என்று அழைக்கின்றனர்.

வைணவர்கள் அவரை மகாவிஷ்ணு என வணங்குகின்றனர். சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள் அவரைச் 'சிவா' என்று போற்றி வழிபடுகின்றனர்.

நாடியவர்களுக்கு எல்லோருக்கும் ஆரோக்கியத்தையும் சகலவிதமான சௌபாக்கியங்களையும் சுகபோகங்களையும் ஆனந்தத்தையும் அளிக்க வல்லது பரம்பொருள் ஒன்றே.

### மனிதப்பிறவியின் இலட்சியம்

இரண்டு கரங்களையும் ஒன்று சேர்த்துக் கூப்புவதே 'நமஸ்காரம்' அநேகத்துவத்தில் ஏகத்துவம் காண்பதே இது. எல்லாப் பொருட்களும் ஒன்றே என்ற ஒருமைப் பாட்டுணர்வை உணர்த்துகிறது. ஒருமைப்பாடே மனிதப் பிறவியின் இலட்சியம் என்று இது உணர்த்துகிறது.



- பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா -

முகமதியர்கள் 'சலாம்' என்கின்றனர். 'ச' என்றால் தெய்வம். 'ல' என்றால் பயம் அல்லது இணைதல். ஆகவே சலாம் என்றால் 'கடவுளிடம் ஐக்கியமாவது' என்றே பொருள்படும்.

கிறிஸ்தவர்கள் 'ஏசு' என்கின்றனர். 'ஏ' என்றால் ஒன்று. 'சு' என்றால் தெய்வம் ஆகவே தெய்வம் ஒன்றே என்பதை இது உணர்த்துகிறது. இப்படியாக எல்லா மதங்களின் குறிக்கோளும் 'ஒன்றே தெய்வம்' என்பதே.

இதையேதான் இந்து மதத்திலும் 'ஏகம் ஏவ அத்வீதியம் பிரும்மம் ஒன்றே' என்பதே இதன் பொருள்.

அமரத்துவம் பெற மனிதன் விசாலமான இதயத்தையும் பிரேமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### கடவுளின் தூதன்

'நானே அந்த ஒளியில் உள்ளேன் நானே அந்த ஒளி. அந்த ஒளி என்னுள்ளே உள்ளது. அந்த ஒளி நானே'— என்ற வகையில் சிந்தனை செய்பவரே சிறந்த ஞானி எனப்படுவர்.

ஏசுபிரான் முதலில் 'நான் கடவுளின் தூதன்' என்றார். இதில் தான் வேறு; கடவுள் வேறு என்ற துவைத (இரட்டை) உணர்வு நிறைந்திருந்தது.

மேலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு ''நான் கடவுளின் மகன்'' — என்றார். இதனால் கடவுளிடம் நேரிடையான தொடர்புடையவராகக் கருதினார்.

பிறகு 12 ஆண்டுகள் கடும் பாலைவனங்களில் காலத்தைக் கழித்துப் பிறகு ''நானும் என் தந்தையான கடவுளும் ஒன்றே''என்ற உண்மையைப் பிரகடனஞ் செய்தார்.

அவருக்குப் 12 சீடர்கள் இருந்தனர். இதில் முதன்மையானவர் 'பீட்டர்'. இவரிடம் எவ்வித இரகசியத்தையும் ஒளிக்காமல் கூறுவார். எல்லா உயிரினங்களிடமும் அன்பு பாராட்ட வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்பதை உணர்த்தினார். இப்படிப்பட்ட பரந்த ஒருமைப்பாட்டுணர்வைப் பீட்டர் வளர்த்து வந்தார்.

Joy என்ற சொல்லில் J என்பது Jesus is First - ஏசுவே முதல் என்று பொருள் படும்.

O என்றால் Others are next — மற்றவரெல்லாம் அவருக்குப் பின்தான் எனப் பொருள் படும்.

Y என்றால் Myself is last- நான் கடைசி என்று பொருள் படும்.

இப்படி Joy ஆனந்தம் என்பதன் உட்கருத்தை நன்றாக உணரவேண்டும்.

### இறைவன் வாழும் ஆலயம்

தேகமே இறைவன் வாழும் ஆலயம் என்று கருதி இதைப் போஷிக்கவேண்டும். இதைத் தூய்மையாக வைத்துக் கொள்ள முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பரோபகாரார்த்தம் இதம் சரீரம் என்றபடி பிறருக்குச் சேவைசெய்யவே இந்தச் சரீரம் அளிக்கப்பட்டுள்ளது. ஏசுபிரான் இவ்வாறே வாழ்ந்துகாட்டினார் பிறருக்குத் தொண்டு செய்வதையே அவர் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

எவ்வளவோ மனிதர்கள் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டு அவரை எத்தனையோ வகைகளில் வெறுத்துத் துன்புறுத்தினர். அவர் அவைகளைப் பொருட்படுத்தாமல் எல்லோரிடமும் ஒரே மாதிரியாக அன்புகாட்டினார்.

### அசரீரி வாக்கு

ஏசுபிரான் தனது சுய ஆனந்தத்தை முக்கியமாகக் கருதாது தன்னுடைய இரத்தத்தையும் மனித குலத்திற்காகச் சிந்த முற்பட்டார்.

துஷ்டர்கள் அவருக்கு இழைத்த அநீதியைக் கண்டு சகிக்காத அவருடைய சீடர்கள் தெய்வத்தைத் துதித்த போது அசரீரி வாக்கு அவர்களுக்குக் கிடைத்தது.

ஏசுபிரானே அசரீரியின் மூலம் இச்செய்தியை அனுப்பினார். ''எல்லோரும் ஒன்றே என உணர்வு கொள்வாய். ஓ மகனே! எல்லோரிடமும் பாரபட்சமின்றி ஒரே விதமான நோக்கை நீ கொள்ள வேண்டும்''. ★

# பாலகனைத் தேடி புனித யாத்திரை

இயேசு பெத்லகேமில் பிறந்தபோது, கீழ்த்திசையில் பிரகாசமான நட்சத்திரம் ஒன்று வானத்தில் தோன்றியது.

ஞானிகள் என்று சொல்லப்படும் மூன்று அரசர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டனர்.

மீட்பர் பிறந்து விட்டார் என்று அவர்கள் யூகித்து அவரைக் கண்டு ஆராதிக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். எனவே அவர்கள் பயணத்தைத் தொடங்கினர்.

வானத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்த அந்த நட்சத்திரம் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. அவர்களும் அதைப் பின்தொடர்ந்து இயேசுவைக் காணத் தேட முனைந்தனர்.

சில தினங்களுக்குப் பிறகு ஜெரூசேலம் பட்டணத்தை அடைந்தனர்.

திடீரென நட்சத்திரம் மறைந்தது. எங்கே போவது என்று அவர்களுக்குப் புரியவில்லை. எனவே மக்களைச் சந்தித்து, மீட்பர் எங்கே பிறந்துள்ளார் என்று கேட்டனர்,

அச்சமயத்தில் ஏரோது ஜெரூசலேமின் அரசனாய் இருந்தான். அவன் தீயவன், கொடுங்கோலன்.

மூன்று ஞானிகளைப் பற்றி அவன் கேள்விப்பட்டதும், பீதியடைந்தான்.

அவன் குருக்களை அழைத்து. மீட்பர் பிறக்க வேண்டிய இடம் தெரியுமா என்று கேட்டான்.

'பெத்லகேம்' என்று அவர் பதில் கூறினர்.

ஏரேது மூன்று ஞானிகளையும் அழைத்து. 'நீங்கள் ஆராதிக்க வந்துள்ள மீட்பர் பெத்லகேமில் பிறந்திருக்க வேண்டும் நீங்கள் கண்டதும் எனக்கும் அறிவியுங்கள். நானும் சென்று அவரை ஆராதிக்க வேண்டும்' என்று கூறினான்.

ஆனால் உண்மையில் அவன் அவரைக் கொலைசெய்ய மனதாய் இருந்தான்.

மூன்று ஞானிகளும் பெத்லகேம் திசையை நோக்கிப் புறப்பட்டனர்.

யெருசலேமை விட்டுப் புறப்பட்டதும், அந்த நட்சத்திரம் மீண்டும் வானத்தில் தோன்றி, வழியைக் காண்பித்தது.

பெத்லகேமில் இயேசு பிறந்து இருந்த தொழுவத்துக்குமேல் நட்சத்திரம் நின்றது. அவர்கள் உள்ளே சென்று, மரியாளின் கைகளின் இருந்த குழந்தையைக் கண்டனர்.

இறுதியாக இயேசுவைக் கண்டதில் அவர்கள் எத்துணை மகிழ்ச்சி அடைந்திருப்பர்.

மூன்று அரசர்களும் மரியாதையுடன் தரையில் முகம் குப்புற விழுந்து அத்தெய்விகப் பாலகனை ஆராதித்தனர்.

பிறகு பொன், தூபம், மீறை எனும் பொருட்களை அவருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர்.

இயேசு இன்னும் சிறுபாலகனாயிருந்ததால் அவர் அவர்களோடு பேசவில்லை. ஆனால் அவர்கள்மீது அலாதிப் பிரியம் கொண்டிருப்பதைக் காண்பிக்கும்வகையில், அவருடைய உதடுகளில் புன்னகை தவழ்ந்திருக்கவேண்டும். ★

## இறைமகன் மாட்சியைப் பாடிடுங்கள்



**பல்லவி**

பறவைகளே பறவைகளே
சேதியைப் பாடிடுங்கள்
இறைமகன் யேசு கிறிஸ்து பிறந்த
மாட்சியைப் பாடிடுங்கள்

**அநுபல்லவி**

வானத்திலிருந்து வையகம் வந்திட்ட
அற்புதக் கொடையான
ஞானபரன் அந்த யேசுவைத் தேவரும்
வாழ்த்தினர் நிறைவாக
............ (பறவை)

**சரணம்**

உலகுக்கு ஒளியாய் அனைவர்க்கும் வழியாய்
வந்தவர் யேசுபரன்
மனதுக்குச் சிறந்த சிந்தனை தந்தார்
அந்தவின் தேவமகன் — எனவே
ஒரு சிந்து பாடிடுங்கள் — இனிய
குரல்கொண்டு பாடிடுங்கள்.
............ (பறவை)

அன்புக்கு மாபெரும் மகத்துவம் தந்தார்
ஒற்றுமை நெறி வகுத்தார்
வன்புக்குச் சாமணி அடித்துமே நின்றார்
பிளவினை வெறுத்து நின்றார் — எனவே
ஒருசிந்து பாடிடுங்கள் — இனிய
குரல்கொண்டு பாடிடுங்கள்.
............ (பறவை)

உந்தனைப் போலுன் அயலவன் தனைநீ
நேசிக்க வேண்டுமென்றார்
பன்முறை ஒருவரின் பிழைதனை மன்னித்து
வாழ்தலே சிறப்பு என்றார் - எனவே
ஒரு சிந்து பாடிடுங்கள் - இனிய
குரல்கொண்டு பாடிடுங்கள்
............ (பறவை)

குழந்தையைப் போல உள்ளங்கள் இருந்தால்
இறைவனைக் காண்பீர் என்றார்
அகந்தையை அகற்றி இதயத்தை விருத்தி
செய்தலே மாட்சி என்றார் - எனவே
ஒரு சிந்து பாடிடுங்கள் - இனிய
குரல் கொண்டு பாடிடுங்கள்.
............ (பறவை)

- திருமகன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றெஜினாவின் கருணை உள்ளம்!

சஞ்சீவி சிறுகதை

அன்றைக்கு அவனுடைய மனம் வேறெதையுமே யோசிக்காது, கீழ்த்திசை வானத்தில் மட்டுமே கவனஞ் செலுத்தியது. நேரம் காலை எட்டுமணியிருக்கும். காற்று வீழ்ந்துவிட்டதனுல் இலைகளும் தளிர்களுங்கூட அசையவில்லை. அவனுடைய பெருமூச்சுகாட்டுந்தான் அடிக்கடி வெளிச்சென்றுஎந்தச்செடிகளுக்கருகில் அவன் அமர்ந்திருந்தானே அந்தச் செடிகளைச் சிறிதளவு அசைத்து ஆடவைத்தது.

'காலத்தை எம்மால் வெல்லமுடியாது — காலமே எம்மை வென்றுவிடுகிறது, என்று 'முகை வெடித்த மொட்டு' என்ற நாவலில் வரும் அந்த வரிகளை அவன் சிந்தித்தவாறே எழுந்தான் தனது வீட்டுக்குள் செல்வதற்காக.

அது ஒரு குடிசை. மண் சுவர்களால் அமைக்கப்பட்ட அந்தக் குடிசையின் கூரை தென்னோலையால் வேயப்பட்டது சிறியதொரு குடிசை என்றே சொல்லவேண்டும். ஓர் அறை—அந்த அறைமுன் ஒருவிருந்தை—பக்கத்தில் ஒரு குசினி இதுதான் அந்தக் குடிசை.

அந்தக் குடிசைக்குள் காலடிவைத்த அவன், தன் மனைவியின் படத்தைநிமிர்ந்து பார்த்து பெருமூச்செறிந்தான். 'பார்வதி, உன்னை நான் இழந்ததாலே எல்லாத்தையும் இழந்துபோனன். என்னோடை நீ வாழ்ந்த காலமெல்லாம் என்ரை வீட்டிலை நீ ஒரு சரஸ்வதிதான். எல்லாத்திலேயும் எனக்கொரு திருப்தியிருந்தது. சாப்பாட்டுக்கோ துணிமணிக்கோ எந்தக்குறையுமில்லாமல், இந்தக் குடும்பம் காலங்கடத்தியதை இந்தப் பொன்னம்மான் கிராமம் அறியும் ஆனல் இப்ப...'

மாணிக்கத்தின் பெருமூச்சு அந்த மண்சுவர்களில் முட்டி நின்றுவிட்டது. உண்மையிலே ஒரு பக்குவமான பெண்தான் பார்வதி. சகல விஷயங்களையும் அலசி ஆராய்ந்து செய்யும் திறனுடையவள். பக்குவமானவள் மட்டுமல்ல-பண்பும் உள்ளவள் மாணிக்கத்தின் மாதவருவாய் போதாதென்பதால் ஒரு கைமெசினை வைத்து, அந்தக் கிராமத்துச் சிறுவர்களுக்கு உடுப்புத் தைத்துக்கொடுத்து அதனுல் வந்த ஊதியத்தைத் தன் குடும்ப நன்மைக்காகப் பயன்படுத்தியவள் அவள். இன்றைக்கு அவள் இருந்திருந்தால், ஐம்பது வயதை எட்டிப்பிடித்திருப்பாள். அவளின் இறப்பு அந்தக் குடும்பத்துக்கேற்பட்ட ஒரு துர் அதிஷ்டந்தான்

சென்ற ஆண்டு நொவெம்பரில் பிள்ளைப் பேறுக்காக அவஸ்தைப்பட்ட அவளை, யாழ்/பொது வைத்தியசாலைக்கோ, பிரத்தியேக மருத்துவமனைக்கோ கொண்டு செல்லமுடியாத சூழ்நிலையில் அவள் இறந்துவிட்டாள் அதை நினைத்தபோது மாணிக்கம் பெருமூச்சோடு மட்டும் நின்றுவிடவில்லை தனது பாதம் மிதித்த அந்த இடத்தையும் நனைத்துவிட்டான் கண்ணீரால்.

'காலத்தை எம்மால் வெல்லமுடியாது—காலமே எம்மை வென்றுவிடுகிறது' என்பது பார்வதியின் வாழ்வில் உண்மையாகிவிட்டதை எண்ணியவாறு வீட்டுக்குள் சென்ற அவன் வேட்டியை மாற்றி ஒரு துவாய்த் துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு வெளியேறினன்.

மாணிக்கம் சென்றது கந்தர் மடத்தை நோக்கித்தான். தனக்கு ஏதாவது வேலை கிடைக்குமோ என்ற அங்கலாய்ப்போடு சென்றுன். அன்றும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலி அடைத்தல், விறகு கொத்துதல், கூலியால் போடுதல், குழை வெட்டுதல் போன்ற வேலைகளைச்செய்தே வாழ்க்கை நடத்துபவன் அவன். அறுபது வயதை எட்டியிருக்கும் அவனுக்கு வேலை கொடுக்க எவருமே பின் நிற்பதில்லை தயங்காமல் கொடுப்பார்கள். அவனது நேர்மையே அதற்குக் காரணமாயிருந்தது.

இந்த மாதம் அவனுக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. விடாது மழை பெய்துகொண்டிருந்ததும், அதற்கொரு காரணந்தான்.

வேலை கிடைக்கவில்லையே என்ற மனத்தாங்கலோடு வீடு திரும்பினன் மாணிக்கம். தன் மகள் றெஜினாவுக்கு, கிறிஸ்மஸ் உடுப்பு எடுப்பதற்குக் காசில்லை என்ற மனப்பாரம் அவனுக்கு. கடன்பட்டு வாங்கினுல், அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பது எப்படி என்பதால், அந்த நிலைப்பாட்டையும் அவன் விரும்பவில்லை. அப்படி வாங்குவதை றெஜினுவும் வெறுப்பவள்.

பதின்மூன்று வயதுச் சிறுமி இந்த றெஜின. மாணிக்கத்துக்கும் பார்வதிக்கும் பிறந்த முதலாவது குழந்தை தான் அவள். இப்போதிருக்கும் கடைசிக் குழந்தையும் அவள் தான். ஒன்பதாவது ஆண்டில் படித்துக்கொண்டிருக்கிருள். கெட்டிக்காரச் சிறுமி என்று அவளுடைய ஆசிரியைகளும் ஆசிரியர்களும் அவளது முகத்துக்கு நேர் சொல்லாவிட்டாலும், மற்றையோர்க்குச் சொல்லிக் கொள்வார்கள் — சொல்வதில் பெருமையுங் கொள்வார்கள். படிப்பில் சிறந்தவள் என்றுல், ஒழுக்கத்தில......? அதை விடச் சிறந்தவள். மேடைப் பேச்சில், நாடக நடிப்பில், விளையாட்டுத் துறையில் அவளுக்கு நிகர் அவள் தான்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை எட்டு மணிக்கு, அவள் தவருது ஆலயத்தில் நிற்பாள். ஒழுங்காக வேதம் படிப்பதிலும், ஜெபம் செய்வதிலும் அவள் ஒரு தனி ரகம். பார்வதியிடம் குடிகொண்டிருந்த நற்பண்புகள், றெஜினாவிடமும் வளர்வதைக் கண்டு, பலரும் அவளுக்கு ஆதரவு காட்டினர்கள். அந்த அளவுக்கு அவள் நல்லவளாகவே வளர்ந்தாள்.

அப்படிப்பட்ட தன் மகளுக்கு, கிறிஸ்மஸ் உடை இம்முறை வாங்கவில்லையே என்ற மனப் பாரத்தோடு வீடு திரும்பிய மாணிக்கம், விருந்தையில் அமர்ந்திருந்த சிறிது நேரத்தால், தேநீர்க் கோப்பையுடன் வந்து நின்றுள் றெஜினு.

'றெஜினு, இந்த மாசம் எனக்குப் போதிய வருவாயில்லாமற் போனதாலே, உனக்குப் புதுச்சட்டை வாங்கித் தரக் கூட, என்னுலே முடியேல்லே. அப்பா வாங்கித் தரேல்லையெண்டு, கவலைப் படக்கூடாதம்மா. அடுத்த முறைக் கிறிஸ்மஸுக்கு வங்கித் தாறன்' என்று தகப்பன் சொன்னதைக் கேட்ட றெஜினு அவரின் கண்களிலிருந்து வடியும் நீர்த்துளிகளையும் அவதானித்தாள்.

சின்ன விஷயங்குறித்து என்றுமே அழாத தனது தந்தை, ஒரு சின்ன விஷயத்துக்காக இன்று அழுவதை அவளால் தாங்க முடியவில்லை. அவருடைய கண்களிலே மல்கிய நீர்த்துளிகளை, தனது விரல்களால் துடைத்தெறிந்தாள் அவள்.

அடுத்தடுத்த வீடுகளில், கிறிஸ்ஸ் ஆரவாரத்தொனிகள் கேட்டவண்ணமிருந்தன. 'மகளே அடுத்த வீடுகளில் கிறிஸ்மஸ் விருந்துவைச்சு, கிறிஸ்மஸ் கொண்டாடினம். ஆனல் இந்த வீட்டிலே......'' மாணிக்கத்தால் வசனத்தை முடிக்க முடியவில்லை. அவனது அழுகையோ விம்மலாக மாறியது.

'அப்பா, விருந்து வைச்சு ஆரவாரம் செய்வதாலோ, இலவ்லையெண்டால் ஒரு சிலர் செய்வது போலே, குடிச்சு வெறிச்சு ஆடிப்பாடுவதாலோ, கிறிஸ்மஸ் கொண்டாடியிட்டம் — கிறிஸ்துவை மகிமைப்படுத்தியிட்டம் எண்டு நினைக்கிறது தவறப்பா. இதெல்லாம் கிறிஸ்துவைத் திருப்திப்படுத்தாது. கிறிஸ்துவை நாங்கள் மகிமைப்படுத்த வேணுமெண்டால் அந்தக் கிறிஸ்து சொன்ன வழிகளைப் பின்பற்றி நடப்பதுகானப்பா முறை. புதுச்சட்டை போடேல்லை விருந்து வைக்கேல்லை எண்டு கவலைப்பட வேண்டியதில்லை.



கிறிஸ்து மறுபடியும் பிறந்திருக்கிறார் எங்களுக்கு நன்மை செய்யிறதுக்காக. ஆனபடியால், எங்களுக்கு நன்மை பிறக்கப்போகுது என்ட நைரியத்தோடை வாழவேண்டியது தன், இயேசு கிறிஸ்துவை நம்பிறவர்களுக்குரிய கடமை'

றெஜினு சொன்னதைக் கேட்ட மாணிக்கம் ஒருகணம் திகைத்துப் போனன். ஒரு சிறுமியின் வாயிலிருந்து வரும் இந்த வார்த்தைகள் அவனை வாயடைக்கச் செய்து விட்டன.

'ஓய்வுநாட் பாடசாலையில் (சண்டே ஸ்கூல்) இப்பிடியெல்லாம் சொல்லித்தாறவரப்பா எங்கடை போதகர்' என்று றெஜினு சொன்னபோது, இறைவனின் பண்புகள் எத்தகை அழுத்தத்தை றெஜினுவின் மனதில் பதித்து, அவளை நல்லவளாக்கி வளர்த்து வருகின்றன என்பதை நினைத்த மாணிக்கத்தின் கண்கள் பொங்கிப் பூரித்து, ஆனந்தக் கண்ணீரைப் பொழிந்து மகிழ்ந்தன.

அன்று மார்கழி 25 ஆம் திகதி. வழமைபோல் அதிகாலை 5 - 30 மணிக்கே இருவரும் எழுந்து சமையலை ஆரம்பித்தனர். மாணிக்கம் வழக்கமாகச் செய்யும் தேங்காய் துருவுதலையும், வெங்காயம் மிளகாய் வெட்டுதலையும், கிணற்றில் நீர் அள்ளிக் கொடுத்தலையும் செய்து முடித்தான். றெஜினு ஒரு சோறும், மீன் குழம்பும், ஒரு மரக்கறியும் ஆக்கி முடித்தாள். அன்றன்றைக்குத் தேவையான

**- நவாலியூர் சி. என். செல்லத்துரை -**

மீனையும் காய்கறி வகைகளையும் முதல்நாளே வாங்கி வைப்பது அவர்களின் வழக்கம். அதனுல் தான் அதிகாலை ஐந்தரை மணிக்குத் தொடங்கும் சமையல் காலை ஏழரை மணிக்கு முடிந்து விடும் அன்றும் ஏழரை மணிக்குச் சமையலை முடித்து விட்டு, தங்கள் தங்கள் வேலைகளில் கவனம் செலுத்தினர் இருவரும்.

அன்று மாலை நான்கு மணிக்கு, யாழ்'பல்கலைக்கழக வளாகத்துக்குரிய சி. எஸ். ஐ. ஆலயத்தில், 'கிறிஸ்மஸ் மரம்' என்றழைக்கப்படும் சிறுவர்க்கான பரிசு நிழ்ச்சிக் கொண்டாட்டம் போவதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள் றெஜினு. தன்னுடைய சட்டைகளில் நல்லதொன்றை எடுத்துப் பார்த்த அவளின் கண்களிலே ஒரு புதுச்சட்டையும் தென்பட்டது அதை எடுத்துக்கொண்டு தன் தகப்பனிடம் சென்றுள்.

'அப்பா......'

'என்னம்மா'

'இதிலை ரெண்டு சட்டை இருக்கப்பா. போன வருஷம் என்ரை பிறந்தநாளுக்கு; என்ரை அம்மா துணி வாங்கித் தன்ரை கையாலை தைச்சுத் தந்தது இந்தப் பச்சை நிறச் சட்டை. மற்றது, சண்டே ஸ்கூல் பரிசாக எனக்குக் கிடைச்ச நீலச்சட்டை. இதை நான் கொஞ்ச நாட்கள் போட்டிட்டு, என்ரை கையாலை கழுவி 'அயன்' பண்ணி வைச்சனுன். ஆனல், இந்தப் பச்சைச் சட்டையைப் போடாமல் புதிசாகவே வைச்சிட்டன்'

'இண்டைக்கு நீ அதைப் போட்டுக்கொண்டு ஆலயத்துக்குப் போம்மா'

'வேண்டாமப்பா, எங்களை விட மிகமிகக் கஷ்டத்திலையிருக்கிற அந்த மேரிக்குக் கொடுக்கட்டாப்பா'

'றெஜினு'

மாணிக்கத்தால் மேலும் பேசமுடியவில்லை. அசந்துபோய் நின்றுவிட்டான். கிறிஸ்மஸுக்குப் போடப் புதுச்சட்டையொன்றுகிடைத்தும் அதைத் தானே போடாமல் இனனொரு பிள்ளைக்குக் கொடுக்க நினைத்த றெஜினுவின் செயலை நினைத்தபோது சிலைபோல நின்றுன் அவன். அப்படி நின்றவனை நிமிர்ந்து பார்த்த றெஜினு—

'உங்கடை சம்மதம் இல்லாட்டால் நான் கொடுக்கேல்லை அப்பா' என்று சொன்னதும் சிறு புன்னகையை வரவழைத்தான் மாணிக்கம்.

'நீ குடுக்க நினைச்சால் என்னை ஏனம்மா கேக்க வேணும் குடுக்கிறது தானே. கொடுத்தார்க்குக் குறை வில்லை.'

'அப்பா நான் எதைச் செய்தாலும் உங்களைக் கேட்டுத்தான் செய்வேன். அம்மா எங்களோடை வாழ்ந்த காலத்திலை இதைத்தான் அடிக்கடி எனக்கு ஊட்டுவா.

'உன்ரை அப்பா குடிவெறி இல்லாதவர் றெஜினு. சண்டை சச்சரவு தெரியாதவர். யாராவது அவரை ஏசினுலும் அதற்கு எதிர்வார்த்தை பேசாமல் வீட்டுக்கு வந்திடுவார். எந்தவித கரைச்சலும் எங்களுக்குத் தாராமல் எங்களைக் காப்பாற்றுகின்றவர் அவர். அப்படிப்பட்ட உன்ரை அப்பாவுக்கு நீ எப்பவும் நன்றியாயிருக்கவேணும் அதுமட்டுமில்லையம்மா நீ எங்கை போனுலும் எதைச் செய்தாலும் அப்பாவைக் கேட்டுத்தான் செயல்பட வேணும் எண்டு அம்மா சொன்னதையும் என்ரை மனத்திலை நான் பதிச்சுவைச்சிட்டன். அதனுலதான் உங்களைக் கேக்கிறனப்பா. உங்கடைபூரண சம்மதத்தோடையும் சந்தோஷத்தோடையும் தானெந்தக்காலத்திலும் நான் எதையும் செய்வேன்.' என்று றெஜினு முடித்தபோது மாணிக்கத்தின இதழ்களிலே புன்னகை ஊர்ந்தது.

'இந்த ஏழைகளில் ஒருவருக்குச் செய்யும் அந்த உதவி தான் கடவுளுக்கு நாங்கள் செய்யிற உதவி' இதை நான் நேசித்து நடப்பவனம்மா, எனக்குப் பூரண சம்மதம் பூரண சந்தோஷம் நீ குடம்மா.'

றெஜினு உடுத்துக்கொண்டு அடுத்த தெருவில் இருக்கும் மேரியிடம் போகிருள். நேரம் மூன்று பதினைந்து. சுழன்றுகொண்டிருந்த மணிக்கூட்டுக் கம்பிகள் சரியாக நான்கு மணியைக் காட்டின,

ஆலய நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிறிஸ்மஸ் மரத்துக் கிளைகளில் கட்டப்பட்டிருந்த பரிசுப் பொருட்களை நன்றி கூறிப் பெற்றுக் கொண்டார்கள் ஓய்வுநாட் பாடசாலைச் சிறுவர்கள்.

ஆராதனை முடிந்ததும் போதகர் தனது சிற்றுரையைத் தொடங்கினர். அன்பு, தியாகம், மன்னிப்பு ஆகிய பண்புகளின் அடையாளமே இயேசு கிறிஸ்து. அந்த அடையாளங்களை நாங்கள் பின்பற்றினல் — கைக்கொண்டால் நாங்களும் நல்ல நிறைவை அடைந்து வாழலாம். ஆகவே இயேசு கிறிஸ்து பிறந்த இந்த நாளில் இயேசுவை உண்மையாகவும் உறுதியாகவும் பின்பற்றும் பலருக்கு நன்மை பிறப்பது ஆச்சரியமல்ல. அத்தகைய நன்மையைப் பெறும் ஒரு சிறுமி எமது ஆலயத்திலும் இருக்கிருள். அவள்தான் றெஜினு என்றதும் பாவசத்துக்கோபுரத்திலே மாணிக்கம் ஏருமல் இறைவனுக்கு நன்றியைக் கூறிக்கொண்டான் தனது உள்ளத்தால்.

கனேடிய அரசினுல் வழங்கப்படும் 'கெட்டிக்கார ஆனல் ஏழைச் சிறுவர்களுக்கான புலமைப்பரிசில்' இம்முறை ஆலயக் குருவானவர் வண. பிதா தேவ் ஆனந்தராசாவின் சிபாரிசினுல் சி. எஸ். ஐ. பிஷப் அவர்கள் றெஜினுவைத் தேர்ந்தெடுத்ததை ஆலயத்தில் அமர்ந்திருந்த அனைவரும் வரவேற்றுர்கள். ஆலய நிகழ்ச்சி முடிந்தது.

அடுத்த ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவியாகும் றெஜினுவை வாழ்த்தினுர்கள்

(யாவும் கற்பனை)

---

★ ★ ★

## "முருகன் கழல் சேர்ந்திட்டான்"

சீதாராமப் பெயர் கொண்டோன்
சீர்பெறுநற் குணசீலன்
வேதநெறி கற்றுணர்ந்தோன்
வேதியர் போற்ற வாழ்ந்தோன்
நீதிநெறி வழுவாச் செம் மல்
நிமலனடி மறவா நெஞ்சன்
ஆதவன் போல் மிளிர்ந்திருந்தான்
அமலன் அடி சேர்ந்திட்டான்.

அந்தணர் குலத்துதித்தோன்
அருமறைகள் கற்றுணர்ந்தோன்
சிந்தைக் கினிய நல் ஆசான்
சிவனடி மறவா நெஞ்சன்
நிந்தனை சொல்லா நாவன்
நீதிநெறி வழுவாச் செம்மல்
முந்தை வினைப் பயன் முற்றுறவே
முருகன் கழல் சேர்ந்திட்டான்.

— சி. சபாநாதன்

பரமேஸ்வரக் கல்லூரி ஆசானும், தலைசிறந்த வேதாகம அறிஞருமான வித்யாகரண சிரோன்மணி தி. கி. சீதாராம சாஸ்திரிகளின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்கும் கவிதை.

★ ★ ★

---

# வெற்றியே மனிதனின் சிந்தனையாகட்டும்!

ரோம புரிக் கவிஞர் வேர்ஜில் (Virgil) படகுப்போட்டி ஒன்றைப் பார்க்கிறன்.

அது பற்றிப் பின்வருமாறு அவன் வர்ணிக்கிருன்:

'அவர்களால் முடியும். ஏனெனில் முடியும் என்று சிந்தித்தே அவர்கள் செயல்படுகிருர்கள்

மனித இயந்திரத்தின் வேகத்தை வீழ்ச்சியடையச் செய்வது தாழ்வு மனப்பான்மையே அன்றி வேறு எதுவும் அல்ல.

தனது ஆற்றலில் திடநம்பிக்கை இருப்பது போன்று உற்சாகமளிப்பது வேறு எந்தச் செயலிலும் இல்லை.

வெற்றி காண்பேன் எனத் திடசங்கற்பமசெய்துகொண்ட ஒருவனுல்தான் வெற்றிகாண முடியும்.

சரியான சிந்தனைசெய்யும் ஆற்றல் சந்தர்ப்பம் என்னும் கதவின் தங்கத் திறவுகோல் போன்றது.

நீங்கள் எதிர்பார்த்த அளவு முன்னேற்றமடையாத நிலையில், மற்றொருவன் ஆச்சரியப்படத்தக்க முறையில் முன்னேற்றமடைந்தால், இதன் காரணத்தைக் கண்டறிய அதி தூரம் போகத் தேவையில்லை.

வெற்றிகாண முடியாது என்ற பயம் தொண்ணூறு சதவிகிதம் உங்களை ஆட்கொண்டுள்ளது. வேண்டும் என்ற முட்டுக்கட்டை போடுகிறீர்கள்.

அடுத்தவன் தனது ஆசைகள் நிறைவேறப்போகிறது என்று தொண்ணூறு சதவிகித நம்பிக்கையுடன இருக்கிறன்.

அவன் சரியானவழியில் சிந்திக்கிறன். நீங்கள் தவருன வழியில் சிந்திக்கிறீர்கள்.

உங்கள் ஆற்றலில் நம்பிக்கை வையுங்கள்.

நினைத்ததை முடிப்பேன் என்று எண்ணுங்கள்.

உங்களால் முடியும் என்று சொல்லிக்கொள்ளுங்கள் வெற்றியே உங்கள் சிந்தனையாகட்டும்.

உங்களினுள் இருக்கும் உள்ளுணர்வைப் பயன்படுத்துங்கள்.

உங்கள் ஆற்றலைப் பற்றி சில நிமிடங்கள் நித்திரைக்கு முன்னரும் பின்னரும் பெருமையோடு சிந்தியுங்கள்.

சிந்தனையற்றோர் இதைத் தன்னைத்தானே ஏமாற்றும் நினைப்பு என்பர்.

மனோதத்துவ நிபுணர்கள் இதைச் சுய உணர்வு, தனக்குத் தானே செய்து கொள்ளும் பிரதிக்ஞை என்பார்கள்.

செய்து முடிப்பேன் என வெறுமனே சிந்திப்பதால் மட்டும் இந்த உலகில் நீங்கள் எதையும் செய்து விடலாம் என்று நான் சொல்ல வரவில்லை.

ஆனல் அந்தச் சிந்தனை உங்கள் ஆற்றலை ஐம்பது சதவிகிதம் அதிகரிக்கும்.

சக்தி வாய்ந்த இயந்திரம் உங்கள் உதவிக்காக இருக்கும் போது, எதற்காக நீங்கள் வீணே முட்டுக்கட்டை போடுகிறீர்கள்?

மூலம்:- The Human Machine byE R Thompson, M.A.,

தமிழில் தருபவர்:
கே. சி. இராமநாதன்

---

## நீலவிழி என்று பெயர் வரக் காரணம்

நீலவிழி என்று பெண்கள் ஏன் அழைக்கப்படுகிறர்கள்?

நீலகண்டன் என்று இறைவனை அழைப்பது அவன் கழுத்தில் இருக்கும் விஷத்துக்காக. நீலவிழி என்று பெண்களை அழைப்பது அவர்கள் கண்களில் இருக்கும் விஷத்துக்காக!

இப்படிக் கூறியுள்ளார் கவிஞர் கண்ணதாசன். ★






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகம் ஏற்படுத்திய சாதனை

கின்னஸ் புத்தகம் எப்படி உருவானது?

அதுவே ஓர் உலக சாதனை.

கின்னஸ் மது தயாரிக்கும் நிறுவனத்தின் தலைவர் சேர் ஹியூ பீவர்.

1951 ஆம் ஆண்டில் இவர் அயர்லாந்தில் வேட்டைக்குச் சென்றார்.

அப்போது ஒரு பறவையைச் சுட்டார். அது தப்பிச் சென்றுவிட்டது.

அவருக்கு ஆச்சரியம் வந்தது. ஐரோப்பாவிலே ஆகக் கூடிய வேகத்தில் பறக்கும் பறவை அதுவாகத்தான் இருக்குமோ?

தான் தொகுத்து வைத்து இருந்த குறிப்புக்களை அவர் தட்டிப் பார்த்தார். சரியான தகவல் கிடைக்கவில்லை.

பிரிட்டனிலும் அயர்லாந்திலும் அச்சமயம் 84 ஆயிரத்துக்கும் அதிகமான மதுசாலைகள் இருந்தன.

அங்கு பலவிதமான சாதனைகள் பற்றி சூடான விவாதங்கள் நடப்பது சேர் பீவருக்குத் தெரிந்த விஷயம். அவற்றில் சிலவற்றுக்கு அவர் விஜயம் செய்யத் தொடங்கினார். விவரங்களைச் சேகரித்தார்.

பின்னர் ஓர் அலுவலகத்தை ஆரம்பித்தார். உலகின் பல பகுதிகளில் நிகழ்த்தப்படும் சாதனைகள் பற்றிய விவரங்களை ஆதாரபூர்வமான தஸ்தாவேஜுகள் அடிப்படையில் அந்த அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் சேகரிக்க ஆரம்பித்தனர்.

இப்படியாகச் சேகரிக்கப்பட்ட சாதனைகள் தான் 'கின்னஸ் சாதனை புத்தகம்' ஆக உருவெடுத்தது.

அதன் முதலாவது பதிப்பு 1955 இல் வெளியானது.

முதல் பதிப்பின் விற்பனையே அமோகமாக இருந்தது.

ஒரு சாதனைக்கு முக்கிய தேவைகளாக ஒப்புநோக்கும் அளவிடலும் கணிக்கப்படுகின்றன.

சாதனைகள் நிகழ்த்துவோர் பட்டியலில் யாராவது சேர விரும்பினால்—

விரிவான தஸ்தாவேஜு பூர்வமான ஆதாரங்கள்,

சுயேச்சையான பிரமுகர்களின் சத்தியக் கடதாசிகள்,

புகைப்படங்கள், அல்லது பத்திரிகைச் செய்திகள ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உயிருக்கும் அங்க அவயவங்களுக்கும் அபாயம் ஏற்படுத்தும் 'ஸ்டண்டு'களைச் செய்து சாதனை படைக்க விரும்புவர்களை கின்னஸ்' ஏற்றுக்கொள்ளாது.

அப்படி நிகழ்த்தப்பட்ட சாதனைகளை வெளியிடுவது இல்லை என்ற கொள்கையையும் 'கின்னஸ்' வெளியீட்டாளர்கள் வைத்திருக்கின்றனர்.

1955 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கின்னஸ் புத்தகம் உலகில் இடம்பெற்ற ஒரு லட்சத்து 40 ஆயிரம் சாதனைகளை வெளியிட்டிருக்கிறது.

கின்னஸ் புத்தகத்தின் ஒவ்வொரு பதிப்பும் 31 மொழிகளில் பிரசுரமாகிறது

6 கோடி பிரதிகள் விற்பனையாகின்றன.

பைபிளுக்கு அடுத்து உலகில் கூடுதலாக விற்பனையாகும் பெருமையை கின்னஸ் புத்தகம் பெற்றுள்ளது.

ஆகப் பிந்திய 35 ஆவது பதிப்பில் புதிய 15 ஆயிரம் சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் இடம்பெற்ற புத்தம் புதிய 3 ஆயிரம் சாதனைகளில் ஒன்று உலகின் மிகப் பெரிய பெண் பற்றியது.

2.33 மீற்றர் உயரமுள்ள இப்பெண் போர்ணியோவில் இருக்கிறார் இன்னும் அவர் வளர்ந்துகொண்டிருக்கிறார்.

இங்கிலாந்தில் வில்ட்ஷயர் என்னும் இடத்தில் 53 கிலோகிராம் எடையான முட்டைக் கோஸ் உற்பத்தியானது.

மிகவும் குறுகிய நேரத்தில் முடிவடைந்த குத்துச்சண்டைப் போட்டி 30-8-1987 இல் ஸ்பெயின் நாட்டில் மார்பெல்லா நகரில் இடம் பெற்றது. எடுத்துக்கொண்ட நேரம் 45 விநாடிகள்.

ஜேம்ஸ்வேல் என்ற பிரிட்டிஷ்காரர் ஒரு பிரமாண்டமான விருந்து ஒன்றில் 4,525 பெண்களை முத்தமிட்டார்.

இன்னொருவர் மூன்று ஆரஞ்சுப்பழங்களை நிலத்தில் விழாதபடி கைகளினால் 6 மணித்தியாலங்கள் 24 நிமிடங்கள் மேலே தூக்கி எறிந்து விளையாடினார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கல் டிக்ஸன் என்பவர் 160 கிலோ மீற்றர் தூரம் நித்திரையில் நடந்தார். ★

# புதிய ஜனாதிபதி புஷ் விதிக்கும் முதலாவது தடை!

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாக அடுத்த மாதம் 20 ஆம் திகதி பதவி ஏற்க இருக்கிறார் ஜோர்ஜ் புஷ்.

அதன் பின்னர் வெள்ளை மாளிகையில் நடைபெற்று வரும் புகைப்படச் செய்தியாளர் மாநாடுகளுக்குத் தடை விதிக்கப்போவதாக திரு. புஷ் அறிவித்திருக்கிறார்.

இம்மாநாடுகளில் செய்தியாளர்கள் ஜனாதிபதியை நோக்கி உரத்த குரலில் சத்தம் போட்டு கேள்வி கேட்பது புஷ்ஷுக்கு பிடிக்காத விஷயமாம்.

ஜனவரி 20 வரை வெள்ளை மாளிகை புகைப்படச் செய்தியாளர்கள் மாநாடு ஒழுங்காக நடைபெறும். அதன் பின்னர்—

'அப்படியான மாநாடு வெள்ளைமாளிகையில் நடத்தப்படுவதற்குத் தடைவிதிக்கப்படும்'— என்று கூறுகிறார் ஜோர்ஜ் புஷ்


பத்திரிகைகளுடன் வேறு வழிகளில் நான் தொடர்பு கொள்வேன்.

அது உங்களுக்கும் மகிழ்ச்சி தரும். எனக்கும் மகிழ்ச்சி தரும். விருந்தாளிகளுக்கும் மரியாதை கொடுப்பதாக அமையும்.

சத்தம்போட்டு கேள்வி கேட்பது உங்கள் தொழிலின் தரத்தைக் குறைப்பதாக இருக்காதா?'—

இப்படி பத்திரிகையாளரிடம் தெரிவித்துவிட்டார் ஜோர்ஜ் புஷ்.

றேகன் நிர்வாகத்தில்தான் புகைப்படச் செய்தியாளர்



ஜோர்ஜ் புஷ்

மாநாடு முறை ஆரம்பமாகி ஒழுங்காக வெள்ளைமாளிகையில் நடத்தப்பட்டுவருகிறது.

அதைத் தொடர்ந்து வாராந்தம் நடத்தப்படும் சாதாரண செய்தியாளர் மாநாடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

புகைப்படச் செய்தியாளர் மாநாட்டுக்குத் தடை விதித்தால் அதை ஈடுசெய்ய வாராந்தம் நடத்தப்படும் செய்தியாளர் மாநாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பீர்களா?

'அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். ஆனால் அடிக்கடி உங்களைச் சந்திப்பேன்'— என்று கூறும் புஷ்ஷுக்கு

ஹெலிக்கொப்டரில் ஏறும் போதும்,

விமானத்தளத்தில் வைத்தும், இரைச்சல் மத்தியில் ஜனாதிபதியை நோக்கி சத்தம் போட்டு செய்தியாளர்கள் கேள்விக்கணைகளை வீசுவது பிடிக்காத சங்கதியாம்.

'என்னிடமிருந்து பதிலைப் பெற செய்தியாளர்கள் கத்த வேண்டியதில்லை'— என்கிறார் புஷ்.

வெள்ளை மாளிகையில் உள்ள 'ஹெலிபாடி'ல் இருந்து 'ஹெலி'யில் ஏறும் முன்தான் அதிபர் றேகன் செய்தியாளரின் முக்கிய கேள்விகளுக்கு பதிலளிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

பத்திரிகையாளர் மேல் 'புஷ்'ஷுக்கு ஏன் இந்த கிலியோ! ★

# சிற்பி செதுக்காத பொற்சிலை

'சிற்பி செதுக்காத பொற்சிலையே' —என்பது இன்று உண்மையாகிவிட்டது.

இப்போது சிற்பிகளே செதுக்காமல் முழுக்க 'ரோபோ' மனிதன் சிலைகளைச் செதுக்கும் புதிய விஞ்ஞானக் கலை ஒன்று உருவாகி வருகிறது இன்றைய ஜப்பானில்!

இந்த விஞ்ஞானப் புதுமை யாரும் எதிர்பாராததுதான்.

இங்கே படத்தில் காணப்படுகிற இந்தப் பெண்சிலையை செதுக்கியது ரோபோதான்.

அதன் கூர் உளி போன்ற பாகங்கள் சிலைக்கு மேலும் மெருகூட்டுவதை படம் சித்தரிக்கிறது.

ரோபோ மனித இயந்திரத்தின் 3 உளிகளும் சேர்ந்து 2½ மணி நேரத்தில் தலை மற்றும் மார்புப் பகுதிவரையிலான சிலையைச்செதுக்கிவிட முடியுமாம்.

இதே சிலையை மனித சிற்பி செதுக்கினால் அதைச் செய்து முடிக்க சிலமாதங்கள் ஆகும். சிற்பியின் ஊதியமும் ரோபோவினால் ஆகும் செலவைவிட பலமடங்காகும்.

'ரோபோ' சிலை வடிக்கும் முறையே அலாதியானது; யாரைச் சிலையாக வடிக்க வேண்டுமோ அவரை 12 கமராக்கள் முதலில் படம் எடுக்கும். அப்போது 'ஸ்ட்ரோப் புரொஜக்டர்' என்ற கருவியில் இருந்து வெளிவரும் ஒளிக்கதிர்கள். முப்பரிமாண (த்ரீ டைமென்ஷனல்) உருவப்படத்தை 'கான்டர் லென்ஸ்' வடிவில் உருவாக்கும்.


இந்த உருவப்படத்தை ஆய்ந்து அறியும் கம்பியூட்டர் கருவியானது தான் சேகரித்த குறிப்புக்களை 'ரோபோ சிற்பி'க்கு அனுப்பி அவைகளைக் கிரகிக்கச் செய்யும். அதன்பிறகு எந்திரச் சிற்பி பணிகளைத் தொடங்கும்.

ஜப்பானின் உலகப் புகழ் பெற்ற தொழில் நிறுவனமான மிட்சுபிஷி அங்குள்ள மற்றொரு முன்னணி நிறுவனமான 'கிங்காஷா' வுடன் இணைந்து கூட்டு முயற்சியில் இத்தகைய ரோபோ சிற்பிகளை உருவாக்குகிறது.

இப்படி ஒரு யோசனை இந்த நிறுவனத்துக்கு அமெரிக்காவில் இருந்துதான் கிடைத்தது.

அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்களில் 'ஸ்க்ரூஸ்' என்னும் திருகாணியில் உண்டாகும் சேதாரங்களை மதிப்பீடுசெய்ய முப்பரிமாண உருவப்படங்களை உருவாக்கும்முறை பயன்படுத்தப்படுகிறது

அமெரிக்கக் கடற்படையின் இந்த யுக்தியைப் பின்பற்றி அதை மனித சிலைகளை உருவாக்கும் சிற்பக் கலையாக மாற்றிவிட்டது ஜப்பான் நிறுவனம். அதாவது உலக மக்களுக்கு பரவலாகப் பயன்படும் உன்னதக் கலையாக மாற்றி, அதை தொழில் ரீதியில் அமுலாக்கத் தொடங்கிவிட்டது மிட்சுபிஷி நிறுவனம்.



'ரோபோ' கூர் உளிகள்
பெண் சிலைக்கு பெருகூட்டும் காட்சி

இப்போது வெறுமனே புகைப்பட ஆல்பங்களை சேகரித்துவரும் நமக்கு இனித் தங்களின் முழு உருவத்தையும் சிலைகளாகக் காணும் வாய்ப்பு ஏற்படப்போகிறது.

வாழ்க்கையில் வெற்றி அடைந்த குறிப்பிட்ட சில பிரமுகர்களின் சிலைகளை மட்டுமே சிற்பிகள் இப்போது செதுக்கிவருகிறார்கள்.

'ரோபோ' சிற்பக் கலை நடைமுறைக்கு வந்துவிட்டால் போட்டோ ஸ்ருடியோக்களில் புகைப்படம் எடுப்பது போல் எமது சிலைகளையும் நாம் செய்துகொள்ளலாம்.

கற்பனையால் வளமாகும் கலை நுட்பத்தைக்கூட விற்பனைப்பொருளாக மாற்றி அமைக்கிறது ஜப்பானின் மதிநுட்பம். ★

## கஸ்தூரிமானே!

இமயமலையைச் சுற்றியுள்ள இந்தியா, நேபாளம், பூடான் ஆகிய நாடுகளில் கஸ்தூரி மான்கள் பெருமளவில் உள்ளன.

கடந்த ஆண்டு முதல் நான்கு மாதங்களில் மட்டும் சுமார் 54 ஆயிரம் கஸ்தூரி மான்கள் கொல்லப்பட்டன.

அவற்றின் கொம்புகளில் இருந்து தைலம் தயாரிக்கப்பட்டு அது ஜப்பானுக்கு அனுப்பப்படுகிறது.

ஆசிய நாடுகளில் மருந்துக்குப் பயன்படும் இந்தத் தைலம் ஒரு லீற்றர் 20 லட்சம் ரூபா (இலங்கைப் பணத்தில்) வுக்கு விற்பனையாகின்றது.

இத்தகவல்களை வாஷிங்டனில் உள்ள உலக நிறுவனம் ஒன்று வெளியிட்டிருக்கிறது. ★

# உலக அழிவுக்குக் காரணம் சூரியன்?

உலகில் தற்போது அடிக்கடி இடம் பெற்று வரும் இயற்கை அழிவுகளுக்கு சூரியனின்மேல் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

சூரியமண்டலத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் இன்னும் மோசமான இயற்கை அழிவுகளை உலகில் ஏற்படுத்தவிருப்பதாக இந்திய பௌதிக பேராசிரியர் ஜே. எஸ் ஸ்ரீவத்ஸவ எச்சரிக்கை செய்திருக்கிறார்.

லாகூர் ஹோல்கர் விஞ்ஞானக் கல்லூரியில் பேராசிரியராக இவர் பணியாற்றுகிறார்.

சூரியமண்டலத்தின் நடுப்பகுதியில் இருந்து கொஞ்சம் சூரியன் இடம் மாறியிருக்கிறது.

கடந்த 13 நூற்றாண்டுகளில் சூரியன் இப்படி இடம்மாறியது இரண்டு தடவைகள் தான்.

அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் உலகில் தொடராக பல இயற்கை அழிவுகள் ஏற்பட்டன.

இந்த இடமாற்றம் காரணமாக சூரியனில் கரும் புள்ளிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் புவியின் வெப்பநிலை மாற்றமடைந்து வருகிறது.

இது பூமியில் பலவீனமான பிராந்தியங்களில் வெடிப்புக்களை ஏற்படுத்தி நிலநடுக்கத்தை உருவாக்குகின்றன.

இப்படி பேராசிரியர் ஸ்ரீவத்ஸவா கருத்து வெளியிட்டிருக்கிறார். ★

# நூறுகோடி டாலர் பணம் இருந்தால் அமெரிக்க கோடீஸ்வரர் பட்டியலில் இடம்

கடந்த ஆண்டு ஜப்பான் நாடு, சர்வதேச பொருளாதாரத்தில் உச்ச நிலையை அடைந்தது.

அதை அடுத்து அமெரிக்க டாலர் மதிப்பு வீழ்ந்தது. பல அமெரிக்கக் கம்பெனிகளின் பங்கு மதிப்புக் குறைய ஆரம்பித்தது.

எவனும் இந்த மாற்றம் பெரும் கோடீஸ்வரர்களைப் பாதிக்கவில்லை.

மாறாக அமெரிக்காவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது.

'போர்பஸ்' என்ற அமெரிக்க சஞ்சிகை இது சம்பந்தமாக ஆய்வு ஒன்றை நடத்தியது.

அமெரிக்காவில் உள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 400 என்றும்,

அவர்களிடம் 22 ஆயிரம் கோடி டொலர் சொத்து உள்ளது என்றும் அந்த ஆய்வில் தெரியவந்தது.

இலங்கைப் பணத்தில் 6 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபா அந்த 400 அமெரிக்கர்களிடம் உள்ளது.

இச் சொத்துக்களின் மூலம்—

★ அமெரிக்க அரசின் பட்ஜெட்டில் உள்ள பற்றாக்குறையைப் போக்கி விடலாம்; அல்லது,

★ அமெரிக்க இராணுவத்தின் ஓராண்டு செலவைச் சமாளிக்கலாம்.

அமெரிக்கக் கோடீஸ்வரர்கள் வரிசையில் கடந்த நான்கு ஆண்டுகளாக முதலாவது இடத்தில் இருப்பவர் சாம் வோல்டன். இவரின் சொத்து மதிப்பு 670 கோடி டொலர்.

சர்வதேச அளவில் பார்த்தால் இவர் 5 ஆவது இடத்தைத் தான் பெறுகிறார்.

நூறு கோடி டொலருக்கு மேல் சொத்து வைத்து இருப்பின் அவர் பெயர் அமெரிக்க கோடீஸ்வரர் பட்டியலில் சேர்க்கப்படும். (எ - 4)

# 'மூன்று' எழுத்தில் உள்ள 'மூச்சு'

இயற்கை அன்னை பெற்றெடுத்த இந்த உலகில் உயிர் என்ற மூன்றெழுத்தோடு உடல் என்ற மூன்றெழுத்தில் உருவாகும் ஒரு குழந்தை 'அப்பா, அம்மா' என்ற மழலை பேசுவதும் மூன்றெழுத்துத்தான்.

ஐந்து வயதானதும் 'கல்வி' என்ற மூன்றெழுத்தைக் கற்று 'அறிவு' என்ற மூன்றெழுத்தில் தேர்ச்சியடைகிறான்.

வாலிபப் பருவம் வந்ததும் 'இளமை' என்ற மூன்றெழுத்தில் தன் 'திறமை' என்ற மூன்றெழுத்தைக் காட்டி 'தொழில்' என்ற மூன்றெழுத்தைத் தேடி 'பணம்' என்ற மூன்றெழுத்தைத் நாடி 'சுகம்' என்ற மூன்றெழுத்தை அடைகின்றான்.

களைப்பருவம் வந்ததும் 'காதல்' என்ற மூன்றெழுத்துக்கு 'உயிர்' கொடுக்க 'மனைவி' என்ற மூன்றெழுத்தை வாழ்க்கைத் துணைவியாக அடைந்து 'சுகம்' என்ற மூன்றெழுத்தை அனுபவிக்கின்றான்.

பின்னர் 'பிள்ளை' என்ற மூன்றெழுத்துக்கும் 'அப்பா' என்ற மூன்றெழுத்தால் அதிபதியாகின்றான்.

காலம் வந்ததும் 'வயது' என்ற மூன்றெழுத்து அதிகரித்து 'முதுமை' என்ற மூன்றெழுத்து முதிர்ந்தடைந்து முடிவில் 'உயிர்' என்ற மூன்றெழுத்து 'உடல்' என்ற மூன்றெழுத்தை விட்டுப் பிரிந்து 'பிணம்' என்ற மூன்றெழுத்து ஆகிவிடுகிறது.

தொகுத்தவர்:
நயினையூர் சிவம்.

## மகனுக்கும் மைந்தனுக்கும் என்ன வேறுபாடு?

ஒரு பொருளைப் பல பெயர்கள் குறிக்கும்.

ஆனால், ஒவ்வொன்றுக்கும் ஓர் அர்த்தம் இருக்கிறது.

மகனுக்குப் பல பெயர்கள் உண்டு.

பிள்ளை, மைந்தன், குமாரன், புத்திரன் என்றெல்லாம் மகனை அழைப்பார்கள்.

பிள்ளை: தொல்லை தரும் மகன்

மகன்: குடும்பத்தைக் காப்பாற்றுபவன்.



கிருபானந்த வாரியார்

மைந்தன்: குடும்பத்துடன் சுற்றத்தாரையும் தாங்க வல்லவன்.

குமாரன்: தந்தையை விட அறிவில் திறனில் மிக்கவன்.

புத்திரன்: தந்தையை நற்கதிக்கு அனுப்பவல்ல நல்லறம் செய்பவன

— வாரியார் உரையில் இருந்து. (எ- 4)

## தீக்கோழி

கல், ஆணி, கண்ணாடித் துண்டுகள் [illegible] தீக்கோழி [illegible] விழுங்கி விடும். இது 60 மைல் வேகத்தில் ஓடும். ★

## பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

# 4-4-1987 இல் ராஜீவ் எங்கே இருந்தார்?

கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் 4 ஆம் திகதி பிரதமர் ராஜீவ் காந்தி எங்கு இருந்தார்?

இத்தாலியிலா?

சுவீடனிலா?

அந்தமான் தீவிலா?

எங்குமே இல்லை.

உத்தரப் பிரதேசத்தில் சர்சாலா கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் இருந்தார் என்று அங்குள்ள பதிவேடுகள் கூறுகின்றன.

மறைந்த பெரோஸ் காந்தியின் மகன், இந்திய அரசின் பிரதமர் ராஜீவ்காந்தி 4-4-88 அன்று சர்சாலா ஆரம்ப சுகாதார மையத்தில் கருத்தடை சத்திரசிகிச்சை செய்துகொண்டார் என்று அங்குள்ள பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான சான்றிதழும் அந்த மையத்தின் முத்திரையோடு இருக்கிறது.

இந்தத் தவறு எப்படி நேர்ந்தது என்று தெரியவில்லை. ★

# எவரெஸ்டை எட்டிப் பிடித்த எட்டுப் பெண்கள்

எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்த பெண்கள் இதுவரை எட்டுப்பேர் என்று அறிவிக்கப்படுகிறது.

எட்டாவதாக எவரெஸ்டில் ஏறிய பெண் ஒரு 30 வயது கச்சுத்தொழிலாளி.

பெயர் ஸ்ரேஸி அலிஸன். அமெரிக்காவைச் சேர்ந்தவர். எவரெஸ்டில் ஏறிச் சாதனை படைக்க விரும்பி கடந்த ஆண்டு மலைஏறும் குழு ஒன்றுடன் சேர்ந்து கொண்டார். 8,300 மீற்றர் உயரம் சென்றபோது வீசிய பயங்கர பனிப்புயல் அவரின் முயற்சியைத் தோல்வி அடையச் செய்தது.

எனினும் அவர் சோர்ந்து விடவில்லை. மீண்டும் முயற்சித்தார். தென்கிழக்குப் பாதை வழியாக மலை ஏறினார். கடந்த ஜூலை மாதம் 29 இல் சிகரத்தை அடைந்து சாதனை படைத்தார். ★

## சூரியனில் மனிதனின் எடை

பூமியில் ஒரு மனிதன் 100 இறாத்தல் எடையுள்ளவனாக இருந்தால் அவன்—

சந்திரனில் 17 இறாத்தல்
புதனில் 29 இறாத்தல்
சுக்கிரனில் 86 இறாத்தல்
வியாழனில் 414 இறாத்தல்
யுரேனசில் 91 இறாத்தல்
நெப்டியூனில் 113 இறாத்தல்
புளூட்டோவில் 50 இறாத்தல்
சூரியனில் 2,790 இறாத்தல்

எடையுள்ளவனாக இருப்பான். ★

## செயற்கைக் குரல் சாதனம்

செயற்கைக் குரல் எழுப்பும் சாதனம் ஒன்றை ஜப்பான் நிபுணர்கள் உருவாக்கி உள்ளனர்.

இந்த சாதனம் ஜப்பானிய மொழி எழுத்துக்களை மனித குரலில் படிக்கிறது.

மொத்தம் 50 ஆயிரம் ஜப்பானிய வார்த்தைகள் இந்த சாதனத்துக்கு பரிச்சயமானது.

விரைவில் இச் சாதனம் விற்பனைக்கு வர உள்ளது.

இதன் விலை 4,500 ரூபாவில் இருந்து 6,200 ரூபா வரை இருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## தமிழ் இலக்கண வினாவிடை

க. பொ. த. உயர்தரம்

**(1) இடைச்சொல் என்றால் என்ன? இடைச்சொற்கள் சொல்லாக்கத்திற்கு பயன்படுமாற்றை விளக்குக.**

தனித்துநின்று பொருள் தராது பெயரையோ அல்லது வினைச்சொல்லையோ சார்ந்துநின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இடைச்சொற்களாகும் அவை

1. வேற்றுமை உருபுகள் 2. விகுதியுருபுகள்
3. இடைநிலைகள் 4. சாரியை உருபுகள்
5. உவம உருபுகள் 6. தத்தமக்கென பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்.
7. சுட்டுபொருள் இடைச்சொற்கள்
8. ஒலிக்குறிப்பு இடைச்சொற்கள்
9. இசைநிறை இடைச்சொற்கள் என ஒன்பது வகைப்படும்.

இத்தகைய இடைச்சொற்கள் தமிழ் சொல்லாக்கத்தில் சொல்லின் உருவ அமைப்புக்கும் பொருள், இட, கால வேறுபாடுகளை உணர்த்தவும் பயன்படுமாற்றை ஆராய்வோம்

**1. வேற்றுமை உருபுகள்**

பெயர்ச் சொல்லோடு சேர்ந்து பொருள் வேறுபாட்டினைத் தரும் வேற்றுமை உருபுகளும் இடைச்சொற்களாகும்.

1. கந்தன் அடித்தான்
2. கந்தன்+ஐ— கந்தனை அடித்தான்,

இரண்டாம் வாக்கியத்தின் பொருள் வேறுபாட்டிற்கு "ஐ" உருபே காரணமாயிற்று.

**2. விகுதி உருபுகள்**

பகுபதம் ஒன்றில் இறுதியில்வரும் பகாப்பதமே வகுதியாகும் இவை சொற்களின் பால், இட, காலவேறுபாடுகளை உணர்த்தும்.

பால்காட்டுவன அன், அள், ஆன், ஆள், அன, து

உ+ம் வந்தனன் அன், வந்தான் ஆன் — ஆண்பால்
வந்தனள் (அள்), வருவாள் (ஆள்) — பெண்பால்

போயின (அள) பலவின்பால் பறந்தது 'து' ஒன்றன்பால்

காலம் காட்டுவன கு, து, வேன் போன்றன

உ+ம் செய்கு (கு) எதிர்காலம்
பறந்தது (து) இறந்தகாலம்
பார்ப்பேன் (ஏன்) எதிர்காலம்.

இடவேறுபாடு (ஆய். கள்)
நீ செய்தாய் (ஆய்) முன்னிலை
அவர்கள் (கள்) படர்க்கை

**3. இடைநிலைகள்**

இவை வினைச்சொற்களில் பெரும்பாலும் காலத்தை உணர்த்தும்.

தீ. ந் (இறந்தகாலம்)
உ+ம் பார்+த்+த்+ஆன் (த்)
ப் வ் எதிர்காலம் பார்+ப்+ஆன் (ப்)
கின்று, கிறு (நிகழ்காலம்)
வருகிறான்—வரு+கிறு+ஆன்
வருகின்றான்—வரு+கின்று+ஆன்

**4 சாரியை உருபுகள்**

இவை சொற்களின் ஓசைச் சிறப்பை உணர்த்தும்
வந்தனன்—வா+ந்+த்+அன்+அன்
அன்விகுதிக்கு முன்வந்த 'அன்' சாரியை இடைச்சொல்

**5. உவம உருபுகள்**

சொல்வாக்கத்தில் உவமானங்களோடு உவமேயங்களை இணைக்கப் பயன்படும் (போன்ற, போல, புரைய) என்பன

உ+ம் மயில் போல வந்தாள்
குயில் போன்ற குரல்

**6. ஏ, ஓ, உம் போன்றன தம் தமக்குரிய பல பொருள்களை பெயர்ச் சொற்களோடு சேர்ந்து உணர்த்தும்**

உ+ம் ஏகார இடைச்சொல் (ஏ)
பிரிநிலை—மலர்களுள் மல்லிகையே சிறந்தது 'மலர்களுள்' மல்லிகையை பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை
தேற்றம்—உண்டால் உண்டே உயரிய சிறப்பு
வினா—அவன் வந்தவனே?
எண்—நிலமே, தீயே, காற்றே,

ஓகார இடைச்சொல் (ஓ) ஒழியிசை, வினா, உயர்வு சிறப்பு இழிவு சிறப்பு முதலிய பல பொருள்களை உணர்த்தும்

உ+ம் வினா—அவரோவந்தவர்?
ஒழியசை—படிக்கவோவந்தாய்
உயர்வு சிறப்பு—ஓ என்ன அழகான காட்சி
இழிவுசிறப்பு—ஓ என்ன கொடுமை

உம்மை இடைச்சொல் (உம்)
எதிர்மறை—இணைப்பு, உயர்வு சிறப்பு முதலிய பத்துப் பொருளில் வரும்
எதிர்மறை! களவு செய்தாலும் பொய் சொல்லாதே (களவு செய்யக்கூடாது)
உயர்வு சிறப்பு—கம்பனும் வியக்கும் பாடல்
இணைப்பு—அவனும் அவளும் ஆடினார்கள்
இழிவு சிறப்பு—நாயும் தின்னாச் சோறு

**7. அ, இ, உ என்பன சுட்டுபொருள் உணர்த்தும் இடைச்சொற்களாகும்**

உ+ம் அ—அது, இ—இது, உ—உது

**8. ஒலிக்குறிப்பு இடைச் சொற்கள்**

(விரைவு, அச்சம் முதலிய ஒலிக்குறிப்புகளை உணர்த்துவன)

உ+ம சடக்கென—சடக்கென அடித்தான் (விரைவு)
துணுக்கென—துணுக்கென இருந்தது (அச்சம்)
பொள்ளென—பொள்ளெனவீழ்ந்தது(விரைவு)

**9. இசைநிலை இடைச் சொற்கள்**

பாடல்களில் இசை நிறைவுக்காய் வரும் ஏ, ஏ, மன், அரோ போன்றன

உ+ம வந்தனரோ (அரோ)

இவ்வாறு ஒன்பதுவகை இடைச்சொற்களும் பொருள் வேறுபாடு 'திணை, பாலிட, வகுப்பு குறிப்பாக பொருள் உணர்தல் என்பவற்றால் சொல்லாக்கத்திற்கு பெரிதும் துணை புரிகின்றன.

தயாரிப்பு: வேலணையூர் தாஸ்

---

# மாணவரின் ஆளுமை விருத்திக்கு உதவும்

# 'நாடகமும் அரங்கியலும்'பாடநெறி!

நாடகமும் அரங்கியலும் என்ற பாடநெறி உலக நாடகத்திலிருந்து தமிழ் நாடக வரலாறு, அரங்கியற் செய்முறை ஆகிய 3 பகுதிகளை உள்ளடக்கியது.

தமிழ் நாடக வரலாறு சங்ககால இலக்கியத்திலிருந்து இன்றுவரை இலங்கை, (சிங்களம் உட்பட) இந்திய தமிழ் நாடக வரலாற்றைக்கொண்டது.

உலக நாடக வரலாறு கிரேக்க, ரோமானிய, சமஸ்கிருத மத்தியகால, நவீன ரஷ்ய, அமெரிக்க மற்றும் மேற்கு நாடுகளின் நாடக வரலாற்றைக் கொண்டது.

அரங்கியற் செய்முறையானது அரங்க நிர்மாணம், நடிப்பு, ரசனையும் மதிப்பீடும் அரங்க நெறியாள்கை எனபவற்றை அடிப்படையாகக் கொண்டது.

தமிழில் நாடகம் திறமையான முறையில் நடைபெற வேண்டுமெனில் நாடகம் பற்றிய முறையான அறிவு அவசியம் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

எனவே இப்பாடப் பிரிவை அறிமுகம் செய்தற் பொருட்டும் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவரின் தேவை கருதியும் இக்கட்டுரை அமைகிறது

### வகுப்பறையிலிருந்து மேடைவரை

இன்று நாடகங்கள் பாடசாலை வாழ்க்கையில் மிகப் பெரிய இடத்தை வகிக்கின்றன. அது ஒரு பாடமாகப் போதிக்கப்படுவதுடன் மட்டுமல்லாது ஏனைய பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஒரு கற்பித்தல் முறையாகவும் உள்ளது

முக்கியமாக மொழி கற்பித்தலுக்கு நாடகம் உதவுகிறது. அத்துடன் பாடசாலையின் ஆக்க வெளிப்பாட்டைப் பொதுமக்களுக்குக் காட்டுவதற்கும் நாடகம் உதவும்

கடந்த காலங்களில் நாடகம் நாடகத்துக்காகவே நடத்தப்பட்டது. அது பாடசாலை முடிந்ததும் ஒத்திகை செய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட நாளுடன் முடிவடைந்தது. அது பாடசாலையின் 'காத்திரமானவேலை'யுடன் தலையிடக் கூடாததாக அமைந்தது.

இன்று (இலங்கையில் அல்ல) பெரும்பாலான பாடசாலைகளில் நிலைமை மாறிவிட்டது. மரபு வழி ஆசிரியர் கூட நாடகம் அறிவு மலர்ச்சியை (Intellectual Development) ஏற்படுத்த உதவும் என உணர்ந்துள்ளனர். கல்விச் சேவையானது முழுமையான விளக்கத்தைக் கொண்டது என்ற வகையில் நாடகம் பல தனிப்பட்ட பெறுமதிகளை உள்ளடக்கியுள்ளது.

பல ஆங்கில (மொழி, இலக்கிய) ஆசிரியர் நாடகத்தைத் தமது பல தேவைகளுக்காகப். பாட நேரங்களில் உபயோகிக்கின்றனர். அத்துடன் இன்று ஒருபாடம் என்ற முறையில் வேறு பகிரங்க தயாரிப்புகள் (Public Production) பலவற்றிலும் அது சுதந்திரமானதாகக் கருதப்படுகின்றது.

ஆனால் பாடசாலை நாடகம் வகுப்பறையிற் செய்யப்படும் நாடகவியல் வேலைகளில் தங்கி நிற்கிறது என்பதை ஆசிரியர் உணர்கிறார். ஒரு பாடசாலை நாடகத்தை பரீட்சிக்குமுன் அதற்காக நாங்கள் அது வகுப்பில் எந்த இடத்தை வகிக்கிறது பகிரங்க அறிக்கைகளை எவ்வாறு பாதிக்கிறது என்ற இரு விஷயங்கள் தொடர்புள்ளவையாயிருந்தலை அவதானிக்கிறோம்.

### வகுப்பறையில் நாடகம்

வகுப்பறையில் நாடகமானது ஒவ்வொரு பிள்ளையினதும் ஆளுமை விருத்திக்கு மிகவும் முக்கியமானது. அது சுதந்திரமான பாடசாலைநாடகத்திலும், ஒவ்வொரு கிழமையும் அம்மாணவன் தரிசிக்கும் வெளிநாடகங்களிலும் தங்கி உள்ளது.

வகுப்பறையில் நாம் என்ன செய்கிறோமோ அது மேடையில் நாம் நடிக்கும் நாடகத்தைப் பாதிக்கும் இன்னொரு வகையில் சொன்னால், அது வகுப்பறை வேலைகளுக்கு அப்பாலானதாகவளரும்.

நாடகம்பாடநேரத்தில் நிகழும்போது புத்தாக்கம்(Improvisation) முக்கிய இடத்தை வகிக்கும்.

மாணவர் தமது நாடகத்தைத் தாமே தயாரிப்பர். தமது சொற்களைப் படைப்பர். நாடகத்தில் தமது அசைவுகளை உருவாக்குவோர் —இது மாணவர் தங்களைத் தாங்களே நிலைநிறுத்த உதவும்.

நாடகத்தின்மூலம் பிள்ளைகளின் புத்தாக்கத் திறனை-இயற்கைத்திறனை, தூண்டுவதுடன் ஒவ்வொரு பிள்ளைகளுக்குமான நடத்தை மாதிரிகளை, வினைத்திறன்களை, வலிமைகளை வழிநடத்தமுடியும். ★

"நாடகமும அரங்கியலும்" என்ற பாடநெறி 1979 இல் க. பொ. த. உயர்தர வகுப்புக்கு தமிழ் மொழியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1985 ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக ஒரு தமிழ்ப் பாடசாலையில் பாடநெறியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கற்பிக்கப்படத்தொடங்கியது

அந்தப்பெருமை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபருக்கே உரியது.

எந்த ஒரு கல்லூரி அதிபரும் 'பரீட்சிக்க' நினைக்காத ஒரு துறையைப் பாடநெறியாக்க அவர் ஒப்புக்கொண்டது, மாணவரில் அவர் கொண்ட ஈடுபாட்டைக் காட்டும்

இம்முயற்சிக்கு நாடக அரங்கக் கல்லூரி இயக்குநர் குழந்தை ம சண்முகலிங்கம் அவர்களும் உதவி வருகிறார்

சென்ற ஆண்டு தொடக்கம் உடுவில் மகளிர் கல்லூரியும் அதனைப் பாடநெறியாக்கியுள்ளது" —இப்படிக் கட்டுரையாளர் கூறுகிறார்.

அர்மன்கிளி முருகதாஸ் எம், ஏ.

---



## கிறிஸ்மஸ் கரோல் பிறந்த விதம்

கிறிஸ்மஸ் கரோல் பிறந்தது எப்படி...

இயேசுகிறிஸ்து பிறந்த நாளன்று கிறிஸ்மஸ் கரோல் என்ற பாட்டுபாடும் வழக்கம் இன்று உலகெங்கும் காணப்படுகின்றது.

இக் கிறிஸ்மஸ் கரோல் 1223 ஆம் ஆண்டு முதல் பாடப்பட்டு வருகின்றது

'புனித பிரான்சிஸ்' என்ற துறவி இத்தாலிய நாட்டின் நலிந்த மக்கள் வசிக்கும் குடிசைப் பகுதி மக்களுக்கு இயற்கையின் படைப்புகள் அத்தனையையும் காட்டியவாறு வந்தார்.

அவர் காட்டிய இயற்கையின் அழகில் மெய்மறந்த சிறுவர்கள் மகிழ்ச்சியால் பாட்டுப்பாட ஆரம்பித்தார்களாம்.

அதுவே இப்போது பாடப்படும் கிறிஸ்மஸ் கரோல் பாட்டுகளாம்.

—தி. தவபாலன்

## எறும்பு கற்பிக்கும் பாடம்

அது ஒரு பாடசாலை மைதானம். மாணவர்கள் தலைகால் தெரியாமல் விளையாடிக் கொண்டு நின்றனர்.

வரிசையாக எறும்புகள் இக்கரையிலிருந்து அக்கரைக்கு ஊர்வலம் போயின.

மாணவர்கள் மைதானத்தின் சகல பாகத்திலும் விளையாட்டை விரிவுபடுத்தினர்.

யாரோ ஒரு மாணவன் எறும்புகளின் ஊர்வலப் பாதையில் குறுக்கே நின்றுவிட்டான்.

ஊர்வலம் போன எறும்புகள் எல்லாம் அப்படியே ஸ்தம்பித்து ஒழுங்கு குலையாமல் நின்றன.

இந்த எறும்புகளைப் பார்த்து அந்த மாணவன் சொன்னான், 'இந்த எறும்புகள்தான் எவ்வளவு ஒழுங்கானவை' என்று.

எறும்புகள் சிரித்தன.

மாணவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது; 'ஏன் சிரிக்கிறீர்கள்' என்று அந்த எறும்புகளைப் பார்த்துக் கேட்டான்.

'ஆசிரியர் இல்லாமல் ஒழுங்காகச் செல்ல இன்னும் நீங்கள் கற்றுக்கொள்ளவில்லையே என்ற உங்கள் நிலையை எண்ணித்தான் நாங்கள் சிரிக்கிறோம்' என்று எறும்புகள் சொல்லின.

மாணவர்களின் முகங்களில் விழிப்புக் குறிகள். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள முடிந்ததே ஒழிய எதையுமே பேசமுடியாது தவித்தனர்.

பாவம் அவர்கள்... எறும்புகள் இப்படிச் சொல்லியவாறு தமது ஊர்வலத்தைத் தொடர்ந்தன.

– வளவை வளவன் –

## விஞ்ஞானி இராமன் வாழ்வில்...

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி டாக்டர் சி. வி ராமன் ஒரு முறை ஓர் இளம் டாக்டரை (மருத்துவரை)ச் சந்தித்தார். நிறத்தின் தன்மைகளையும், கண்பார்வையின் தன்மைகளையும் பற்றிய தமது மிகவும் நவீனமான ஆராய்ச்சிகளைப் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துக் கூறிய பிறகு டாக்டர் சி. வி ராமன் கூறினார்— "கண்பார்வை சம்பந்தமான பௌதிக அம்சங்களை நான் நன்கு அறிந்து கொண்டுவிட்டேன். ஆனால் உடல் ரீதியாகக் கண்பார்வை பற்றிய விஷயங்களை நான் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. தயவு செய்து உங்கள் வீட்டு முகவரியைத் தெரிவியுங்கள். உங்களுக்கு எப்போது ஓய்வு இருக்கும் என்பதையும் கூறுங்கள். இந்த விஷயம் பற்றித் தங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

அந்த இளம் டாக்டர் கூறினார்—"ஐயா, நீங்கள் உத்தரவிட்டால், போதும் உங்களுக்கு வசதியான நேரத்தில் நான் வரைபடங்களுடன் உங்கள் இல்லத்திற்கு வருகிறேன். எனனுடைய தொலைபேசி என்..." அவரது பேச்சை இடைமறித்து டாக்டர் ராமன, "நண்பரே, கற்பவன் நான், எனவே நான் தான் குருவைத்தேடி வர வேண்டும்" என்றார்.

தொகுப்பு:– க. கனகராசா



### அன்பு

அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பினால் பூரணப்பட்டவன் அல்ல.

—பைபிள்

### புத்தகம்

நல்ல நல்ல புத்தகம்
நாம் படிப்போம் புத்தகம்
கல்வி சிறக்க என்றும்
கை கொடுக்கும் புத்தகம்!

தேசம் உயர உழைத்தோர்
சிறந்த கருத்துத் தந்தவர்
தீரர் அறிஞர் தியாகிகள்
திறமை சொல்லும் புத்தகம்!

வளரும் உலக விஞ்ஞானம்
வாழ்க்கை நெறிகள் மெய்ஞ்ஞானம்
கடந்த கால வரலாற்றுக்
கதைகள் கூறும் புத்தகம்!

இலக்கியச் சுவைகள் மொழிஞானம்
இருள் களையும் பொருள் ஞானம்
பலவும் சுற்றுத் தேறப்
பயனும் நல்ல புத்தகம்!

கண்ணைக் கவரும் வண்ணக்
கருத்து விளக்கப் படங்கள்
சின்னஞ் சிறுவர் எமக்குச்
சிறந்த நண்பன் புத்தகம்!

## சமையல் செய்வோம்



### 'கிறிஸ்மஸ் கேக்'

**தேவையான பொருள்கள்**

சீனி - ½ கிலோ.
மா - ½ கிலோ.
அஸ்ரா - 2 பெரிய பக்கட்
முட்டை - 8
பேக்கிங் பவுடர் - 4 தே.கர.
வனிலா - 2 மே. கரண்டி

**ஐசிங் செய்ய தேவையான பொருள்கள்**

ஐசிங் சீனி - 1 கிலோ
அஸ்ரா - 1½ பக்கட்
வனிலா - 1 மே. கண்டி

**செய்முறை:**

சீனி, அஸ்ரா இரண்டையும் ஒரு பாத்திரத்தில் இட்டு சீனி கரையும் வரை அடிக்கவும். பின் அதற்குள் இரண்டு இரண்டாக முட்டையைப் போட்டு மிருதுவாக வரும் வரைக்கும் அடிக்கவும்.

இறுதியில் மா, பேக்கிங் பவுடர் இரண்டும் ஒன்றாகக் கலந்த கலவையைக் கொஞ்சம் கொஞ்சமாக அடித்த கலவைக்குள் போட்டுக் கலக்கவும்.

மா நன்கு சேர்ந்ததும் வனிலாவையும் போட்டுக் கலக்கவும். கலவையை நீள் சதுர பேக்கிங் தட்டில் வார்த்து நன்கு 'பேக்' செய்து, ஆறியதும் ஐசிங் செய்யத் தயாராக வேண்டும்.

முதலில் 'கேக்' அலங்கரிக்க வேண்டிய பலகையை அழகிய பேப்பர் ஒட்டித் தயாராக வைத்திருக்க வேண்டும். இனிப் படத்தில் காட்டியபடி கேக்கை வெட்டி சிலுவை உருவத்தில் பலகையில அழகாக வையுங்கள்.

பின் அதன் மேல் மஞ்சள் நிறத்தில் கலந்த ஐசிங் கலவையை பூசிக் கத்தியினால் மிருதுவாக்குங்கள்.

விளிம்புகளுக்கு விரும்பிய 'டிசைன் போடர்' வேலைப்பாடு கொடுக்கலாம்.

நடுவில் ஏற்கனவே செய்து வைத்த கிறிஸ்மஸ் இலை, பழங்கள், றோஜா மலர்கள், வேறு சிறிய மலர்கள்கொண்டு படத்தில் காட்டியபடி அலங்கரிக்கலாம்.

கிறிஸ்மஸ் அன்று இந்தச் சிலுவை வடிவிலான கேக்கை செய்து உங்கள் மேசையை அலங்கரித்தால் அதற்குக் கிடைக்கும் வரவேற்பே அலாதிதான்.

அனுப்பியவர்:

திருமதி சி. பிரபாகரன்

### பிஸ்கட்

**தேவையான பொருள்கள்**

கோதுமை மா — ½ கிலோ.
மாஜரீன்—1 பக்கட் (சிறியது)
முட்டை — 2
பேக்கிங் பவுடர் — 2 தே: க.
சீனி — ½ கிலோ
வனிலா அளவாக.

**செய்யும் முறை:**

சீனியை நன்றாக அரைத்து எடுத்து அதனுடன் மாஜரீனைப் போட்டு 'கிறீம்' பதம் வரும் வரைக்கும் அடித்துக் கலக்கவும்

முட்டையை வேறொரு பாத்திரத்தில் போட்டு அடித்துக் வைக்கவும்

பின் மாவுடன் பேக்கிங் பவுடரைப் போட்டு சீனி மாஜரீன் கலவையையும் முட்டை, வனிலா என்பவற்றையும் சேர்த்துப் பதமாகப் பிசைந்து எடுக்கவும்.

கடைசியில் சிறுசிறு உருண்டைகளாக்கி பிஸ்கட் அச்சில் போட்டு 15 நிமிடங்களுக்கு 'பேக்' பண்ணும் அவனில் [Oven] போட்டு எடுக்கவும்.

## பொன்மொழிகளில் பெண்மணிகள்

★ மடிந்துபோன இதயங்களில் உயிர் ஊட்டுபவள் பெண்.
— சுதர்ஸன்

★ ஓர் இல்லத்தை இல்லமாக்க ஒரு பெண்ணால் மட்டுமே முடியும்.
— சீனப்பழமொழி

★ ஆண்களை விடப் பெண்களுக்கு இதயமும் அதிகம், கற்பனையும் அதிகம்.
— லமார்டைன்

★ பூவுலகில் நரகமும் சுவர்க்கமும் பெண்கள் வசமே அடங்கியுள்ளன
— டென்னிசன்

★ தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடம்.
— யாரோ

★ பெண்ணின் மடியில் இறையன்பு வளர்கிறது.
— இக்பால்

தொகுப்பு:
செல்வி
கா. முத்துக்குமாரசாமி

**நங்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இரும்புத்திரை'க்குள் நுழைந்த 'மிக்கி மௌஸ்'

வால்ட் டிஸ்னியின் 'மிக்கி மௌஸ்' இரும்புத் திரை நாடான சோவியத் யூனியனுக்குள் சென்ற மாதம் தான் செல்ல முடிந்தது.

'மிக்கி மௌஸ்' மீது விதிக்கப்பட்ட தடையை மாஸ்கோ அதிகாரிகள் இப்போது தான் நீக்கியுள்ளார்கள்.

வால்ட் டிஸ்னியின் 'அதிசய உலகம்' மீது சோவியத் மக்களுக்கு அலாதி பிரியம்.

1964 இல் சோவியத் தலைவர் நிகிடா குருசேவ் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது வால்ட் டிஸ்னியின் 'அதிசயஉலகத்'துக்குச்செல்ல அவர் விரும்பினார்.

ஆனால் அமெரிக்க அரசு அவருக்குத் தடை விதித்து விட்டது.

மிக்கெயில் கோர்ப்பச்சேவ் கிரெம்ளினின் லகானைப் பிடித்த பின்னர், தாராளக் கொள்கையைத் திறந்த மனதுடன் கடைப்பிடிக்கத் தொடங்கினார்.

அதன் பலன் 'மிக்கி மௌஸ்' இரும்புத்திரைக்குள் நுழையக் கூடியதாயிற்று

அண்மையில் கிரெம்ளினில் 'மிக்கி மௌஸ்' கார்ட்டூன் படம் காட்டப்பட்டது. கோர்ப்பச்சேவின் மனைவி ரெய்ஸாவும் குழந்தைகளுடன் அமர்ந்து இருந்து படத்தை ரசித்தார்.

'மிக்கி மௌஸ்' கார்ட்டூன் படங்களைத் தயாரித்து திரைப்பட உலகில் அழியா இடம் பெற்ற வால்ட் டிஸ்னி பற்றிய விவரங்களைச் சஞ்சீவி வாசகர் திரு தி. தவபாலன் இங்கு தருகிறார்.

**வால்ட் டிஸ்னி**

குழந்தைகளுக்காக சிறுவர் படங்களையும் கார்ட்டூன் படங்களையும் எடுத்து அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியவர் வால்ட் டிஸ்னி. இவர் ஓர் அமெரிக்கர்.

வால்ட் டிஸ்னியின் படம் தியேட்டரில் ஓடுகின்றது என்றால் அங்கு ஒரே மழலைப்பட்டாளமாகத்தான் இருக்கும்.

1923 இல் படங்களைத் தயாரிக்கத் தொடங்கிய இவர் 1980வரை 600க்கு மேற்பட்ட படங்களை தயாரித்தார். இவரது அறிமுகம்தான் நீங்கள் ரி. வியில், கார்ட்டூன் கதைகளில் காணும் மிக்கிமவுஸ் என்ற எலியும், டொனல்ட் டக் என்ற வாத்தும்.

முதன் முதல் கார்ட்டூன் படங்களை எடுத்தவரும் வால்ட்டிஸ்னிதான். இந்தக் கார்ட்டூன் மூலமே நம்மிக்கி, டொனல்ட் ஆகிய நாயகர்கள் அறிமுகமானார்கள்.

இவர் எடுத்த முதலாவது கார்ட்டூன் படம் 'தங்க அழகி' இதனை எடுக்க அவர் வரைந்த படங்கள் 50,000 ஆகும். இப்படம் எடுத்துமுடிக்க ஏழு ஆண்டுகள் எடுத்தது.

இதுதான் உலகின் முதல் கார்ட்டூன் படமாகும்.

தொடர்ந்து சிறுவர்களுக்காகப் படங்களை எடுத்தார். தனது இரு பிள்ளைகளின் ஆசையால் சிறுவர்களுக்காக ஏன் பெரியவர்களுக்காகவும் கூட 'டிஸ்னிலான்ட்' என்ற பொழுதுபோக்கு அதிசய உலகத்தை அமைத்தார். அங்கு எத்தனை அதிசயமான காட்சிகள் உள்ளன!

நீர்மூழ்கிக் கப்பல், சுழலும் றெயின், ஒற்றைத் தண்டவாள றெயின்,மேலும் அளற அதிசய உலகம் எனும் மாயாஜால உலகம், பழைய அமெரிக்கா என்ற கற்கால உலகம், தற்கால உலகம் என்று ஏகப்பட்ட அதிசயங்கள்.

இவ்வுலகம் 60ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. இவ்வுலக அமைவிற்கு உலகத்தலைவர்களிடமிருந்து பாராட்டுகள் குவிந்தன.

உலகில் சிறுவர் பெரியவர் சினிமாவிற்காக அதிக [32] விருதுகள் பெற்றார். இவரது நுரையீரலில் புண் ஏற்பட்டது. அதனால் ஒருபக்க நுரையீரலை இழந்தார்.

இப்படிச் சிறுவர் நினைவில் நீங்கா இடம்பெற்ற வால்ட் டிஸ்னி 1980 டிசம்பர் 15இல் மாரடைப்பால் மரணமானார். ஆனாலும் கவலைப்படாதீர்கள். இன்றும் நீங்கள் அவரது கார்ட்டூன் படங்களைக் கண்டுமகிழலாம். ★

## 'அக்னி நட்சத்திரம்' ஆஸ்கார் விருதுக்கு

'அக்னி நட்சத்திரம்' படம் ஆஸ்கார் விருதுப் போட்டிககு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கமும் தென் இந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கமும் இணைந்து இப்படத்தை அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஆஸ்கார் விருதுப் போட்டிக்கு அனுப்பும்படி இந்தியத் திரைப்பட சம்மேளனத்துக்குச் சிபார்சு செய்து உள்ளன.



கமலஹாசன்

இதனால், இந்தப்படத்துக்கு ஆங்கிலத்தில் 'சப் டைட்டில்' பணி தீவிரமாக நடந்து வருகிறது.

இப்படத்தில் பிரபு, அமலா, கார்த்திக் ஆகியோர் நடித்து உள்ளனர்

மணிரத்னம் படத்தை இயக்கி இருக்கிறார். படத்தைத் தயாரித்தவர் ஜி. வெங்கடேஸ்வரன்.

சென்ற ஆண்டு ஆஸ்கார் பரிசுப் போட்டிக்குக் கமலஹாசன் நடித்த 'நாயகன்' படம் அனுப்பி வைக்கப்பட்டது.

இப்படத்தையும் ஜி. வெங்கடேஸ்வரன் தயாரித்து இருந்தார். மணிரத்னம் இயக்கி இருந்தார். ★

## வெள்ளித் திரையில்

## யேசுநாதர் படத்துக்கு இலங்கையில் தடை

யேசுநாதர் பற்றிய படத்துக்கு இலங்கை அரசு தடைவிதித்துவிட்டது.

'The Last Temptation of Christ' என்ற இப்படத்தை இத்தாலிய டைரக்டர் ஒருவர் தயாரித்தார்.

வெனிஸ் நகரில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் முதலில் இப்படம் திரையிடப்பட்டது.

அன்றில் இருந்து இப்படத்துக்கு உலகநாடுகளில் கிறிஸ்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்காவில் திரையிடப்பட்டபோது தியேட்டர்கள் முன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

பிரான்ஸில் திரையிடப்பட்டபோது சில தியேட்டர்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

ஆனால் அந்த அரசுகள் படம் திரையிடப்படுவதை தடைசெய்யவில்லை இதனால் உலகில் கிறிஸ்தவ மக்கள் மனம் புண்பட்டன.

இந்தியாவில் இனனும் அப்படம் திரையிடப்படவில்லை.

ஆனால் இருநாடுகளும் படத்தைத் திரையிடக் கூடாது என்று தடைசெய்து விட்டன.

யேசுபிரான் மேரி மகதலினுடன் காதல்புரிவதுபோன்ற ஒரு காட்சி படத்தில் இடம் பெற்றுள்ளது. அதனால்தான் படத்துக்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது.

# தமிழகத் தேர்தலில் திரைப்பட நடிக, நடிகைகள்

வருகிற ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் தேர்தல் நடப்பது உறுதியாகிவிட்டது. அரசியல் கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டு தேர்தல் வேலைகளில் இறங்கிவிட்டன.

இந்த முறை அரசியல் தலைவர்களின் தேர்தல் பிரசாரம் படுசூடாக இருக்கும் என்றாலும் இன்னொரு பக்கம் தேர்தல் களத்தில் பிரசாரத்துக்காகத் திரையுலக நட்சத்திரங்கள் பலர் திரளாகக் குதிக்கப் போவதால் 'கலர்ஃபுல்'லாகவும் இருக்கும்!

அவர்களையெல்லாம் 'தேர்தல் பிரசாரப் பயிற்சி' கொடுத்துத் தயார்படுத்துகிற வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இதில் முன்னணியில் இருப்பது தி. மு. கழகம். கலையுலகில் அந்தக் கட்சிக்குச் சமீபகாலமாக நல்ல ஆதரவு இருக்கிறது. கருணாநிதியுடன் பிரபல நட்சத்திரங்களும், டைரக்டர்களும், தயாரிப்பாளர்களும் ஒரே மேடையில் தோன்றித் தங்களின் அபிமானத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்

தவிர பல பெரிய நட்சத்திரங்கள், டைரக்டர்கள் இந்த முறை தி. மு. க.வுக்கு ஆதரவாக உள்ளுக்குள்ளேயே தேர்தல் பணியாற்றப்போவதும் உறுதி!

குறிப்பாக– பாரதிராஜா, ராம நாராயணன், வைரமுத்து, எஸ். ஏ. சந்திரசேகர் போன்றவர்களைச் சொல்லலாம்.

எஸ். ஏ. சந்திரசேகர் தி. மு. க. பிரசாரத்துக்காக ஒரு வீடியோ படமே எடுத்துத் தயாராக வைத்திருக்கிறார்; ராம. நாராயணன் ஒரு சினிமாப் படமே தயாரித்துக் கருணாநிதியிடம் கொடுத்திருக்கிறார்.

பிரசாரக் களத்தில் தி. மு. கவுக்கு ஆதரவாக நடிகை ராதிகாவைக் குதிக்க வைக்கும் முயற்சியும் நடக்கிறது. அதன் விளைவுதான் சமீபகாலமாக அவர் கருணாநிதியுடன் மேடைகளில் தோன்றி பரபரப்பாகப் பேச ஆரம்பித்திருக்கிறார்.

அதுதவிர வழக்கம்போல் டி. ராஜேந்தர், ராதாரவி, எஸ். எஸ். சந்திரன், கருணாநிதி மகன் மு. க. முத்து— இவர்களும் பிரசாரக் களத்தில் இறங்குகிறார்கள்.

அ. தி. மு. க. ஜானகி அணிக்கு ஆதரவாக பாக்கியராஜ், ராஜேஷ், சி ஆர். சரஸ்வதி, தீபன் ஆகியோர் பிரசாரம் செய்வார்கள்.

இது தவிர நடிகை மஞ்சுளா, விஜயகுமாரியும் தேர்தல் களத்தில் கலந்துகொள்ளப்போவதாக ஒரு தகவல்.

ஜெயலலிதா அணியில் அவருடன் ராமராஜன், எஸ். எஸ். ராஜேந்திரன், சுரேஷ், செந்தில் இருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக வைஜந்திமாலாவும், தீபாவும் இருக்கவே இருக்கிறார்கள். கூடவே ஜமுனா, பிரேம்நசீர், நாகேஸ்வரராவ், மாயா, உசிலைமணி, பிரேம் ஆனந்த், ஹாஸ்மோகன், பட அதிபர் ஜீ.வி, முக்தா சீனிவாசன் ஆகியோரும் அணி வகுக்கிறார்கள்.

சிவாஜியின் தமிழக முன்னேற்ற முன்னணியில் அவருடைய மகன்கள் பிரபு, ராம்குமார் மற்றும் மேஜர் சுந்தரராஜன், வி கே ராமசாமி, சௌகார் ஜானகி ஆகியோர் பிரசாரம் செய்கிறார்கள்.

ஜனதா கட்சிக்கு இருக்கும் ஒரே ஆதரவு நடிகர் சோ மட்டும்தான். அவர் பிரசாரம் செய்வார்.

மற்றக் கட்சிகளுக்கு கலையுலகில் யாரும் இல்லை. இதற்கிடையில் நடிகர் ரஜனிகாந்தை காங்கிரஸுக்கு இழுக்கும் முயற்சி பெரிய அளவில் நடந்தது. ஆனால், அவர் 'ப்ளீஸ்'... என்னை மன்னித்துவிடுங்கள், என்று கூறி விட்டார்.

'தேசிய முன்னணி' சார்பில் தி. மு. கவுக்கு ஆதரவாக என். டி ராமராவ் தமிழகம் வந்து பிரசாரத்தில் ஈடுபட இருப்பது ஒரு போனஸ்! (எ-4)

# 'திருப்பம்' தியாகராஜன்




எனக்கு ஓர் அதிசயமான நண்பன் இருந்தான். தியாகராஜன் என்பது அவன் பெயர். இவனோடு நாடகம், சினிமா பார்க்கப் போனாலோ– கதையில் திருப்பம் இல்லை, வசனங்களில் திருப்பம் இல்லை, எதிலும் ஒரு திருப்பம் வேணும் என்பான்.

ஆளின் நடை உடை பாவனையிலும் ஒரு திருப்பமான ஆள் தான். ஒரு நாள் பார்த்தால் வேட்டி, சால்வை சகிதம் தேசிய உடையில் வருவான்– இன்னும் ஒரு நாள் பார்த்தால் - நீளக் காற்சட்டை சேர்ட், கோர்ட், தொப்பி சப்பாத்துடன் வெள்ளைக்காரத் துரைபோல வருவான். சில நாட்களில் கட்டைக் காற்சட்டை சேர்ட் சகிதம் சாதாரணமாகத் தோன்றுவான்.

இவன் எதிலுமே ஒரு திருப்பத்தை விரும்புவதால் அவன் பெயருக்கு முன்னால் ஒரு திருப்பத்தைப்போட்டு ''திருப்பம் தியாகராஜன்'' என்றுதான் அழைப்போம்.

ஒரு நாள் இவன் வாழ்க்கையிலும் ஒரு மபெரும் திருப்பம் ஏற்பட்டு விட்டது. அந்தத் திருப்பத்தை ஓடோடி வந்து எனக்குச் சொன்னான். நான் விருப்பம் இல்லாமலேயே அதைக் கேட்டு வைத்துச் சொன்ன அந்தத் திருப்பத்தின் விளைவு இப்படியா முடியவேண்டும்?

ஒரு நாள் இந்தத் தீனைத் தீன அதாவது திருப்பம் தியாகராஜன் எங்கள் வீட்டுத் தகரப்படலையைத் திறந்தடித்தான்! ''என்னடா நடந்தது...?''– என நான் விழித்த போது...

''ஒரு திருப்பம் மச்சான்... என்னை ஒருத்தி காதலிக்கிறாள்!'' — இதைக் கேட்டதும் என் மனம் புஸ்... எனத் தரை தட்டிய சயிக்கிள் றிம் மாகியது.

இவன் இப்படித்தான். எப்போது என்னைக்கண்டாலும், ''எலை ஒருத்தி வடிவ சப் பார்க்கிறாள். எனை ஒருத்தி கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டுபோறாள்.-என்பான். இந்த இக்கட்டான காலகட்டத்தில்- பெண்களைப்பற்றியும் காதலைப்பற்றியும் சிந்திக்கும் ஓர் ஆள் இவனாகத்தான் இருக்க முடியும்.

நான் இப்படியான இவனின் புழுகு வசனங்களில் பழக்கப்பட்டதால் — 'உன்னைத்தான் தினம் எவளாவது ஒருத்தி பார்க்கிறாள்தானே இதில் என்ன திருப்பம்?'' என இளித்தேன்.

''அங்கேதானே திருப்பமே இருக்கு இவ்வளவு நாளும் என்னைப் பெண்கள் பார்த்தார்களே தவிர சிரிக்கவில்லை. இவள் என்னைக் கண்டால் போதும் சிரி சிரியெனச் சிரிக்கிறாள்! விட்டு விட்டுச் சிரிக்காமல் விடாமலேயே சிரித்துக் கொண்டு போகிறாள். இதைவிட அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பதற்கு வேறு என்ன சாட்சி வேண்டும்?''- என முடித்தான்.

பெண்களின் சிரிப்பு விஷயத்தில் இவனின் திடீர் ஞானத்தை எண்ணி மனதிற்குள் வியந்தேன்.

''எட மச்சான்! பெண்கள் சிரித்தவுடன் அது காதல் சிரிப்புத்தான் என முடிவு கட்டிவிடாதே. சிரிப்பில் பல வகை உண்டு. அதுவும் பெண்களின் சிரிப்புக்கு அர்த்தம் கண்டு பிடிப்பது கஷ்டம். இதில உன் காதலியின் சிரிப்பு எந்த வகை என நான் பார்த்தால் சொல்லி விடுவேன். அதன் பின் தான் உன் காதலைப் பற்றியும் ஒரு முடிவு கட்டவேண்டும்.'' என இழுத்தேன்.

ஏதோ பெண்களின் சிரிப்பு விஷயத்தில் கரை கண்டவன் போல என்னைப்பற்றியும் இவனுக்கு ஒரு சிறு புழுகு விட்டேன்.

''எட நம்பிக்கை கெட்டவனே! நீயே நாளை காலையில் அந்த வாசிகசாலையின் தூண் மறைவில் ஒளிந்து நின்று பார். அது காதல் சிரிப்பா இல்லையா, என்று —!'' எனச் சூளுரைத்து விட்டுச் சென்று விட்டான்.

மறுநாள் விடிந்தது!

நான் அந்த வாசிகசாலைத் தூண்மறைவில் நண்பனின் காதலியின் வருகையையும் சிரிப்பையும் எதிர் பார்த்துக் காலடுக்க நின்றேன் நண்பன் திருப்பம் தியாகராஜன் என் அருகில் சற்றுத் தள்ளி நின்று கொண்டான். அடேயப்பா! இன்று அவனது அலங்காரம்... ராஜபார்ட் ரங்குதுரை தோற்றுப் போ!

''மச்சான்! ஆள் வருகுது கவனமாப்பார்! தலையைக் கிலையைக் காட்டிப் போடாதே...'' — அவன் கிசுகிசுத்தான். நான் உஷாரானேன்.

ஆகா! அவள் வந்து கொண்டிருந்தாள்! அவள் நடை, உடை, இடை, பின்னல் ஜடை கையில் வைத்திருக்கும் குடை... அட... அட... அட நான் அவள் சிரிப்பையல்லவா கவனிக்க வந்தேன்!

உண்மைதான்! அவள் இவனைக் காணும் முன்பே இவனைப் பார்த்து பார்த்து சிரித்துக் கொண்டுதான் வந்தாள் பதிலுக்கு இவனும் குழைந்து குழைந்து சிரித்தான்.

திருப்பம் தியாகராஜனின் திருப்பத்திற்கு மாபெரும் வெற்றி. அந்த இடத்திலேயே இவனின் காதலுக்கு ஒரு முடிவான முடிவுக்கு வந்து விட்டேன் சந்தேகமே இல்லை அது காதல் சிரிப்புத்தான்.

'நம்பிக்கை இல்லாத நரியே! இப்போதாவது என் காதலில் சந்தேகப்படாமல் ஒப்புக் கொண்டாயே! சரிசரி – இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம்?' அந்தக் காதல் இளவரசன் மிக உஷாராக என் தோளில் தட்டியபடியே கேட்டான்.

இவன் எல்லாவற்றிலுமே ஒரு திருப்பத்தை விரும்புவதால் நான் ஒரு திருப்பமான யோசனையைச் சொல்லி வைத்தேன்.

''மச்சான்! ஆள் நல்ல சோஷலான ஆளாக்கிடக்கு. அதனால் நீ நேரடியாகவே போய் வருகிற ஞாயிற்றுக் கிழமை மெட்னி ஷோவுக்குப் போவோமா? எனத் துணிந்து கேள்'' என்று அடித்துக் கூறினேன்.

இந்தத் தீனத்தீன இந்தத் திருப்பமான யோசனைக்குத் தயங்கினாலும் முடிவில் ஒப்புக் கொண்டு,

காதல்! காதல்! காதல்! காதல் போயின் சாதல்! சாதல்!'' — என்ற பாரதியின் வரியை ஒப்புவித்து விட்டு அந்த இடத்திலிருந்து சீட்டி அடித்தபடியே ஒரு சிறு துள்ளல் நடையுடன் அகன்று விட்டான்.

மறுநாள் விடிந்தது.

நாங்கள் நேற்றைய காலை எப்படி எப்படி நின்றோமோ அப்படி அப்படியே ஓர் அங்குலம் கூட மாற்று இல்லாமல் இம்முறையும் நின்று கொண்டோம்.

சிலிப்பர்சத்தம்வரும்முன்னே சிங்காரி வருவாள் பின்னே என்பது போல படக் படக் கென சிலிப்பர்சத்தம் எழுப்ப; குடை என்ற அந்தச் சிறு கூடாரத்தினுள் குறுநடை பயின்று பவனி வந்து கொண்டிருந்தாள் அந்த ஒய்யாரி.

அதே நடை, அதே இடை, அதே ஜடை, அதே குடை, அதே சிரிப்பு — அதே, அதே. நண்பன் ஏதோ குசுகுசுத்தான்! ''துணிந்து கேளடா'' என நான் தூண்டி விட்டேன்.

ஐயய்யோ...... இரண்டே இரண்டு வரி கேட்டதற்காகக் கையில் வைத்திருந்த குடையைச் சுருக்கி... இந்தத் தீனத்தீனவைத் திரும்பத் திருப்ப அடிக்கிறாளே..... இவள் கராட்டி அடி பழகியிருப்பாளோ...... நான் அந்தக் காட்சியைக் கண்டு கல்லானேன். ஓடுவோமா நிற்போம ? என நான் முடிவெடுக்கும் முன் இந்தத் தீனதீன திடீரென அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டான். — அப்படியானால் ...... இவள் ஏன் சிரித்தாள் அவனைப் பார்த்து? என்ற கேள்விக்கு விடையை மறுநாட் காலை அந்த ஊரில் சாடைமாடையாக விசாரித்துப் பார்த்துத் துப்பறிந்த போது ... ஒரு முதியவர் மிக இரக்கப்பட்டுக் கொண்டே கூறியது.

''ஐயோ அந்தப் பொடியன் பாவம்! அவள் காதல் சிரிப்புசிரிக்கவில்லையடா அவள் சிரிப்பே அப்படித்தான் இதாலை அவள் தன் குடைக் கம்பிகளைப் பத்துத் தடவை கள் மாற்றிவிட்டாள்...... ஐயோ அந்தப் பொடியன் பாவம்!'' ★

**- குமார் தனபால் -**

## பொது அறிவுப்போட்டி இல. 17

1. தண்ணீரைக் கடக்க உதவுவது? ... ... ... ... ... ... ... படகு / நீச்சல்
2. இது இல்லாத தீபாவளியா? .. ... ... ... ... ... புத்தாடை / போனஸ்
3. வியாபாரத்துக்கு எது தேவை? ... ... ... ... ... நாணயம் / நம்பிக்கை
4. கடவுளின் வடிவம் என்பார்கள்? ... ... ... ... ... ... ... நாதம் / கீதம்
5. இதற்கும் கொம்பு உண்டாம் ... ... .. ... ... ... ... தேன் / மாடு
6. வானத்தில் தோன்றுவது எது? ... ... ... ... வானவில் / வெண்ணிலா
7. காவியத் தலைவி யார்? ... .. ... ... ... ... ... கண்ணகி / ஜானகி
8. காற்றில் கலந்து இருப்பது ... ... ... ... ... ... ... ... தூசி / கிருமி
9. பறவைகள் வசிப்பது ... ... ... ... ... ... ... ... ... ... காடு / கூடு
10. கூட்டத்தைக் கலைக்க முதலில் பயன்படுத்தப்படுவது எது? ... ... ... ... கண்ணீர்ப்புகை / தடியடி
11. யாரை மதிப்பது இல்லை? ... ... ... ... ... ... ... ... ஏழை / கோழை
12. தண்டு சமையலுக்கு ஆகும் ... ... ... ... ... ... ... கீரை / வாழை

பெயர்:- ..................
விலாசம்:- ........................
..............

பொது அறிவுப்போட்டி இல: 17
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 28.11.88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

### பொது அறிவுப் போட்டி இல. 16
**பரிசு பெற்றோர் விபரம்**

முதலாவது பரிசு:
செல்வி. கங்காதர்சினி, 55/4 வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

இரண்டாவது பரிசு:
இ பத்மராஜா, ஆண்டு 7, பரந்தன் இந்து தமிழ் மகாவித்தியாலயம், பரந்தன்.

மூன்றாவது பரிசு:
சி. சேனாதிபதி, 12 கடையிற் சுவாமிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

**பொது அறிவுப் போட்டி இல: 16**

**சரியான விடைகள்:**

1. ஜாதகம் 2. நாக்கு 3. ஈட்டி 4. கூலி 5. ஜனாதிபதி
6. பீரங்கி 7. துக்கம் 8. விறுவிறுப்பு 9. பாம்பு 10. புறா
11. அம்பிகாபதி 12. திருச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன்புப் பித்து நிலையை உணர்த்திடும் திருவெம்பாவைப் பாடல்கள்

திருவெம்பாவை (திரு எம்பாவை) என்பது தெய்வத்தன்மைவாய்ந்த பாவைப் பாட்டு என்று பொருள் படும். இப்பாடல்களின் இறுதியில் எம்பாவாய் என்ற சொற்றொடர் வருவதால் எம் எம்பாவாய் என்பதே இவ் வகைப்பட்டிற்குப் பெயராயிற்று. இன்னேனை கருதி ஏல் ஓர் என்னும் அசைகளோடு சேர்ந்து ஏலோர் எம்பாவாய் என்று மேற் சொன்ன சொற்றொடர் வருவது பெருவழக்கு பாவை என்பது பராசக்தியைக் குறிப்பதாகும்.

கன்னிப்பெண்கள், மழை சிறந்து நாடு செழிக்கவும் தமக்கு வருங்காலத்தில் நல்ல கணவர் வாய்க்கவும் பராசக்தியை வழிபடும் நோன்பு பழங்காலம் தொட்டு தமிழ் நாட்டில் பயின்று வந்துள்ளது. குளிர்மிகுந்த மார்கழி மாதத்தில் இளம் கன்னியர் அதிகாலையிலே துயிலெழுந்து தம்முடைய தோழியரையும் துயிலெழுப்பிக் கொண்டு நீராடு துறைக்குச் செல்வர். அங்கே நீராடிய பின் ஈரவெண் மணலால் பாவை உருவம் செய்து பராசக்தியை வழிபடுவர். இவ் வழிபாடு பாவை நோன்பு எனப்பட்டது.

மார்கழி மாதத்தில் திருவாதிரைக்கு பத்து நாட்களுக்கு முன் தொடங்கி திருவாதிரையில் முடிவுபெறுமாறு நோற்பது பாவை நோன்பாகும். நீராடப் போகும் கன்னிப் பெண்கள் விளையாட்டாக ஒருவரை ஒருவர் எழுப்பி நகையாடிப் பாடிச்செல்வர்.

**நாயகன் – நாயகி பாவம்**

திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையிலிருந்து திருவண்ணாமலைக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து அங்கே சில நாட்கள் தங்கி இருந்தார். அப்போது மார்கழி மாதம் வந்தது. பாவை நோன்பு நோற்கும் கன்னியர் அதிகாலையிலே பாடிக்கொண்டு தம் தோழியரைத் துயில் எழுப்பிச் செல்வதைக் கண்ட அடிகள் தம்மையும் அக்கன்னியருள் ஒருத்தியாகப் பாவனை செய்து அக்கன்னியர் பாடுவதுபோல அருளிச் செய்த திருப்பாடல்களே திருவெம்பாவையாகும்.

'மாலறியா நான்முகனும் காணமலை' என்பதும 'அண்ணாமலையான் அடிக்கமலம்' என்பதும் இவை திருவண்ணாமலைத் திருத்தலத்திலே திருவாய் மலர்ந்தருளப்பட்டவை என்பதைத் தெளிவுபடுத்தும்.

அகத்துறைப் பக்தி இலக்கியத்தில் அருளாளர்கள் தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் கருதிப் படிப்பரவுவது வழக்கம். இது நாயக நாயகி பாவம் எனப்படும்.

**- பரமேஸ்வரி சிவராமலிங்கம் -**

திருவாதவூரர் தம்மை நாயகியாகப் பாவனை செய்து வந்தமையால் அவர் பெண்மை உள்ளம் பெற்று விளங்கினார். அவர் திருத்தலங்களுக்குச் செல்லும் இடங்களெல்லாம் பெண்கள் கூட்டமாகக் கூடி விளையாட்டயர்வதையும் அவ்விளையாடல்களில் உலகியற் பேறு களை வேண்டிப் பாடுவதையும் கண்டார். உலகியற் பேறு கருதிய பெண்களின் பாடல்களை சிவப்பேறு கருதிய பாடல்களாக உருவாக்கித் தர விரும்பினார். அப்பெண்கள் கூட்டத்திற் சேர்ந்து இறைவன் புகழ்பாடும் பாவனையில் திரு அம்மானை, திரு உந்தியார், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூஞ்சல், அன்னைப் பத்து, திருப்பள்ளி எழுச்சி போன்ற அருமந்த பாடல்களை அருளியுள்ளார்.

**சீரிய தொண்டு**

உலகியல் வாழ்வில் ஈடுபட்டிருந்தலும் சிவநினைவு நெஞ்சில் இருந்தால் உய்தி உண்டாகும் என்ற பேரருளினால் மணிவாசகர் இவ்வரிய பாடல்களைப் பாடியருளினார். இது சிவநெறியை மக்களிடையே பரவச் செய்வதற்கு அடிகள் செய்த சீரிய தொண்டாகும்.

உணர்வு நிலையில் காதல் நிலை உயர்வானது. அஃது அன்பெனும் நிலையில் ஒருவித பக்தியை, பற்றை உண்டாக்கிவிடும். இவ்வகையான நிலையை வேதம் பாவம் என்றும் அதன் உச்ச நிலையை மகாபாவம் என்றும் கூறுகின்றது இம் மகாபாவமே மேலானதும் ம்.

மெய்ப்பாடு. உளப்பாடு, உயிர்ப்பாடு என்னும் மும் முனைப்பாடுகள் மனிதனிற் குடியிருக்கின்றன. இம்மூன்று பாடுகளையும் மகாபாவம் அதன் உச்சநிலையில் பற்றிப் பிடித்துக் கொள்கின்றது. சடும் தவத்திலும் உயர்ந்து மேலாக நிற்பதும் இம்மகா பாவமே என்று கூறுவர்.

**பெருநிலை**

ஏனெனில் தவம் புரிபவன் தான் நாடும் இலட்சியத்தை இன்னும் அடையப் பெருதிருக்கின்றான். அதை அடைவது பற்றிய ஐயப்பாடு இடையிடையே அவனுக்கு வருகிறது. சோர்வுக்கும், ஏமாற்றத்திற்கும் அங்கு இடமுண்டு. மகாபாவமே அன்புக்கு இலக்காக இருக்கும் பரமபுருஷனை அடையப் பெற்றபின் அவனோடு கொண்டுள்ள இணக்கத்தை மேலும் மேலும் ஆழ்ந்ததாக வளர்ப்பதாம். அப்பெருமுயற்சிக்கு அன்பனுடைய உடல், உள உயிர்ப்பாடுகள் சேவை புரிகின்றன. போகத்திற்குச் சேவை செய்யும்போது அவை தேய்ந்து அழிகின்றன. யோகத்திற்குச் சேவை செய்யும் போது அவை புனிதமடைந்து பெருநிலை எய்துகின்றன. இது சித்பவானந்தர் வாக்காகும். இதற்கு அகச்சான்றாகவும் புறச் சான்றாகவும் இலக்கண, இலக்கியமாகவும் அமைவது திருவெம்பாவையின் பதினைந்தாம் பாடல்.

பக்குவ நிலையை அடைய விழையும் ஆன்மாக்களுக்கு இறைவன் தானே வந்து திருவருள் நிலையைக் காட்டி நிற்பான். அவ்வான்மாக்கள் இறைவனை நெருங்க நெருங்க அவரில் சீவ போதம் அழிந்து சிவபோதம் பெற்று ஈடேறுவர். அதுவே பரபோதமாகும் அப்போது அவர் நிலை பித்து நிலை போல் மற்றவருக்குத் தோற்றும் இவ்வனுபவத்தை மணிவாசகர் நன்கு பெற்றவர். இப் பேரன்புப் பித்து நிலையை அவர் திருவெம்பாவைப் பாடல்களில் காட்டியுள்ளார். ★

## மனிதகுல மருத்துவனே நித்தியனே தாலேலோ

ஏழைகளின் வாழ்வினைத் தேடி யேசுநாதா
புவியில் ஏழையாக எளிமையாக வந்தாயோ?
பஞ்சணையில் நீ பிறக்கவில்லை பாமரனென்
நெஞ்சணையில் தூங்கிடவா நித்தியனே தாலேலோ.

பல்லாண்டு பல்லாண்டு பாலைவனம் போலிருந்து
எல்லாமும் இழந்து வரும் தமிழனை வாழவைப்பாய்
வானளந்த திருக்குமரா மனிதகுல மருத்துவனே
தேனமுதத் திருவாயில் தித்திப்புகள் திட்ட வந்தாய்.

பாவச் சேற்றினிலே அலகையின் காற்றினிலே
மூழ்கி நின்று கதி கெட்டுக் கலங்குகின்ற வேளையிலே
மாரியிலே மழை பொழிந்து மக்களினம் வாழவைக்கும்
காரியம் போல் உன் தந்தை காலத்தே அனுப்பி வைத்தார்.

உன்னைப்போல் செல்வனை நான் உலகெங்கும் கண்டதில்லை
என்னைப் போல் ஏழையை நீ எங்கேனும் கண்டதுண்டா
காட்டுவழி போனலும் கள்ளர் பயம் ஆனலும்
கூட்டம் உனைத் தொடரும் கோமகனே தாலேலோ.

அன்பினல் பிறந்தவனே அருமைத் திருமகனே
என் வீட்டுப் பேரொளியை ஏற்ற வந்த திருவிளக்கே!
அமைதியைக் காணது அல்லலுறும் மானிடனின்
பெரும் சுமை நீக்கத் தூவகிடுவாய் சுந்தரனே தாலேலோ.

- அ. நிக்ஸன்

# கடல்மட்டம் ஒரு மீற்றர் உயர்ந்தால் ஐந்து கோடிப் பேர் அகதிகளாவர்!

அகதி என்ற சொல் அன்றடம் பாவிக்கப்பட்டு வருகிறது.

போர்கள் மக்களை அகதிகளாக்கி வருகிறது.

அரசியலும் மக்கள் அகதிகளாக மாறுவதற்கு இன்னெரு காரணம்.

சுற்றுப்புறச் சூழலும் இன்று மக்களை அகதிகளாக மாற்றி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

சுற்றுப்புறச் சூழல் தரம் குறைவதால் உருவாகும் அகதிகளின் எண்ணிக்கையே உலகில் அதிகம் என்று ஆராய்ச்சியாளர் ஜோடி எல். ஜேக்கப்ஸன் கூறுகிறார்.

அமெரிக்காவில் வேர்ல்ட் வாட்ச் இன்ஸ்டிடியூட்டில் இவர் பணி புரிகிறார்.

'சுற்றுப்புறச்சூழல் அகதிகள்' என்ற நூலை எழுதியவர் இவர்.

இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதன் தீமை சுற்றுப்புறச்சூழல் அகதிகள் பெருமளவில் உருவாகக் காரணம்.

உலகின் பல பகுதிகள் மனித வாழ்வுக்கு லாயக்கற்ற இடங்களாக மாறி வருகின்றன.

ஏழை விவசாயிகள் வாழும் மூன்றாம் உலக நாடுகளில் தான் நிலம் மிகப்பெரிய அளவில் பழுதடைந்து வருகிறது.

ஏனைய சுற்றுப்புறச் சூழல் பாதிப்பிலும் பார்க்க விவசாய நிலம் பழுதடைவதால் தான் பெரும்பான்மையான மக்கள் இடம் பெயருகிறார்கள்; அகதிகளாகிறார்கள்.

கைத்தொழில் நச்சுக்கழிவுப் பொருள்களைக் கொட்டுவதால் நீரும் நிலமும் நச்சுத் தன்மையைப் பெறுகின்றன. இதுவும் சுற்றுப்புறச்சூழல் பாதிப்புக்கு இன்னெரு காரணம்.

அடுத்த நூற்றண்டில் பூமி செப்பமடையும் கடலின் நீர் மட்டம் உயரும். இதுவும் மக்கள் குடியிருப்புக்குப் பாதகமாக அமையப் போகிறது.

வளிமண்டலத்தைப் பிரிக்கும் ஓஸோன் லேயர் சூரியனில் இருந்து வெளிப்படும் அல்ட்ரா-வயலட் ஒளிக்கதிர்களின் தாக்கத்தைக் குறைத்து பூமிக்கு அனுப்புகிறது அந்த ஓஸோன் லேயர் இப்போது அழிக்கப்பட்டு வருகிறது.

இதனல் பூமியின் சராசரி வெப்பம் அதிகரிக்கப்போகிறது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

கடலின் நீர் மட்டம் உயராமலே சுற்றுப்புறச் சூழல் மக்கள் இடம்பெயரக் கூடிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கபபட்டிருக்கிறது.

அபாயகரமான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக செர்னேபில் அணுசக்தி நிலயம் போன்றவற்றில் ஏற்பட்ட வெடிவிபத்துக்கள் பெரும்பாலான பிரதேசத்தை மனித வாழ்வுக்கு லாயக்கற்றவையாக்கிவிட்டன.

சில நாடுகளில் நிலம் பாலைவனமாகி வருகிறது. இதனல் சுமார் 5 கோடி மக்கள் தங்கள் அடிப்படை உணவு, மற்றும் எரிபொருள் தேவைகளை சமாளிக்கமுடியாதுள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

1982 - 84 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வரட்சி 24 நாடுகளில் 15 கோடி மக்களை பட்டினியின் விளிம்புக்குக் கொண்டு போனது.

சுற்றுப்புறச் சூழல் அகதிகளை உருவாக்குவதில் பேரழிவுகளும் முக்கிய பங்கு வகிக்கிறது.

மனிதனின் செயல்பாடுகள் புவியியல் தன்மையை மேலும் சீரழிக்கிறது. இதனல் ஏற்படும் மண்சரிவுகள், சூறவளிகள் மற்றும் வெள்ளத்தினல் ஏராளமானேர் கொல்லப்படுகின்றனர்; இடம்பெயர்ந்து அகதிகளகின்றனர்

கடல் நீர் மட்டம் உயரும் போது இன்னும் நிலை மோசமாகப் போகிறது.

சமுத்திரங்களின் நீர்மட்டம் ஒரு மீற்றர் அதிகரிப்பின் உலகின பல நாடுகளில் 5 கோடிக்கு மேற்பட்டோர் சுற்றுப்புறச் சூழல் அகதிகளாக வேண்டிய நிலை ஏற்படலாம்.

இப்போது உலகில் அகதிகளாக இருப்பவர்களின் எண்ணிக்கையிலும பார்க்க இது மூன்று மடங்கு அதிகமாகும்

—டெப்த்நியூஸ்

# பரிணாம தத்துவத்தைக் கண்டுபிடிப்பதில் சார்ள்ஸ் டார்வினின் பங்கு

பீகிள் (Beagle) என்ற பிரிட்டிஷ் கப்பல் 1931 ஆம் ஆண்டில் உலகிலுள்ள பல நாடுகளில் விலங்குகளையும் தாவரங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகப் புறப்பட்டது.

அதில் இயற்கை வல்லுநரான 22 வயது சார்ள்ஸ்டார்வின் என்ற இளம் விஞ்ஞானியும் இருந்தார்.

தான் பார்க்கின்ற விஷயங்களுக்கெல்லாம் ஆதாரமான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தீவிரமான உந்துதல் அவரிடமிருந்தது

தென் அமெரிக்கக் கரையில் இருந்து பல நூறு மைல் தொலைவில் கலபகோஸ் (Galapagos) என்ற ஜனநடமாட்டம் அற்ற தீவுகள் உள்ளன.

அங்கு டார்வின் இயற்கையின் ஓர் ஒப்பற்ற காட்சியகத்தையே கண்டார்.

இராட்சதப்பல்லி இனங்களும், தரை வாழ் ஆமைகளும், பெரிய நண்டுகளும், கடல்சிங்கங்களும் (Sea Lions) அங்கு சுதந்திரமாகத் திரிந்தன.

அதுவரை மனிதர்களைக் காணமல் வாழ்ந்துவிட்டதால், அவை புதிதாக வந்திறங்கிய மனிதர்களைக்கண்டு பயந்தோடவில்லை.

புருக்கள் அச்சமின்றி அவர்களுடைய தோள்களில வந்து அமர்ந்தன

**விலங்குகளில் வித்தியாசம்**

எல்லாத் தீவுகளும ஒரே மாதிரியான தட்பவெட்பநிலையும், நிலத்தன்மையும் பெற்றிருந்த போதிலும் ஒவ்வொரு தீவிலும் உள்ள விலங்குகள் விசேஷமான தனித்தன்மைகளைப் பெற்றிருந்ததைக் கண்டு டார்வின் வியப்படைந்தார்.

ஒவ்வொரு தீவிலும் ஃபிஞ்ச் (Finch) என்ற பறவைகள், புருக்கள், பல்லிகள், ஆமைகள், அறுகாலிப் பூச்சிகள் (Insects), நத்தைகள் இருந்தன. ஆனல் தீவுக்குத்தீவு அவற்றின் சிற்றினங்கள் (Species) வேறுபட்டிருந்தன.

ஒவ்வொரு தீவிலும் உள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிற்றினங்கள் படிப்படியாக மாற்றமடைந்திருக்கலாம். என்ற கருத்து டாரவின் மனதில உதித்தது.

ஐந்தாண்டுகளுக்கு பீகிள் கப்பல் தாஹிட்டி, நியூசிலாந்து, தாஸ்மனியா,



சார்ள்ஸ் டார்வின்

அவுஸ்திரேலியா, அசென்ஷன் தீவுகள், கேப்வேர்டி தீவுகள், அஸோர் தீவுகள் ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்தது.

எல்லா இடங்களிலும் டார்வின் அதேபோன்ற பரிணாம மாற்றங்களைக் கண்டார்.

அவர் இங்கிலாந்துக்குத் திரும்பியதும் தமது கருத்துக்கு ஆதரவான சான்றுகளைத் தேடிப் பல ஆய்வுகளைச் செய்தார்.

புருக்களிலும், நாய்களிலும், ஏன் கோதுமைப்பயிரிலும் கூட வெவ்வேறு சிற்றினங்கள் வாழ்விடத்துக்குத் தகுந்தபடி உருவகியிருப்பதை அவர் கண்டுபிடித்தார்.

ஜனநடமாட்டமில்லாத எட்டாத்தையான தீவுகளில் மட்டுமின்றி நமது கண்ணுக்கு எதிரிலேயே இயற்கையானது பரிணாமமாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது என்று அவர் கண்டார்.

20 ஆண்டுகளுக்கு டார்வின் தமது கருத்துக்களுக்கு ஆதாரம் தேடிப்பிடித்து அவற்றை முழுமையாக்கப் பாடுபட்டார். தமது ஆய்வுகளைப் பற்றியோ, முடிவுகளைப் பற்றியோ அவர் வேறு யாருக்கும் சொல்லவில்லை.

**வாலஸ் கருத்து**

ஆனல் அல்பிரட் ரஸ்ஸல் வாலஸ் (Alfred Russel Wallace) என்ற பிரபலமான உயிரியல் நிபுணருக்கும் அதே போன்ற கருத்து தோன்றியது.

அவர் கிழக்கிந்தியத் தீவுகளில் இருந்து டார்வினுக்கு எழுதிய கடிதத்தில் 'விலங்குகளிலும் பயிர்களிலும் பரிணாம மாற்றம் தொடர்ந்து நிழ்ந்து கொண்டே இருக்கிறது. விலங்குகள் தமது உயிரையும் இனத்தையும் நீடித்திருக்கச் செய்வதற்காக ஓயாமல் போராடிக் கொண்டே இருக்கின்றன.

வாழும் சூழல் உகந்ததாக இருக்கும்போது சிற்றினம் பெருகுகிறது. சூழல் சாதகமாக இல்லாதபோது ஒரு சிற்றினத்தில் உள்ள உயிர்களின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது. உடலமைப்புக்களில் உபயோகமான மாற்றங்கள் அதிகரிக்கின்றன. பயனற்ற அல்லது தீங்கு செய்கிற மாற்றங்கள் குறைந்து கொண்டே போகின்றன மேலான தரமுள்ள சிற்றினங்கள் தொடக்கத்தில் இருந்த தரமற்ற சிற்றினங்களை முழுமையாக அழித்து விடுகின்றன. இயற்கை சின்னச் சின்னப் படிகளாக சிற்றினங்களை அபிவிருத்தி செய்து கொண்டே இருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

'உயிர் வாழ்வதற்கான போராட்டம், சூழ்நிலைக்கு ஏற்ற தகவமைப்பு, சிறுசிறு படிகளான பரிணாம மாற்றம்' ஆகிய சொற்றொடர்கள் டார்வினின் மனத்திலும் உதித்திருந்தன.

அவர் தமது கருத்துக்களை ஆதரிக்க வேறு ஒரு விஞ்ஞானியும் முன்வந்ததைப் பார்த்து மகிழ்ந்தார்.

அந்தக் கருத்துக்கள் அவருக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியவை. எனினும் அவற்றுக்குத் தம் மட்டும் சொந்தம் கொண்டாடாமல் வாலஸின் பெயரையும் சேர்த்துக்கொண்டு கூட்டறிக்கையாகத் தமது கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

(மிகுதி அடுத்த வாரம்)


## விநியோகஸ்தர்கள் தேவை

## கில்ஸ் பூட்ஸ் புறடக்ஸ்

கில்ஸ் பூட்ஸ் புறடக்ஸ் ஸ்தாபனத்தார் அவர்களின் புகழ் பெற்ற மாமிச உணவு தயாரிப்புக்களை பின்வரும் இடங்களில் விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்கள் தேவை

- கொழும்பு
- களுத்துறை
- நுவரெலியா
- கம்பகா மாவட்டம்
- புத்தளம் மாவட்டம்
- யாழ் மாவட்டம்
- திருகோணமலை மாவட்டம்
- மட்டக்களப்பு மாவட்டம்
- அம்பாறை மாவட்டம்
- ஹிங்குருகொடை

பதிவு செய்துகொள்ள விரும்பும் விநியோகஸ்தர்கள் குளிரூட்டும் அறைகளை அல்லது மாமிச உணவுத் தயாரிப்புக்களை சேமித்து வைப்பதற்குப் போதுமான தொகை குளிரூட்டு சாதனப் பெட்டிகளை வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் வங்கி உத்தரவாதம் கொடுக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

விருப்பமுடையவர்கள் தங்களின் வியாபார விபரங்களுடன் ஏழு தினங்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

சந்தைப்படுத்தல் முகாமையாளர்

கில்ஸ் பூட்ஸ் புறடக்ஸ் லிமிட்டெட்

130, கிளெனி வீதி,

கொழும்பு - 2.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாதத்தின் அறிவியல் வடிவமே ராகம்!

நாதம் எங்கும் வியாபித்திருக்கிறது.

நாதத்தை அடிப்படையாகக்கொண்டு ஸ்ருதிகளும் ஸ்வரங்களும் எழுந்திருக்கின்றன.

இவற்றைப் பயன்படுத்தி எழுந்த அறிவியல் வடிவமே இசையாகும்.

ஸ்ருதிகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமானவற்றை ஸ்வரங்களாகத் தேர்ந்தெடுத்து அவற்றின் முறையான கோர்வையை ராகம் என்று கூறுகிறோம்.

இந்திய இசையின் சிகரமே இராகமாகும்.

உயிரினங்கள் யாவும் இராகத்தின் இனிமைக்குக் கட்டுப்பட்டவையே அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு முதிர்ச்சியடைந்த ராகமுறை நமது நாட்டில் வழக்கில் இருந்து வருகிறது என்பது வரலாற்றுச் செய்தி.

மதங்கர் என்ற முனிவரால் இயற்றப்பட்ட பிருஹத்தேசியில்தான் முதன் முதலில் இராகம் என்ற பெயர் கூறப்பட்டிருக்கிறது.

கி. பி ஆறும் நூற்றாண்டைச்சேர்ந்த நரசிம்மவர்ம பல்லவ மன்னனின் அவைப் புலவரான ருத்திராச்சாரியார் என்பவர் இசையில், இராக சம்பந்தமான கல்வெட்டை, இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குடுமியான் மலையில் செதுக்கியுள்ளார்.

அக்காலத்தில் வழக்கில் இருந்த பிரபல இராகங்களில் அதாவது (பிற்காலத்தில்) மேள கர்த்தா என்று கருதப்படும் இராகங்களில் 7வகைக்கு இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது. அக்குறிப்பில் தாய் இராகங்கள், கிளை இராகங்கள் ஆகியவற்றின் இலக்கணம் விரிவாகக் காணக்கிடக்கின்றது.

கி. மு இரண்டாம் நூற்றாண்டின் மகாகவி காளிதாஸனின் காவிய நாடகமான சாகுந்தலத்தில் 'இந்து துஷ்யந்தன் என்ற அரசன் மிகவும் வேகமாகப் பாடப்பட்டு வந்த சாரங்கா என்ற இராகத்தினால் இழுக்கப்பட்டுள்ளான்' என்ற குறிப்பு இருக்கிறது.

இந்த சாரங்கா இராகம் தான் இன்றைய மத்யமாவதி இராகமாகும்.

இதே காளிதாஸனுடைய நூல்களில் ஸ்வரச் சேர்க்கையானது ராகங்களாக்கப்படுகின்றன என்ற உண்மையும் காணக்கிடக்கின்றது.

ஸ்ருதிகள் 22 என்றும் அவற்றில் ஸ்வரங்களின் பிரக்கிருதி விக்ருதி பேதங்கள் 16 என்றும் இவற்றைக் கொண்டு தான் பல்வேறு இராகங்களை, நமது முன்னோர் ஆக்கியுள்ளனர் என்பதும் வரலாற்று உண்மை.

ஸ்வர மேள கலாநிதி இயற்றிய ராமாமாத்தியர் 20 இராகங்களுக்கு இலக்கணமும், தஞ்சையில் சங்கீத சுதா இயற்றிய கோவிந்த தீக்ஷிதர் 15 இராகங்களுக்கு இலக்கணமும், பிறகு இவருடைய மகனான வேங்கட மஹியின் சதுர்தண்டிப் பிரகாசிகா என்ற நூலில் 72 இராக இலக்கணமும் படிப்படியாக விளக்கப்பட்டுள்ளன.

இன்றைய தினம் தென் இந்தியா முழுவதிலும் வழக்கில் இருந்து வருவது வேங்கடமஹியின் முறையே.

வரலாற்று நாயகர்களைக் கவிகள் வாய்விட்டுப்பாடி வர்ணிக்கையில்தான் ராகங்களில் சாஹித்தியங்கள் இடம் பெற்றன என்றும் விளக்கப்பட்டிருக்கின்றது.

தத்திலர், நாரதர் என்ற இரு ராகமேதைகளின் இராக விளக்கம், ராகஸாகரம் என்ற நூலில் ஸரஸ்வதி மஹால் நூலகத்தில் இருக்கிறது.

தென்னாட்டிலச கர்நாடக சங்கீதம் என்று கூறப்பட்டு வருகிறது.

அக்காலத்தில் ஆந்திர, தமிழ்ப் பிரதேசங்கள் கர்நாடக தேசம் என்று அழைக்கப்பட்டது.

கி பி. 1116 முதல் 1127 வரை அந்த நாட்டை ஆண்டு வந்த சாளுக்கிய மன்னனான சோமதேவர மல்லன் இசை நாட்டியத்தில் சிறந்த மேதை.

இவன் காலம் முதல் தான் நமது நாட்டு இசைக்குக் "காநாடக சங்கீதம்" என்று பெயர் வழங்கலாயிற்று. இது சம்பந்தமான வரலாற்றுச் செப்பேடுகளும் இருக்கின்றன.

முதன் முதலாக சங்கீதத்தில் சாஹித்தியங்களை இயற்றியதைப் பற்றிய விவரத்தை கி பி. 1097 முதல் 1147 வரை மிதிலையில் அரசாண்ட நான்னிய தேவர் கூறியிருக்கிறார். அவரது நூல் பரத வார்த்திகம் எனப்பெயரியது. நான்னிய தேவர் 140 இராகங்களின் இலக்கணம் கூறியிருக்கிறார். இவரது விளக்கத்திற்கு முன்பிருந்த நூலதிகாரிகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்,

சுமார் கி. பி. பதினொன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் வசித்த ஜயதேவர் கீத கோவிந்தம் என்ற இசை சாஹித்தியங்களை இயற்றியுள்ளார்.

இவற்றுக்குத் திருமலை ராஜன் பட்டினம் ராமுடு பாகவதர் என்பவர் தென்னாட்டு இராகங்களை அமைத்துள்ளார்.

இதை அஷ்டபதி என்று கூறுவர். இதைப் பின்பற்றி ராமஷ்டபதி, சிவாஷ்டபதி முதலிய இசை சாஹித்தியங்களும் எழுந்திருக்கின்றன. இசை, பக்தி, மொழி கருத்து முதலியனவற்றைக்கொண்டு ஜயதேவரை ஆதி சாஹித்ய கர்த்தாக்களில் முதன்மை பெற்றவர் என்றும் கூறலாம்.

ஆந்திரப் பகுதியில் சுமார் 15 ஆவது நூற்றாண்டில் வாழ்ந்த தல்லபாக்கம் அன்னமாச்சாரியார் என்பவர் தான் முதன்முதலில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகளைக்கொண்ட இசை சஹித்ய முறையை சங்கீர்த்தனு என்ற பாடல்கள் மூலம் ஆக்கியிருக்கிறார்.

இவரைப் பின்பற்றி பிற்காலத்தில் திபாகராஜர் சாஹித்தியங்களை இயற்றி இருக்கிறார்.

கர்நாடக சங்கீத பிதாமகரான புரந்தரதாஸர் அநேக இராகங்களில் பாடல்களை இயற்றி இருக்கிறார்.

இவைதான் இன்று நாம் அழைக்கும் கீர்த்தனங்களாகும்.

15 ஆவது நூற்றாண்டில் பத்ராசலத்தில் வசித்து வந்த கோபன்னா என்ற ராமதாஸர் நூற்றுக்கணக்கான இராகங்களில் ஆயிரக்கணக்கான கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிசை நல்லூரில் அய்யாவாள் என்ற ஸ்ரீதர வெங்கடேசர், காமகோடி பீடாதிபதியாகிய போதேந்திர ஸத்குரு ஸ்வாமி, சதாசிவ பிரம்மம் முதலிய மும்மூர்த்திகள் இசை சாஹித்ய உலகிற்கு ஆற்றிய சேவை அளவிட முடியாதது

இம்மூவர்தான் கீர்த்தனை பத்ததியைப் பிரபலப்படுத்தியவர்கள். இவர்களைப் பின்பற்றியே பிற்காலத்திய மும்மணிகளாகிய தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் முதலியவர்கள் கீர்த்தனங்களை இயற்றியுள்ளனர்.

நமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆபிரர்கள், காம்பேஜர்கள், மாளவர்கள்: பைரவர்கள், ஸௌவீரர்கள், புளிந்தர்கள் போன்றவர்களின் வரலாற்றுக் குறிப்புகளில் இருந்து அவர்களிடம் இருந்து நமக்கு ஏராளமான இராகங்கள் கிடைத்திருக்கின்றன.

ஸௌவீரர்கள் வேடர்களாவர். அவர்களிடமிருந்து ஸாவேரி, அஸாவேரி, சுத்த ஸாவேரி, கஸாஸாவேரி, சாரங்காபோன்ற இராகங்கள் பிற்காலத்தில் சாஸ்திரீய சங்கீதத்தில் பிரதானமான இடம் பெற்றிருக்கின்றன.

மாளவரிடமிருந்து மாளவ கௌளம் போன்ற இராகங்களும்,

ஆபிரர்களிடம் இருந்து ஆபேரி, ஆபோகி, ஆபீரு முதலிய ராகங்களும், காம்போஜர்களிடமிருந்து காம்போதி வகையாறு இராகங்களும் பைரவர்களிடமிருந்து பைரவி ராக வகைகளும் பிற்காலத்தல் முதிர்ந்த சங்கீதத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

இராகங்களுக்கு உரிய தேவதைகளும் கோள்களும் கிரகங்களும் இசைநூல்களில் வகுக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக பரமசிவனை காலை வேளையில் துயிலெழுப்ப கின்னரர்கள் மங்களகௌசிக இராகம் பாடினார்கள் என்று காளிதாஸனின் குமார சம்பவம் என்ற காவியம் கூறுகிறது.

மத்தியான வேளையில் சாரங்கா (மத்தியமாவதி) என்ற இராகம் மழையைப் பெய்வித்தது என்பதும் வரலாற்றுச் செய்தி. தியாகராஜர் அமிர்தவாஹினி இராகம் பாடி இறந்தவனை உயிர்ப்பித்தார் என்று கூறப்படுகிறது.

நமது இசை, இனிமை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டது. இந்த இனிமைக்கு முக்கிய காரணம் நமது இராக முறையே இராகம் பாடுவதில் பூரண இனிமையை வெளிப்படுத்துவதில் முதலிடம் பெற்றுள்ளது தலை சிறந்த பாணியாகும்.

ஒரு மனிதனிடம் உள்ள பண்பை அவனது பாணி எடுத்துக் காட்டும்.

ஒரு நாட்டுக் கல்வி, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றின் மேன்மையை அந்த நாட்டுச் சங்கீதம் எடுத்துக் காட்டும் என்பது பன்னாட்டு இசையாராய்ச்சியாளர்களின் முடிவு.

பாணி, பாவம், பண்பு முதலிய குணநலன்கள் நிறைந்த இராகமுறை இணையற்றதாகும்,

இசை மனிதனைப் பண்படுத்தும். இறைவனை ஈர்ப்பிக்கும் அவனிடம் மனிதனைச் சேர்ப்பிக்கும்.

வாழ்க நம் இசை மரபு; வளர்க நம் இசைப் பண்பு.

★

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் இசை நடனக் காலாண்டு சஞ்சிகை 'பல்லவி'

இதன் அக்டோபர் இதழ் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ளது.

பல்லவி' யின் நிர்வாக ஆசிரியர் வழக்கறிஞர் டபிள்யூ. எஸ் செந்தில்நாதன் அர்வகள்.

இவ்விதழில் பிரசுரமான ராகத்தின் வரலாறுபற்றி திரு. எஸ், ஆர். குப்புசாமி எழுதிய கட்டுரையை இங்கு மறுபிரசுரஞ் செய்கின்றோம்.

---

புரட்சித் தலைவரின் முதலாவது நினைவு தினம் இன்று

# மீண்டும் எம்.ஜி. ஆர். ஆட்சி தமிழகத்தில் ஏற்படுமா?



மீண்டும் எம். ஜி. ஆர் ஆட்சி வருமா?

இக்கேள்விக்கு மத்தியிலே எம். ஜி ஆரின் முதலாவது நினைவு தினம் இன்று வந்திருக்கிறது.

ஓரணியாக, வெளிப்பார்வைக்காவது, காட்சியளித்த அவரின் இரத்தத்தின் இரத்தங்கள் இரண்டு அணிகளாகின.

போதாததிற்கு நால்வர்கள் சேர்ந்து மூன்றாவது அணியைத் தொடங்கினர்.

நால்வரில் ஒருவர் பழைய அணிக்குத் திரும்ப மூன்றாவது அணி என்ற பெயருக்கு ஏற்ப அந்த அணியில் மூன்று பேரே மிஞ்சினர்.

இதன் மத்தியிலே எம். ஜி. ஆரின் இரட்டை இலைச் சின்னம் எந்த அணிக்கும் இல்லை என்று அறிவிக்கப்பட்டு விட்டது.

## ஜா, ஜெ அணிகள்

அ. தி. மு க ஜா, ஜெ என்று அணிகளாகப் பிரிய எதிர்க்கட்சிகள் ஜே, ஜே என்று கோஷங்களை எழுப்பத் தொடங்கின.

அ. தி. மு. க இரண்டுபட்டால்...... இந்த எண்ணம் ஏனைய எதிர்க்கட்சிகளுககு ஏற்பட்டது.

இரண்டு அணிகளில், பலம் பெருந்தியதுடன் சேர்ந்து கூட்டு வைத்துத் தேர்தலில் போட்டியிடுவது என்ற நிலைப்பாட்டை இந்திரா காங்கிரஸ் முன்னர் எடுத்து இருந்தது உண்மையே.

எம். ஜி. ஆரின் மூச்சு இருந்த வரை தான் அவரின் செல்வாக்கு அதற்குப் பின்னர் அவரின் பெயரைச் சொல்லும் பேச்சுக்குச் செல்வாக்கு இல்லை — இந்த அபிப்பிராயம் தான் இப்போது காங்கிரஸ் மட்டத்தில் மேலோங்கி நிற்கிறது.

எம். ஜி. ஆரின் ஆட்சியைக் கொண்டுவரத் துணைபுரிய உதவுபவர்களுடன் கூட்டு'— என்ற நிலைப்பாட்டைத்தான் ஜானகி அணியும், ஜெயலலிதா அணியும் கடைப்பிடித்துவருகின்றன.

காமராஜர் ஆட்சியைக் கொண்டுவர உதவுபவர்களுடன் கூட்டு என்ற நிலைப்பாட்டையே இந்திரா காங்கிரஸ் கடைப்பிடித்துவந்தது.

## முதலமைச்சர் பதவி

உண்மையில் எம். ஜி ஆர் ஆட்சியும், காமராஜர் ஆட்சியும் வருவதற்கல்ல முதலமைச்சர் பதவியை பெறுவதற்காகவே இக்கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டிருக்கின்றன என்பது தமிழ் நாட்டுமக்களுக்கு புரியமல் இல்லை.

## தமிழக அரசியல் நிலைப்பாடு

இச்சூழ்நிலையில் தமிழக அரசியல் தேர்தல் நிலவரத்தைப் பார்ப்போம்

எப்படியும் இந்திரா காங்கிரஸுடன் கூட்டுவைப்பது என்று பிடிவாதம் பிடித்த ஜெயலலிதா அணி இன்று உதிரிக் கட்சிகளான உழைப்பாளர் கட்சி, குடியரசுக்கட்சி ஆகியவற்றுடன் கூட்டு வைத்து போட்டியிடப் போகிறது.

## ஜானகி அணி

ஜானகி அணியும் இதே நிலையில்தான் உள்ளது.

முன்னாள் அமைச்சர் இராஜாராமை புதுடில்லி அனுப்பி இந்திரா காங்கிரஸுடன் பேரம்பேசியது சரிவரவில்லை.

புதிதாக துவக்கப்பட்ட சிவாஜிகணேசனின் கட்சியுடன் அணி சேர்ந்துள்ளது.

234 தொகுதிகளில் 50இல் சிவாஜி கட்சி போட்டியிடப் போகிறது.

## காங்கிரஸ் அணி

தி. மு. கவின் தோழமைக் கட்சியான முஸ்லிம் லீக்கை இந்திரா காங்கிரஸ் உடைத்தது.

அதனால் அது இரண்டு அணிகளாகிவிட்டன. ஒன்று சமது அணி. மற்றது லத்திப் அணி.

சமது அணி இந்திரா காங்கிரஸுடன் கூட்டு.

எஞ்சியிருக்கும் உதிரிக்கட்சியான அம்பேத்கார் கட்சியும், இந்திரா காங்கிரஸுடன் சேர்ந்துள்ளது;

அமைச்சரவையில் என்றைக்கும் இரண்டாம் இடம் தான் என்று அண்ணா காலம் முதல் எம் ஜி. ஆர். காலம் வரை 'புழ்' பெற்றவர் நெடுஞ்செழியன்.

அவரின் 'மூவர்' அணியும் நிபந்தனையின்றி இந்திரா காங்கிரஸுடன் சேருவோம் என்று கூறிவிட்டது.

## தி. மு. க. அணி

தி. மு. க. அணியில் ஏழு ஆண்டுகளாக இருந்து வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது.

5 தொகுதிகளை தி. மு. க. கொடுத்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

ஆக தி. மு. க. கூட்டணியில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாவில் ஒரு பிரிவு முஸ்லிம் லீக்கில் லத்திப் அணி ஆகியன தான் உள்ளன.

## ஜனவரி 21

நான்கு பிரதான அணிகள் இம்முறை தமிழ் நாட்டுத் தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

- ★ தி. மு. க. அணி
- ★ அ.தி.மு.க. ஜா அணி.
- ★ அ.தி மு க. ஜெ அணி.
- ★ இந்திரா காங்கிரஸ் அணி.

கலைஞர் கருணாநிதி களம் பல கண்டவர். போராட்டக் களத்தில் இருந்து தேர்தல் களம்வரை அவர் புகழ் பேசும்

தேர்தல் களத்தில் புரிந்த சாதனைக்காக தங்கமோதிரத்தை அவருக்கு அளித்து அண்ணா கௌரவித்தார்.

போராட்டக்களத்தில் [illegible] கொடுத்து ரயில் போராட்டம் நடத்தினர்.

ஆனால் எம். ஜி. ஆரின் தனிப்பட்ட புழின் முன்னால் கலைஞரின் 'களம்' கண்ட புகழ் பிரகாசிக்காமல் 11 ஆண்டுகளாக 'அரசியல் இருளில்' மறைந்திருந்தார்.

எம். ஜி. ஆரின் மறைவு கலைஞரை மூடியிருந்த இருள் திரையை நீக்குமா? நீக்காதா? என்பது ஜனவரி 21 இல் தெரிந்துவிடும்.

இச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் கலைஞருக்கு என்றுமே அந்தகாரம்தான்.

## புதிய முகங்கள்

திரையுலகுக்குப் பழைய முகங்கள் என்றாலும் அரசியல் உலகுக்கு ஜானகியும் ஜெயலலிதாவும் புதிய முகங்கள் தான்.

'மந்திரகுமாரி'யில் நடித்திருந்தாலும் மந்திரிகளுக்கு முதல்வராகவரும் பேறு ஜானகிக்கு கிடைக்குமா?

'ஆயிரத்தில் ஒருவனு'டன் நடித்ததினால் 'ஆயிரத்தில் ஒருத்தி ஆகும் வாய்ப்பு ஜெயலலிதாவுக்குக் கிடைத்துவிடுமா ?

ஜனவரி 21 இல் எல்லாம் தெரிந்துவிடும்

எம் ஜி. ஆரைக் காப்பாற்றியவர் இந்திரா காங்கிரஸையும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் தான் மூபனார் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார் என்று ஒரு தகவல்.

அண்ணன் சக்ரபாணி மகள் லீலாவதி. அவரின் சிறுநீரகங்களில் ஒன்றுதான் அமெரிக்காவில் வைத்து எம். ஜி. ஆருக்குப் பொருத்தப்பட்டது.

அதனால தான் 1984 செப்டம்பர் முதல் 1987 டிசம்பர் 24 வரை எம். ஜி. ஆர் உயிருடனிருந்தார்.

எம். ஜி. ஆர் மறைந்த பின்னர் ஜெயலலிதா லீலாவதியைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டார்.

[illegible] பிரிந்து சென்ற போது அவருடன் லீலாவதியும் சென்றார்.

நால்வரில் ஒருவர் திருநாவுக்கரசு ஜெயலலிதா அணிக்குத் திரும்பிய போது லீலாவதி ஜெயலலிதா வீட்டுக்குச் சென்றார்.

ஆனால் ஜெயலலிதா லீலாவதியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவமானப்படுத்தி விட்டார். லீலவதி மீண்டும் நால்வர் அணிக்கு சென்று விட்டார்.

## மேடையேறும் லீலாவதி

'என் சித்தப்பாவின் பெயரை வைத்து ஜானகியும் ஜெயலலிதவும் அரசியல் நடத்துகிறார்கள். இவர்களின் வண்டவாளங்களை மேடைகளில் ஏறிபகிரங்கப்படுத்தப் போகிறேன்' —என்று ஆத்திரத்தில் அறிக்கைவிட்டார் லீலவதி.

'எந்த மேடையில் ஏறப் போகிறார்?' —என்று ஜா, ஜெ அணிகள் யோசித்தன.

'நெடுஞ்செழியன் உத்தரவிட்டால் தேர்தலிலும் போட்டியிடுவேன்'— இப்படி லீலாவதி கூறப்போய் எந்த மேடையில் ஏறப்போகிறார் என்பது வெளியாகிவிட்டது.

இந்திரா காங்கிரஸ் மேடைதான் அது என்பது சொல்லியா புரியவேண்டும்.

நிபந்தனையற்ற ஆதரவு இந்திரா காங்கிரஸுக்குஎன்று நாவலர் கூறிவிட்டாரே!

ஆகவே 1984 இல் எம். ஜி ஆரை சிறுநீரகம் தானம் பண்ணிக் காப்பாற்றியவர்

1989 ஜனவரி 21 இல் இந்திரா காங்கிரஸைக் காப்பாற்றிவிடுவாரா?

ஒன்று நிச்சயமாகிவிட்டது. எம் .ஜி. ஆரின் பெயரைச் சொல்லி தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் இரண்டு பெண்கள் அல்ல மூன்று பெண்கள் வாக்குக் கேட்கிறார்கள்.


எம். ஜி. ஆருக்கு உயிர் கொடுத்தவர் யார்?

இக்கேள்வி தேர்தல் மேடைகளில் எழுப்போகிறது.

★

---

## சொற்சிலம்பம்



போட்டி இல. 92

சொற்சிலம்பம் இல: 92
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ......................................................
விலாசம்: ......................................................
......................................................

இங்கே வெட்டுக

### முடிவு திகதி: 4 - 1 - 1989

**இடமிருந்து வலம்:**

1 புறப்பொருள் 3. மிருகம் 7. புல் 9. குளிர்ச்சி 11. தர்மராஜன் 12 ஒழுங்குமுறை 14. ரவி 15. இது இருந்தால் பயமில்லை 16. காக்கும் கடவுள் 17 விழி 18. சூரியன் பாதை குழம்பியுள்ளது 19. இனம் 20. மந்திரம் மாறியுள்ளது.

**மேலிருந்து கீழ்:**

1. நல்வினை 2. முறுக்குதல் 4. முனிவர் 5. கண்ணன் 12. வேளாண்மை 13. பெண் 14 மரம் 16 உயிரினும் பெரியது 17. மானினம் – ஒரு சொல் குறைந்துள்ளது.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

### சொற்சிலம்பம் இல. 91 சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விசித்திரம் 5. கரி 6. ஏர் 7. அவச்சாவு 8. கண்டம் 9 தரு 10. அணில் 11. சத்தம் 13. அவதி 14. பித்தம் 16 வில 17. பாகை.

**மேலிருந்து கீழ்**

1 விகடகவி 2. சிரி 3. திரவம் 4. ஈர் 6. ஏவுதல் 7. அடர்த்தி 10. அம்பிகை 11. சவலை 12. ஓம் 13. அவி 15. தலை.

### சொற்சிலம்பம் இல. 91 பரிசு பெற்றவர் விபரம் வருமாறு

முதலாவது பரிசு:
திரு கே. இராஜகோபால், 'பொன்மனை' தொல்புரம், சுளிபுரம்.

இரண்டாவது பரிசு:
திருமதி ரஞ்சி குமாரதாசன், 'ரஞ்சி இல்லம்' கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மூன்றாவது பரிசு:
தி. வல்லிபுரம், 'பிருந்தாவனம்' ஆத்தியடி, பருத்தித்துறை..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேம்பு
"இயற்கை அன்னை தந்த வரப்பிரசாதம் வேம்பு"
நுளம்புக்கடியின் தொல்லைகளை அகற்றிட
'நீம் சுகாதார தூபம்'
உபயோகியுங்கள்.
ஒரு பைக்கற் ரூபா. மட்டுமே!
— மில்க்வைற் யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி சஞ்சிகை

24-12-1988 சனிக்கிழமை

"எவன் சிறு குழந்தையைப் போலப் பணிவுடையவனே அவனே தேவலோகத்தில் பெரியவனாக மதிக்கப் பெறுவான்"
- கிறிஸ்து நாதர்
அனைவருக்கும்
எமது நத்தார் பண்டிகை வாழ்த்துக்கள் உரித்தாகுக.
நற்பணி செய்திட தங்கள் ஆதரவை வேண்டி நிற்கும்
"மில்க்வைற்"

## அமெரிக்கா - பி. எல். ஓ. உறவு மூலம்
# மத்திய கிழக்கு பிரச்சினையில் திருப்பம்
### சர்வதேச மாநாட்டுக்கான பாதை திறக்கப்படுகிறது

வட ஆபிரிக்க நகரான ரூனிஸில் அமெரிக்காவுக்கும் பலஸ்தீன விடுதலைஸ்தாபனத்துக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாகி உள்ளன.

ரூனிஸில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அமெரிக்கா சார்பாகப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ளார்.

40 வருடகால மத்தியகிழக்குப் பிரச்சினையில் ஒரு புதிய திருப்பமாக இது கருதப்படுகிறது.

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான சர்வதேச மாநாட்டுக்கான பாதை திறக்கப்பட்டு வருவதாக இந்தச் சந்திப்புக் குறித்து அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**ஜெனிவாவில்**

இந்தச் சந்திப்புக்கு அடிகோலியது இம்மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. பொதுச்சபைக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற செய்தியாளர் மாநாடும்தான்.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸீர் அரபாத் இந்தச் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டி இருந்தார்.

முதல் தடவையாக இஸ்ரவேல் என்ற ஒரு நாடு இருப்பதை செய்தியாளர் மாநாட்டில் ஏற்றுக்கொண்டிருந்தார்.

அத்துடன் பயங்கரவாதத்தையும் கண்டித்திருந்தார்.

ஐ. நா. 242 ஆம் 338 ஆம் இலக்க தீர்மானத்தை ஏற்பதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு வெளிவந்தவுடன் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்துக்கு அமெரிக்கா பச்சைக்கொடி காட்டியது. அதாவது பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்துக்கு விதித்திருந்த தடையை அமெரிக்கா நீக்கியது. தடை நீங்கியதை அடுத்தே ரூனிஸில் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

இந்தத் தடை 14 வருடங்களுக்கு முன்னர் போடப்பட்டது. 1974 ஆம் ஆண்டு பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தலைவர்யாஸீர்அரபாத் நியூயோர்க் வந்து ஐ. நா. பொதுச் சபையில உரை ஆற்றினார். அவர் நியூயோர்க் வர அப்போது அமெரிக்கா அனுமதி அளித்திருந்தது.

ஆனால் அன்று அவர் ஆற்றிய உரை சர்வதேச பயங்கரவாதத்தைத் தூண்டுவதாக இருந்தது. அமெரிக்கச் சீற்றத்துக்கு இதுவே காரணம் ஆகும்.

1975 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹென்றி கிசிஞ்சர் இஸ்ரவேலுக்குச் சென்று இஸ்ரவேல பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனை அடுத்தே அமெரிக்கா பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்துக்கு தடை விதித்திருந்தது.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்துடன் இனியும் அமெரிக்கா தொடர்புகளை ஏற்படுத்துவதென்றால் அது தனது மூன்று கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா அப்போது நிபந்தனை விதித்திருந்தது.

1 இஸ்ரவேல் என்ற ஒரு நாடு இருப்பதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

2. பயங்கரவாதத்தைக் கண்டிக்க வேண்டும்.

3 ஐ.நா. 242 ஆம் 338 இலக்கத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதாக இம்மாதம் யாஸீர் அரபாத் ஜெனீவா செய்தியாளர் மாநாட்டில் அறிவித்திருந்தார்.

**கொந்தளிக்கும் எரிமலை**

சர்வதேச அரங்கில் கொந்தளிக்கும் எரிமலையாக இருந்து வரும் பகுதிகளில் மத்திய கிழக்கும் ஒன்றாகும்.

இஸ்ரவேலின் கட்டுப்பாட்டில் உள்ள ஜோர்தானின் மேற்குக் கரையிலும காஸாவிலும் கடந்த ஒருவருட காலமாக நடைபெறும் கிளர்ச்சிகளே இந்த விவகாரம் மீண்டும் சர்வதேச அரங்குக்கு வர ஏதுவாக இருந்தன.

இந்த இரு இஸ்ரவேல் ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலும் வாழும் அரபுக்கள் ஆயுதம் எதுவுமின்றி பெரும் தியாகப் போராட்டம் ஒன்றை நடத்தி வருகிறார்கள்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஜோர்தானின் மேற்குக்கரை மீதான ஆதிபத்தியஉரிமையை ஜோர்தான் விட்டுக்கொடுத்தது.

கடந்த மாதம் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தால் பலஸ்தீனமாக இதுபிரகடனம் செய்யப்பட்டது

இந்த நடவடிக்கைகளால் இந்த இரு ஆக்கிரமிப்புப் பிரதேசங்கள் தொடர்பான முழுப்பொறுப்பும் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்திடமே விடப்பட்டுவிட்டது

**பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்**

பலஸ்தீனம் முன்பு பிரிட்டனின் ஆட்சியின்கீழ் இருந்து வந்தது.

பிரிட்டனின் கீழ் அந்தநாடு வந்தபோது பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 90 சதவீதமாக இருந்தது.

பின்பு 1948 ஆம் ஆண்டு டேவிட் பென்குரியன் பலஸ்தீனத்துக்குப் பதிலாக இஸ்ரவேல் என்ற ஒரு நாட்டைப் பிரகடனம் செய்தார்.

அப்போது அங்கு பலஸ்தீனர்கள் 70 சத வீதமாகவும் யூதர்கள் 30 சத வீதமாகவும் இருந்தனர். 6 சத வீதமான நிலப்பரப்பே யூதர்களுக்குச் சொந்தமாக இருந்தது.

1948 இல் பிரிட்டன் யூதர்களிடம் ஆட்சியை விட்டுச் சென்றபோது யூதர்கள் வசம் நவீன ஆயுதங்களையும் விட்டுச் சென்றது.

1948 ஆம் ஆண்டு இஸ்ரவேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் முதலாவது சண்டை மூண்டபோது இஸ்ரவேலில் இருந்த பலஸ்தீனர்களில் 7 லட்சம் பேர்வரை வெளியேறினர். இஸ்ரவேலில் உள்ள சுமார் 400 பலஸ்தீன கிராமங்கள் யூதப் படையினரால் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் அப்போது கொல்லப்பட்டனர்.

பின்பு 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற 6 நாள் யுத்தத்தில் இஸ்ரவேல் எகிப்துக்குச் சொந்தமான சினாய், காஸா ஆகியவற்றையும் ஜோர்தானுக்குச் சொந்தமான ஜோர்தானின் மேற்குக்கரையையும் சிரியாவுக்குச் சொந்தமான கோலன் குன்றுகளையும் கைப்பற்றியது.

1979 இல் காம்ப்டேவிட் ஒப்பந்தத்தின் பிரகாரம் சினாய் எகிப்திடம் கையளிக்கப்பட்டது. இஸ்ரவேலின் வசம் தொடர்ந்து இருந்து வந்த ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலுமே தற்போது பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தால் பலஸ்தீன அரசு பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள இஸ்ரவேலிலேயே பலஸ்தீனம் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் நீண்ட காலமாகக் கோரிவந்தது.

தற்போது ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் அது பலஸ்தீன ராஜ்யம் ஒன்றைப் பிரகடனம செய்திருப்பதே புதிய சூழ்நிலை ஒன்று உருவாக அடித்தளமாக அமைந்தது. ★



## விடுதலை தருவீர் பிதாவே!

மன்னிப்பால் உலகம் உய்ய
மானிட வடிவந் தாங்கி
கன்னித்தாய் கையில் சேர்ந்தே
கருவினில் திருவாய் வந்தீர்
உன்னிப்பாய் உலகை நோக்கி
உண்மையை உரைத்து வைத்தீர்
மன்னிப்பாய் மனத்தால் என்றே
மாநிலம் போற்றச் சொன்னீர்!

திருவினில் திருவாய் வந்தீர்
தீனரின் தேனாய் வந்தீர்
கருவினில் கருவாய் வந்தீர்
கன்னிடை மணியாய் வந்தீர்
உருவினில் ஒளியாய் வந்தீர்
உத்தம வடிவாய் வந்தீர்
குருவினில் குருவாய் வந்தீர்
குவலயம் உய்ய வந்தீர்!

நேயமார் உள்ளங் கொண்டே
நேசமாய் வாழ்வீர் என்றீர்
தேயமார் மக்கள் எல்லாம்
தெளிவுடன் வாழ்வீர் என்றீர்
ஆயமார் சபைகள் தன்னுல்
அகிலமே வாழும் என்றீர்
தூயவோர் சிலுவை தாங்கி
தூயராய் துளிர்த்தீர் தேவே!

மானிட ஜென்மம் இன்று
மனத்துயர் தீர்ப்பார் இன்றி
கானிடை நீரே யென்ன
கருத்தினை இழந்து நின்றார்
ஊனிடை உயிரைக் காக்க
உறுவகை தெரியா தந்தோ
வானிடை கைகள் நீட்டி
வடிக்கின்றார் கண்ணீர் அன்றோ!

மண்ணிடை வாழும் நாங்கள்
மனிதரிற் கடையர் ஆனோம்
புண்ணிடை எரியை ஏற்ற
புழுவெனத் துடித்தோ மன்றோ
கண்ணிடை பார்வை போக்கும்
சயவரால் குருடர் ஆனோம்
விண்ணிடை வடிவம் காட்டி
விடுதலை தருவீர் பிதாவே!

— சிங்கையாழியான் —

# 1992 ஒலிம்பிக் போட்டிக்கு
## பலஸ்தீனம் அழைக்கப்படுமா?

1992 இல் ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனா நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்ற அண்மையில் பிரகடனஞ் செய்யப்பட்ட சுதந்திர பலஸ்தீன நாடு விண்ணப்பிக்க இருக்கிறது.

இத்தகவலை லண்டன் டைம்ஸ் நாளிதழ் வெளியிட்டிருக்கிறது.

அல்ஜியர்ஸில் அண்மையில் நடந்த பலஸ்தீன தேசிய சபை, சுதந்திர பலஸ்தீன நாடு ஒன்றை பிரகடனஞ் செய்துள்ளது தெரிந்ததே.

புதிய நாடு தனக்கு என ஒலிம்பிக் கமிட்டி ஒன்றை அமைக்கவுள்ளது.

அந்தக் கமிட்டிக்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் அங்கீகாரமும் பெறப்படும்.

இப்படி பலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர் இப்ராஹிம் அபுலொக்ஹோட் தெரிவித்தார்.

பலஸ்தீனியரின் இம்முயற்சிக்கு எதிர்ப்பு இருக்கும் என்று சொல்லப்படுகின்றது.

1972 இல் மியூனிச் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட 11 இஸ்ரவேல் விளையாட்டு வீரர்களை பலஸ்தீன கொரில்லாக்கள் கொலை செய்த சம்பவம் இநத எதிர்ப்புக்குக் காரணமாகக் காட்டப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. ★

## புற்றுநோயுடன் போராடி வெற்றிகண்ட கிரிக்கெட் வீரர்

புற்றுநோயுடன் போராடி வெற்றியீட்டிய ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் வீரர் சைமன் ஒடொனில் மீண்டும் முதலாம் தரக் கிரிக்கெட் விளையாடத் தொடங்கியிருக்கிறார்.

ஆஸ்திரேலியாவின் விக்டோரிய மாநில அணிக்கப்டனாக அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

1987 இல் உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்காக இந்திய, பாகிஸ்தான் பயணங்களை மேற்கொண்ட சமயம் இவர் நோய்வாய்ப்பட்டார்.

அவரின் நெஞ்சில் புற்று நோய் பிடித்திருக்க வைத்திய நிபுணர்கள் கண்டனர். அதன் பின்னர் அவர் ஓராண்டு காலம் கிரிக்கெட்டே விளையாடவில்லை.

புற்றுநோயுடன் போராடி வெற்றிகண்டார்.

இம்மாதம் முதல் வாரம் தொடக்கம் மீண்டும் கிரிக்கெட் விளையாடத் தொடங்கியிருக்கிறார். ★

# விளையாட்டுத் துறை

## துணுக்கு

பிரெட் ஸ்பொவோத் என்பவர் ஒரு சனிஷ்டதரப் போட்டி ஒன்றில் கலந்து கொள்வதற்காக 1881 இல் 400 மைல்களைக் குதிரையில் பயணம் செய்தார். அவர் அப்போட்டியில் சகல விக்கட்டுக்களையும் (20 விக்கட்டுகள்) போல்ட் முறையில் கைப்பற்றி ஒரு சாதனை படைத்தார். ★

## இங்கிலாந்து அணியை
### பாகிஸ்தானும் பகிஷ்கரிக்கிறது

மூன்று நாடுகள் பங்கு பற்றும் ஒருநாள் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் இருந்து பாகிஸ்தான் விலகிக்கொண்டது.

இச்சுற்றுப்போட்டி வருகிற மார்ச் மாதம் 4 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நியூஸிலாந்தில் நடைபெற இருக்கிறது.

இப்போட்டியில் நியூஸிலாந்தும் இங்கிலாந்தும் பங்கு பற்றவுள்ளன.

இங்கிலாந்து அணியில் நிறவேற்றுமை காட்டிவரும் தென் ஆபிரிக்காவுக்கு விளையாடச் சென்ற வீரர்கள் சேர்க்கப்பட்டதை ஆட்சேபித்தே பாகிஸ்தான் விலகிக்கொண்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதே வேளை —

வருகிறமாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் பாகிஸ்தான் நியூஸிலாந்து கிரிக்கெட் சுற்றுலா திட்டமிட்டபடி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

வெலிங்டனில் நியூஸிலாந்தை எதிர்த்து பாகிஸ்தான் 3 டெஸ்ட் போட்டிகள் மற்றும் மூன்று முதல்தர போட்டிகளிலும் கலந்து கொள்ள உள்ளது. ★

## துணுக்கு

சுனில் கவஸ்கார் நேர்த்தியான துடுப்பாட்ட நுட்பம் பெற்றவர்.

மிகத் திறமையாகப் பந்தைத் தாக்கியே விளையாடுபவர் கோடர் கிறினிச்



ஆட்டம் இழப்பதற்கான சந்தர்ப்பங்களைக் கொடுக்காதவர் ஜியோவ் போய் கொட்.

இக் காரணங்களுக்காக இவர்களுக்குப் பந்து வீசுவதைத் தான் விரும்பவில்லை என்று பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர் இம்ரான் கான் கூறினார்.

★ ★ ★

ஒரு கிரிக்கெட் துடுப்புடனேயே நித்திரைக்குப் போவாராம் ஆஸ்திரேலிய வீரர் ஜிவோவ் மாஸ். ★

## சீனாவில் 11 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி

பதினோராவது ஆசிய விளையாட்டுப்போட்டி 1990 ஆம் ஆண்டில் சீனா, பீகிங் நகரில் நடைபெறவுள்ளது.

இதில் 27 வகையான விளையாட்டுக்கள் இடம்பெறும்.

அவை வருமாறு;

உடற்பயிற்சி; [illegible] பாட்மின்டன், கூடைப்பந்து, சைக்கிள் பந்தயம், ஜிம்னாஸ்டிக், சரப்பந்து, ஹாக்கி, ஜூடோ,

வாள்வீச்சு, துப்பாக்கி சுடுதல்; நீச்சல்; டேபிள் டென்னிஸ்; பளு தூக்குதல்; குத்துச் சண்டை, கால்பந்து;

மல்யுத்தம், 3 வகை படகுப் பந்தயம்,

கபடி, மென்பந்து, வுசூ; [illegible] பந்தயங்கள் புதிதாக இந்த ஆசியப்போட்டியில் அறிமுகப் படுத்தப்படுகின்றன. ★

# வாசகர் தராசு

**அரிய மூலகை**

'சஞ்சீவி' யின் ஒவ்வொரு பக்கமும் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அரிய மூலிகை.

—நயினையூர் சிவம்

**பாராட்டுக்கள்**

பெரியோர் முதல் சிறுவர் வரை படிப்பதன் மூலம் பயனடையச் செய்யும் வார சஞ்சீவிக்கு வாழ்த்துக்கள்.

சிறு தலையங்கங்களின் மூலம் பெரிய ஆக்கங்களைத் தந்து உதவும் சஞ்சீவிக்கு பாராட்டுக்கள்

யாழ்ப்பாணம் சிவா - ராஜ்,

**பயன்தரும் தகவல்கள்**

சஞ்சீவி என்பது நான்கு எழுத்து. அது பல்லாயிரம் வாசகர்களுக்கு பயன் தரும் தகவல்களை வழங்கி வருகிறது. பல்லாண்டு சஞ்சீவி நிலைத்து நிற்கட்டும்.

- சண். மகேஸ், சுன்னாகம்

**வரப்பிரசாதம்**

சனிக்கிழமை சாப்பிட மறந்தாலும் சஞ்சீவியை வாசிக்க மறப்பதில்லை.

என்னைப் போன்று தமிழ் மொழியை ஒரு பாடமாக உயர்தர வகுப்பில் எடுக்கும் மாணவருக்கு சஞ்சீவி ஒரு வரப்பிரசாதம்.

சஞ்சீவியில் வரும் அழியா இலக்கிய படைப்புக்களைக் கண்டு இன்புறுகிறோம்:

—என். ஆர். ரஞ்ஜனி
இணுவில் கிழக்கு

**அறிவுக் களஞ்சியம்**

சஞ்சீவி சஞ்சிகை வார இதழில் அனைத்து விடயதானங்களும் யதார்த்தமானதும் நல்ல படிப்பினையூட்டும் அம்சங்கள் நிறைந்த அறிவுக் களஞ்சியமாகவும் மிளிர்கிறது.

—நாகமணி
மகேந்திரலிங்கம்
சங்கானை

## வைரக்கல்

சாக்கடையில் இருந்து வாயு வெளியேறுகிறது.

அதனைப் பயன படுத்தி வைரக்கற்களைத் தயாரிக்க முடியும் என்று அமெரிக்கக் கடற்படை ஆய்வுநிலைய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இதன் மூலம் கழிவுப் பொருள்களை வர்த்தகப் பொருளாக மாற்றிப் பயனுள்ளதாக ஆக்கப் படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கான சோதனைகள் நடத்தப்பட்டு அதில் அவர்கள் வெற்றியும் பெற்றனர். இந்த வைரக்கற்கள் மிகவும் சிறியதாகவும், சுத்தமற்றதாகவும் உள்ளதால் நகைகள் செய்யப் பயன்படுத்த முடியாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org